www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka


பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஜூன் 06-12,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 312

## ஜனாதிபதி சந்திரிகாமீது பாரதீய ஜனதா சந்தேகம்!



வெளிவராத தகவல்கள்



வன்னியில் பாசறைகள்

மாதுரி கொடுத்த மறக்க முடியாத பரிசு

கொழும்பில் வெடித்த குண்டு



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அரசு கோரும் உதவி

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

உலகெங்கும்
சுற்றுலா சென்று
புலிகளுக்கு எதிரான
பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்
அமைச்சர் கதிர்காமர்!

எங்கு போனாலும்
புலிகளைத் தடை செய்யுமாறும்,
ஆயுத கடத்தலை தடுக்குமாறும்
அமைச்சர் அவர்கள்
கோரி வருகிறார்கள்!

அமைச்சர் ஒருவரே
நேரில் கோரும்போது
சம்பிரதாயமான பதில்களை
இராஜதந்திர நட்பு கருதி
அந்தந்த நாட்டு அரசுகள்
கூறி அனுப்புகின்றன!

'புலிகளுக்கு
உதவ மாட்டோம்' என்று
அவை கூறுவதை
வெளியுலகில் தமது அரசுக்கான
அமோக ஆதரவாக
வெளிநாட்டமைச்சு
வியாக்கியானப்படுத்துகிறது!

இத்தகைய பிரசாரங்கள்
வெளிநாட்டமைச்சருக்கும்
விலாசமாக இருக்கலாம்!
ஆனால் சமாதான
வெளிச்சத்தை ஏற்படுத்துமா?

விடுதலைப் புலிகளிடம்
இன்றுள்ள
நீண்டதூர கனரக ஆயுதங்கள்
வெளிநாடுகளில்
வாங்கிக் குவிக்கப்பட்டவையல்ல!

கள முனைகளில்
அரச துருப்புக்களிடமிருந்து
கைப்பற்றப்பட்டவைதான்
புலிகளிடமுள்ளன!

குறிப்பாக நீண்டதூர
ஆட்டிலெறிகள் எதனையும்
இதுவரை புலிகள்
வெளியிலிருந்து பெறவில்லை!
படையினரிடமிருந்தே
கைப்பற்றியிருக்கின்றனர்!

மோட்டார்களுக்கான
பெருந்தொகையான
ஷெல்களைக்கூட
அரச செலவில்தான்
புலிகள் பெற்றுக்கொண்டனர்!

சைபிரஸிலிருந்து
அரச துருப்புக்களுக்கு
ஷெல்களுடன் வந்த கப்பல்
புலிகள் வசம் சென்றமை
யாவரும் அறிந்ததுதான்!

மொத்தத்தில்
விடுதலைப் புலிகளுக்கான
பிரதான ஆயுத விநியோகம்
அரச துருப்புக்களிடமிருந்தே
கிடைத்து வருகிறது!

எனவே, புலிகளுக்கு
ஆயுதங்கள் கிடைக்காது
தடுப்பதற்கு
அமைச்சர் அவர்கள்
உலகம் சுற்றுவானேன்?

அரச துருப்புக்களிடம்தான்
முதலில் தனது கோரிக்கையை
முன்வைத்திருக்க வேண்டும்!

மாம்பழத்தை பெறுவதற்கு
உலகம் சுற்றிவந்த
முருகனின் கதை
புராணத்தில் உள்ளது!

முருகன் உலகை
சுற்றிவர முன்பாக,
தாய்தந்தையை வலம்வந்து
மாம்பழத்தை தட்டிக் கொண்டார்
விநாயகர்.

உலகெங்கும் சுற்றி
'ஆயுதக் கடத்தலை' தடுக்குமாறு
பிரசாரம் செய்கிறார் கதிர்காமர்!

ஆனால், புலிகளோ
இருந்த இடத்திலேயே
ஆயுதம் பெற்றுவிடுகிறார்கள்!

'ஆயுதக் கடத்தல் என்ற
புரளியைக் கிளப்பி,
புலிகளுக்கு ஆதரவில்லை
என்ற உறுதிமொழியை
உலக நாடுகளிடமிருந்து
பெறுவதுதான் ஆட்சியாளரது
உண்மையான உத்தி!

அதற்கு தோதாகவே
கடந்த சிலமாதங்களாக
புலிகளது கப்பல் கதைகளை
தாராளமாக உலாவவிட்டனர்!

இதுபற்றி முரசு
முன்னறிந்து கூறியதை
அமைச்சரது உலகவலம்
உறுதி செய்துள்ளது!

இப்படி தலையைச் சுற்றி
மூக்கைத் தொடுவதைவிட
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை
கோருவதே உத்தமம்!

வெளிநாட்டமைச்சரது
ஒவ்வொரு பயணத்திலும்
இலங்கை இனப்பிரச்சனை
உலகுக்கு எடுத்து செல்லப்படுகிறது!

வெளிநாட்டமைச்சர் விடுக்கும்
கோரிக்கைகளும்
இங்குள்ள பிரச்சனையில்
உலக உதவியைக்
கோருவதாகவே இருக்கிறது!

உலக உதவி வேண்டாமெனில்
கடலில் நின்று
புலிகளது ஆயுதக் கடத்தலை
அரச படைகள் தடுக்கவேண்டும்.
அதனை விடுத்து-
உலக நாடுகளிடம்
ஏன் புகார் செய்ய வேண்டும்?

தமக்கு சாதகமான
காரியங்களுக்கு உலக உதவியை
எதிர்பார்த்து நிற்கும் அரசு
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை
மட்டும் மறுதலிப்பானேன்?
அப்போது மட்டும்
இது உள்நாட்டுப் பிரச்சனை
என்று கூறுவானேன்?

சிந்திக்க வேண்டிய
கேள்விகள்தானே!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## பக்தி

கடவுள்மீது உண்டாகின்ற உள்ள நெகிழ்ச்சிக்குப் பெயர் பக்தியாகும். தைலதாரை போன்று மனம் சிதறாது தெய்வத்தின் பால் சென்றுகொண்டிருப்பது பக்தி எனப்படும். பக்தியின் ஆரம்ப நிலையில் கிரியைகள் இடம்பெறுகின்றன. கிரியைகள் பக்தியை வளர்ப்பதற்குப் பயன்படுகின்றன. பக்தியின் முதிர்ந்த நிலைக்கு பிரேமை பக்தி என்று பெயர். பிரேமை பக்தியில் பக்தன் தன்னை முழுவதும் பகவானிடம் ஒப்படைத்து விடுகிறான். பக்தி ஒன்றுக்கே பகவான் கட்டுப்படுகிறார். கலியுகத்திற்குப் பக்திமார்க்கமே எளியமார்க்கம் ஆகும். பக்தியில் ஞானமும் கலந்திருக்கவேண்டும். ஞானமில்லாத பக்தி மூட பக்தியாகும்.

பக்தி என்பது நான் என்ற அகந்தையோ, எல்லாம் என்னால் முடியும் என்ற அகங்காரமோ இல்லாது இருக்க வேண்டும். பக்தி ஒருவனுடைய வாழ்வை மேம்படுத்தும் முக்கியமான அம்சமாகும். ஒரு மனிதனின் வாழ்க்கையில் முக்கியமாக இடம்பெறும் அம்சங்கள் ஞானம், கர்மா இரண்டுமாகும். பக்தி இல்லாவிட்டால் அவை பயன் தரமாட்டா.

அன்பு நித்தியவடிவு பெறும்போது அது பக்தியாக மாறுகிறது. அதையே நாம் ஆண்டவனுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம். நம்மையும் இறைவனையும் இணைக்கும் உன்னதமான பற்று பக்தியாகும். பக்திமூலமே நாம் எளிதில் மோட்சம் அடைய முடியும்.

தொகுப்பு: திருமதி சி. பாலாம்பிகை, மெல்புர, சிலாபம்.

# ஆன்மீகம்



## நேர்ச்சை என்றால் என்ன?

ஒருவருக்கு ஏதாவது வியாதி, அல்லது சிரமம் ஏற்பட்டு, இவற்றில் வெற்றி கிடைக்கவும், அல்லது ஒரு நல்ல காரியம் நடைபெறுவதற்கும் அல்லாஹ்விற்காக நேர்ச்சை செய்யலாம். அதன் முறையாவது, "இன்ன வியாதி சுகமாகிவிட்டால் அல்லது இன்ன சிரமம் நீங்கி விட்டால் இன்னதைச் செய்வேன!" என்று நிய்யத்து வைத்து வாயால் மொழிய வேண்டும்.

கீழ்கண்டவற்றை நேர்ச்சை செய்யலாம். அல்லாஹ்வின் பாதையில் தப்லீக்கில் செல்வதாக,நோன்பு நோற்பதாக, ஸதகா கொடுப்பதாக, இன்ன பெரியார்களுக்கு நன்மையைச் சேர்க்கும் பொருட்டு குர்ஆன் ஓதி ஏழைகளுக்கு உணவு கொடுப்பதாக, நபில் தொழுவதாக, ஏழைகளுக்கு இன்ன உதவி செய்வதாக நேர்ச்சை செய்யலாம்.

தனக்கு எந்த அளவுக்கு செயல்படுத்த முடியுமோ அந்த அளவு எண்ணிக்கையையும் நிய்யத்து வைக்க வேண்டும். தான் நாடிய காரியம் நிறைவேறியவுடன் எதை நேர்ச்சை செய்தோமோ அதை உடனடியாக நிறைவேற்றுவது வாஜிபு. தான் நேர்ச்சை செய்ததை நிறைவேற்ற அது சமயம் சக்தி இல்லாவிட்டால் சக்தி வந்ததும் நிறைவேற்ற வேண்டும். தான் நேர்ச்சையை நிறைவேற்றுவதாக நிய்யத்து செய்திருந்தால் அதைத் தானே நிறைவேற்ற வேண்டும். தமக்காகவும் அல்லது பிறருக்காகவும் ஒருவர் நேர்ச்சை செய்யலாம்.

தொகுப்பு: வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-6.

## கவிதைப் போட்டி இல. 309



### பரிசுக்குரிய கவிதை

### யார் தடுப்பது?

பொங்கி அழுகின்ற
மகனே! உன்
நெஞ்சில் வெடிக்கிறது
வெறுப்பு,
கண்ணில் பொரிகிறது
நெருப்பு! நீ
அள்ளி சிரித்து துள்ளி
எழுவதை-எவர்
அங்கு தடுப்பது? உன்
பிஞ்சு வயிற்றுக்கு
உணவினை
யார் அங்கு மறிப்பது?

ச. இன்பராஜன்-பிரதானவீதி,
தேற்றாத்தீவு-01.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### பசிக்கொடுமை

அம்மா பசிக்குது...
அழுகை வருகுது...
அகதி நிவாரணம்
அரைவயிறும் காணாது!

த. அருணேந்திரன்-
அமிர்தகளி, மட்டக்களப்பு.

### யார் வருவார்?

போர் தாயின் மடியினிலே
பூத்திட்ட பூ மகனே...!
பார் அழுத போரினிலே
ஊர் அழுது உறங்கிவிட,
நீ அழுத குரல் கேட்டு
யார் வந்து தேற்றிடுவார்?

தெ. லோஜனா- கொழும்பு-15.

### குற்றம்

அன்னை-தந்தை
அண்ணா-அக்கா
அம்மம்மா-ஆச்சி
அத்தனை உறவுகளும்
ஐயகோ மண்ணுக்குள்!

நா.ஜெயபாலன்-பிபிலை.

### ஓயாத அழுகை

சோகம் விளைத்த
யுத்த பூமியிலே
சொந்தம் கொண்டாடும்
ஒரேயொரு சுதந்திரம்
அழுகை!

ந. சிதம்பரம்- பதுளை.

### கஞ்சி தந்தாலே போதும்!

பால்வேண்டாம், பழம்வேண்டாம்
பஞ்சாமிர்தமும் வேண்டாம்
என் வயிற்றுப் பசிதீர்க்க
கஞ்சி தந்தாலே போதும்!

எஸ். வேணுஜா- மட்/கல்லடி, உப்போடை.

### அகதிப்பிள்ளை

முல்லைக்குத் தேர் கொடுத்த
உயர் தமிழர் பரம்பரையில்
பிள்ளைக்குப் பால் கொடுக்க
யாரும் இல்லையோ?

மயில்வாகனம் கேகயராஜா- மட்டக்களப்பு

### உதயத்தைத் தேடி'

உறவுகள் புதைகுழிக்குள்
உதவிட யாருமில்லை!
உறங்காமல் அழுகின்றான்
உதயத்தைத் தேடி!

கே. அரசேஸ்வரன்- யாழ்ப்பாணம்.

### காலம் வரும்

செம்மணியில் அம்மா என்றா
தேம்பித் தேம்பி அழுகின்றாய்?
வெம்பும் நிலை மாறும் அந்த
வேளை வரும் தெம்படைவாய்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### கோ(கா)லம்

அழுதழுது பெற்றவளும்
அழவிட்டுச் சென்றுவிட்டாள்
அனாதையாய் வந்துவிட்டால்
அழுகைதான் ஆறுதலோ??

கிரிசாந்தி சந்திரகலா-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.312



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 12.06.1999

முகவரி: 'கவிதைப் போட்டி இல.312'
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

இனிய முரசே!

மே.09-15, 1999 இதழ் படித்தேன். இதயத்திற்கு இதம் அளித்தது. கா.அருளானந்தின், 'ஒன்று இரண்டு தொண்ணூத்தெட்டில் அவரைச் சந்தித்தேன்', வி.கே.வி.யின் 'புதிர்', நிகிலனின் 'கடைசியாசை'. செ. குணரத்தினத்தின் 'நீதான் எங்கள் கடைசிப்பிள்ளை' ஆகிய கதைகள் நல்ல படிப்பினையூட்டின. செ. குணரத்தினத்தின் நீதான் எங்கள் கடைசிப்பிள்ளை மனதை நெகிழ வைத்தது. ஜெயகாந்தனின் கதையைப் பிரசுரிப்பதற்கு மிக்க நன்றி. இருந்த போதிலும் வாரியாரின் ஒருவரிப் பதில்களில் 'யாருக்குத் துக்கமில்லை?' என்பதற்கு கோபமுற்றவனுக்கு! எனப்பதில் தரப்பட்டிருந்தது. இது சரியா? கோபமுற்றவனுக்கா? அல்லது கோபமற்றவனுக்கா? எது சரி?

மு. துரைசாமி, சதர்லேண்ட் எல்ல.

*'கோபமற்றவனுக்கு என்பதே சரி'. தவறுக்கு வருந்துகிறோம்.*

ஆர்.





என் அன்பின் முரசே!

வாரம் தோறும் உன் வரவை எதிர்பார்த்து காத்திருப்பேன்.

உன்னைக் கண்டவுடன் மிக்க மகிழ்ச்சி கொள்வேன். ராஜேஸ்குமார் தரும் ஒவ்வொன்றும் இனிமையும் சுவையும் தருகின்றன. 'உடைந்த இரவுகள்', 'முள் நிலவு', 'டிசம்பர் பௌர்ணமி' எல்லாமே எம்மை மகிழ்வித்துச் சென்றன. அடுத்த தொடரிலும் மகிழ்ச்சியைத் தருகிறார். ராஜேஸ்குமாருக்கு வாழ்த்துக்கள்!

ஈஸ்வரன், வவுனியா.

'கோகிலா என்ன செய்துவிட்டாள்' முரசில் இடம்பெறுவதையிட்டு மகிழ்ச்சி. குடும்ப உறவுகள், ஆண்,பெண் உறவுச் சிக்கலை- மாறிவரும் காலத்திற்கு ஏற்ப அணுகுதல், முக்கியமானது. ஜெயகாந்தனின் 'கோகிலா'வை முரசு தருவதற்கு பாராட்டுக்கள்.

இ. ஜெயபாலன், ஆரையம்பதி.

### பெண்ணை மதியாமை

ஜெயகாந்தனின் தொடர் எம்மைக் கவர்ந்துள்ளது. மன உணர்வுகளை நன்கு சொல்லாட்சியுடன் வெளிப்படுத்துகிறார். பெண்ணை மதிக்காத ஆணுக்கு தாழ்வு மனப்பான்மையும் இருக்கும். மதித்தால் நம்மை மிஞ்சிவிடுவாளோ என்று பயப்படுவார்கள். அனந்தராமனுக்கும் தன்னை நம்பாத தாழ்வுச் சிக்கல் இருக்கிறது.

இ. செல்வராணி, கொழும்பு-09.

இனிய முரசுக்கு,

முரசே உன்னை வாழ்த்த என்னிடம் வார்த்தை இல்லை. காரணம் நான் கவிஞனில்லை. உன் பிறப்பு முதல் இன்றுவரை வாரம் தவறாமல் உன்னைப் படிக்கும் இலட்சக்கணக்கான அபிமானிகளில் நானும் ஒருத்தி.

ஆசிரியர் கருத்து முதல் அனைத்து விடயங்களும் அபூர்வம். பக்க சார்பற்ற முறையில் நீ தரும் அரசியல் அலசல் என்னை மிகவும் கவர்ந்தது. உன்னில் உள்ள அனைத்து அம்சங்களும் மிகவும் பயன் உள்ளவை என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர்.

எச்.எல். நிஹானா,
புப்போகம.

### தமிழ்நாட்டுக் கவிஞனின் தமிழின உணர்வு

கடல் பிரிந்து வாழ்ந்தாலும் கவிஞர் வைரமுத்துவின் தமிழின உணர்வு- அத்தனை கோடி தமிழர்களையும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிட வைத்ததே! வைகாசி 23-29 தினமுரசு வாரமலரில் வெளியான செய்தி அத்தகையது.

ஆம் கவிஞர் வைரமுத்துவின் வைரவரி முழக்கம் கனடா வாழ் தமிழர்களை மட்டுமன்றி, உலகின் கண் வாழ் கோடான கோடி தமிழர்களையுமே உணர்வால் வலுவூட்டிவிட்டது.

அதாவது கனடா போன்ற வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் முழுத் தமிழர்களுக்குமே விதைந்துரைத்தாற்போல்- வாழ வந்த இடத்தில் கற்றுக் கொண்டது வயிற்றுமொழி என்பதையே கூறியதோடு- நீங்கள் வந்த இடத்தில் சொந்த மொழியை மறந்துவிடாதீர்கள் என முழக்கமிட்டார்.

இதற்கும் மேலாக தான் வாழும் காலத்தில் ஒரு கவிஞனின் கடமையையும் சுட்டிக்காட்டியதன் மூலம் சகல கவிஞர்களையும் விழிப்புற வைத்துள்ளார்.

ஆறுமுகம்-தங்கரத்தினம், காரைநகர்.

### பறிபோகும் தாயகம்

*சேது சமுத்திரத் திட்டமது*
*செவ்வனவே பூர்த்தியானால்*
*செயல் இழக்கும்*
*காலி, கொழும்பு, துறைகள்*
*கப்பலோடும் காங்கேசன் துறையுடே*

*காங்கேசன் துறையதை கைப்பற்றியே*
*கப்பல் கட்டவே கங்கணம் கட்டி*
*காணி சுவீகரிப்பில்*
*கால்வைத்தும் உள்ளனர்.*

*மாதகல், மயிலிட்டி,*
*மாவிட்டபுரத்துடன்*
*கட்டுவன், பொன்னாலை,*
*குரும்பசிட்டியென*
*வாழ்ந்த நம்மவர்*
*வசாவிளானையும்*
*இளவாலை மண்ணுடன்*
*தெல்லிப்பழையையும்*
*இழப்பதோ?*

இ. விஜயகுமார், ஹொங்கொங்.

*'இராணுவத்தில் தமிழ் இளைஞர்கள் சேர்ப்பு அறிவித்தல் பற்றி முரசு கூறியது உண்மை. சேர்க்க வேண்டும் என்பது நோக்கமல்ல. சேர்க்க முயற்சிப்பதாக காட்டத்தான் அறிவித்தல்!*

ஏ. காராளசிங்கம், யாழ்ப்பாணம்.

*முரசே!*
*அன்றை தமிழ்த் தலைவர்கள் நம்பி ஏமாந்தனர். இன்றுள்ள தமிழ்க் கட்சிகளுக்கு தாம் கூறுவது நடக்காது என்று தெரிந்தும் மக்களை ஏமாற்றுகின்றனர்.*

சி. ராஜநாதன், கொழும்பு-06.

மாணவர் போராட்டம் பற்றியும் தமிழ்க் கட்சிகளது புரோக்கர் அரசியல் பற்றியும் இராஜதந்திரி அலசியது கச்சிதம். அதுபோல ஆசிரியர் குறிப்பில் சட்டபூர்வ அரசியலுக்குள் கட்டுண்டு கிடக்கும் நிலை குறித்து விளக்கியதும் அருமை.

பா. விஜயரத்தினம், திருமலை.

அன்புள்ள முரசே!

போராடாத எந்த ஜீவராசியும் உயிர் பிழைப்பதில்லை. தமிழ் மக்களுக்கும் அது பொருந்தும். யாழ் கப்பல் பயணத்துக்குக்கூட பயணிகள் போராடியே ஓரளவாவது நன்மை கிட்டியது. இது விடயத்தில் தமிழ்க் கட்சிகளால் பணிவோடு விண்ணப்பித்து பயன் பெற்றுத்தர முடிந்ததா?

எஸ். சிதம்பரம், திருமலை.

அன்பின் தினமுரசு ஆசிரியருக்கு,

உன்னில் தாங்கிவரும் அத்தனை ஆக்கங்களும் தரமானவையே. எனினும் எனக்கு கவிதை நயம் மிகவும் பிடித்த ஒன்று. 'இலக்கிய நயம்' பகுதியை ரசிகன் தருகிறார்.

அவருக்கும் முரசுக்கும் நன்றிமேல் நன்றி.

என். அருள், கைதடி.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-1772, கொழும்பு.**
**தொலை நகல் (Fax):- 074-513266**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# "தேர்தலில் போட்டியிட வேண்டாம்!"

# பிரமுகர்களுக்குப் புலிகள் அறிவுறுத்தல்

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தல்கள் இந்த ஆண்டுக்குள் நடைபெறக் கூடும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

சென்ற முறை கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட ரெலோ உறுப்பினர்கள் மட்டுமே புலிகளால் கொல்லப்பட்டனர்.

தேர்தலில் போட்டியிடவேண்டாம் என்றும் கடந்த முறை கிழக்கில் புலிகள் கோரவில்லை.

ஆனால் இம்முறை வடக்கைப் போலவே, கிழக்கிலும் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிட வேண்டாம் என்று புலிகள் கோரவுள்ளதாகத் தெரிகிறது.

இதற்கு முன்னோடியாக சில பிரமுகர்களுக்கு புலிகளது அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

தமிழ்க் கட்சிகளோடு இணைந்து போட்டியிட்டால் தண்டிக்க வேண்டிய கட்டாயம் தமக்கு ஏற்படும் என்று புலிகள் கூறியுள்ளனராம்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள பிரமுகர்கள் சிலருக்கே இந்த அறிவுறுத்தல் நேரடியாக விடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

### யாழில் தாக்குதல்

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்மீதான தாக்குதல்கள் மேலும் தீவிரப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிகிறது.

பல உறுப்பினர்களது விவரங்கள் புலிகளால் திரட்டப்பட்டுள்ளன. புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரும் குடாநாட்டில் தாக்குதல்களுக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு தமிழ்க் கட்சிகள் கோரிவருவதை அடுத்து, உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் தமிழ்க் கட்சிகள் மீதான தாக்குதலை புலிகள் அதிகப்படுத்தும் அபாயம் உள்ளது.

படையினருக்கு எதிரான தாக்குதல்களும் யாழில் தீவிரமாகும் அறிகுறிகள் தென்படுகின்றன.

சமீபத்தில் வெசாக் தினத்தை முன்னிட்டு படையினர் சாவகச்சேரியில் கொண்டாட்டம் நடத்தினார்கள்.

கொண்டாட்டம் நடைபெற்ற பகுதி நோக்கி கிரனைட் ஒன்று வந்து விழுந்து வெடித்தது.

கிரனைட் லோஞ்சரால் இக் கிரனைட் ஏவப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

படையினர் மற்றும் தமிழ்க் கட்சிகள் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு செல்ல வேண்டாமென்று புலிகள் எச்சரித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### பறிமுதல்

யாழ் குடாநாட்டில் பஸ் ஒன்றை வழி மறித்த புலிகள் பயணிகளின் அடையாள அட்டைகள் சிலவற்றைப் பறித்துச் சென்றுள்ளனர். இது குறித்து படையினரிடம் முறையிடுமாறும் புலிகள் கூறிச் சென்றனராம்.

இந்த அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி புலிகள் நகருக்குள் ஊடுருவக்கூடும் என்பதால் யாழ் நகர சோதனை அரண்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கிடையே சாவகச்சேரியில் வர்த்தகர் ஒருவரையும் புலிகள் கடத்திச் சென்றுவிட்டு, விடுவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் தமக்கு மத்தியில் அமரவைத்து இரண்டு புலிகளே இவரைக் கடத்திச் சென்றனராம்.

# கிழக்கில் புலிகள் ஆட் திரட்டல்

## பெருமளவு புதியவர்கள் இணைவு!

கிழக்கில் புதிய உறுப்பினர்களைத் திரட்டுவதில் புலிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

சமீபத்தில் மட்டக்களப்பு கோராவெளி ஆலயத்திருவிழாவில் அதிக எண்ணிக்கையானோர் புலிகளில் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு கரும்புலித் தாக்குதல் செய்தியும் புதிய உறுப்பினர்களைத் திரட்ட உந்துதலாக இருந்ததாம்.

(நமது நிருபர்)

ஆலயத் திருவிழாவின்போது புலிகளால் போர் முனைப் படங்கள் காண்பிக்கப்பட்டன. இயக்கத்தில் இணைவதை ஊக்குவிக்கும் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

"ஏராளமான போர் ஆயுதங்கள் குவிந்து கிடக்கின்றன. அவற்றைப் பயன்படுத்த திரண்டு வாருங்கள்!" என்று பிரசுரத்தில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

"தாயக மண்ணை மீட்டெடுக்கும் புனிதப் போர் முதிர்ச்சியுற்று, வளர்ச்சியடைந்து வருகின்ற வேளை இது.

எமது பிரதேசத்தை மீட்டெடுக்க அணி திரண்டு வாருங்கள். தாயகம் விரைவாக மீட்கப்பட அனைவரும் சங்கற்பம் பூண வேண்டும்.

தற்போது தமிழினம் அறப்போர் நடத்துகின்றது. ஆக்கிரமிப்பை எதிர்க்கும் புனிதப் போராட்டத்தை நடாத்துகிறது. வாருங்கள் இளைஞர்களே! யுவதிகளே! முதலில் தமிழீழத்தை மீட்டெடுப்போம். நாம் செத்து மடிந்தாலும் எம் சந்ததி சுதந்திர தமிழீழ மண்ணில் சிரித்து வாழவேண்டும்!" என்று அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் சென்ற ஆண்டும் திருவிழாக் காலங்களில் ஏராளமான புதிய உறுப்பினர்கள் இணைந்தமை தெரிந்ததே.

இம்முறை திருவிழாக் காலத்திலும் பெருமளவான உறுப்பினர்களை திரட்டுவதில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

### நகருக்குள் அச்சம்

மட்டக்களப்பு நகருக்குள் புலிகள் தாக்குதல் நடத்த இயலாது என்றே சமீபகாலமாக நம்பப்பட்டது.

ராசிக் கொல்லப்பட்ட பின்னர் அந்த நம்பிக்கை அடியோடு தகர்ந்துவிட்டது. இதனால் தமிழ்க் கட்சிகள் உட்பட புலிகளுக்கு எதிரான பிரமுகர்கள் கலக்கம் அடைந்துள்ளனர்.

இதேவேளை ராசிக்கின் பின்னர் அவரது குழுவின்மீது படையினருக்கும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

புலிகளது ஊடுருவல் இருக்கலாம் என்றே சந்தேகிக்கின்றனர். இதனால் அக் குழுவினரை சற்று எட்டத்தில் வைத்திருந்தே இனிமேல் பயன்படுத்துவர் என்று தெரிகிறது.

# வன்னியில் பாசறைகள்

## தொடர் நிகழ்வுகள்

வன்னியில் போர் எழுச்சி நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பாசறைகள் என்ற பெயரிலும் போர் எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

31.05.99 அன்று அன்னையர் முன்னணியினரால் மல்லாவியில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

தினமும் ஊர்வலங்களும் கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன. ஈழத் தமிழர் போர் எழுச்சி பாசறையால் பிரசாரப் பத்திரிகை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

போர் எழுச்சிப் பாசறைகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரும் பங்கெடுத்து வருகின்றனர்.

25.05.99 அன்று வட்டக்கச்சியில் பொது அமைப்புக்களது கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக் கூட்டத்தில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

"இந்தச் சந்ததியின் காலத்திலேயே தமிழீழத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். எம் தலைவரது வழிகாட்டலில் அணிதிரள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

போராட்டம் இப்போது மக்கள் மயப்படுத்தப்பட்டு வருகிறது. மக்கள் மயப்படுத்தப்படாத போராட்டங்கள் வெற்றி பெற முடியாது. எமது விடுதலை எமது கையால் தான் பெறப்படவேண்டும்!" என்று தமிழ்ச்செல்வன் உரையாற்றினார்.

பொது அமைப்புக்கள் நெருக்கடியான காலகட்டத்தில் ஆற்றிவரும் சேவையையும் அவர் பாராட்டினார். போர்க்கள நிலவரங்கள் குறித்தும் விளக்கமளித்தார்.

# மாணவர்கள் புலிகளோடு

யாழ் குடாநாட்டில் மாணவர்கள் கைதாவதை அடுத்து, புலிகள் இயக்கத்திற்கு மாணவர்கள் செல்லும் நிலை ஏற்படும் என்று முரசு சுட்டிக் காட்டியிருந்தது.

யாழ் குடாநாட்டில் நீர்வேலியில் ஐந்து மாணவர்களைக் காணவில்லை என்று செய்திகள் வெளியாகி இருந்தன அல்லவா?

அந்த ஐந்து பேரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டதாகத் தெரியவந்துள்ளது.

மாணவர்கள் கைதாகியதைக் கண்டித்து யாழில் தன்னெழுச்சியான பகிஷ்கரிப்பு போராட்டம் நடைபெற்றமை தெரிந்ததே. அதன் பின்னரே குறிப்பிட்ட மாணவர்கள் புலிகள் அமைப்போடு இணைந்து கொண்டனர்.

# கடற்பரப்பில் கடும் சமர்

## கடற்புலி தளபதி பலி

முல்லைத்தீவுக்கும், திருமலைக்கும் இடையேயுள்ள புல்மோட்டைக்கடற்பரப்பில் கடற்படையினருக்கும், கடற் புலிகளுக்கும் இடையே கடும் சமர் மூண்டது.

26.05.99 இரவு இச் சமர் இடம்பெற்றது. இரவு 11.55 மணி முதல் அதிகாலை 3 மணி மணிவரை இச்சமர் நடந்தது.

கடற்புலிகளது அணி ஒன்றை கடற்படையினர் தாக்க முயன்றபோதே மோதல் ஏற்பட்டது.

இம் மோதலை அடுத்து கடற்புலிகளுக்கு உதவியாக முல்லைத் தளத்திலிருந்து கடற் கரும்புலி படகு ஒன்று விரைந்தது.

கடற்கரும்புலி தளபதியான லெப்டினன்ட் கேணல் பிரசாந்தன் அப்படகினை செலுத்திச் சென்றார்.

கடற்படையின் டோரா படகு ஒன்றுடன் கரும்புலிப் படகு மோதியதாகவும், அப்படகு மூழ்கியதாகவும் புலிகள் கூறுவதை கடற்படையினர் மறுத்துள்ளனர்.

கடற் கரும்புலித் தாக்குதல் இடம் பெற்ற போதும், கடற்படையின் கடற்கலங்களது பலமும், தாக்குதலும் மேலோங்கியதால் கடற்புலிகள் பின்வாங்கினார்கள்.

இச் சமரில் கடற்கரும்புலித் தளபதியான லெப்டினன்ட் கேணல் பிரசாந்தன் உட்பட ஏழு புலிகள் பலியானார்கள்.

கடற்படைத் தரப்பு உயிர் இழப்பு பற்றி எதுவும் தெரியவில்லை. தமக்கு இழப்பில்லை என்று கடற்படையினர் கூறியுள்ளனர்.

# கரும்புலிக்கு இறுதி அஞ்சலி

## கோவிலில் உரிமை கோரல்

மட்டக்களப்பு நகரில் ராசிக்மீது கரும்புலித் தாக்குதல் இடம்பெற்றபோது, புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள கோராவெளி ஆலயத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மட்டக்களப்பு நகரில் இருந்து ஏறத்தாழ 35 மைல் தொலைவில் இருக்கிறது கோராவெளி.

சரியாக 1.30க்கு இக் கோயிலுக்கு புலிகள் சென்றனர். அங்கு திரண்டிருந்த மக்கள் மத்தியில் தமது கரும்புலித் தாக்குதல் பற்றி அறிவித்தனர். கரும்புலி உறுப்பினரின் புகைப்படமும் காண்பிக்கப்பட்டது.

கரும்புலியின் சடலத்தையும் புலிகள் பொறுப்பேற்றது தெரிந்ததே. கரும்புலிக்கு இறுதி அஞ்சலி ஊர்வலமும் நடைபெற்றது. மட்டக்களப்பு, பதுளை வீதியில் ஆரம்பமான ஊர்வலம், மாவீரர் துயிலும் இல்லமான தரவையில் முடிவடைந்தது.

பெருந்திரளான மக்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். பலியான கரும்புலியின் குடும்பத்தினரும் தற்போது புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே வசித்து வருகின்றனர். அவர்களுக்கும் தகவல் உடன் தெரிவிக்கப்பட்டது. அவர்களும் கலந்துகொண்டனராம்.

# புலிகள் குழு தலை நகரில்?

புலிப்படையைச் சேர்ந்த அறுவர் அடங்கிய குழு ஒன்று ஒரு பெரும் தாக்குதல் நடத்துவதற்கு ஊடுருவியிருப்பதாக கடந்த வாரம் தெரியவந்ததை அடுத்து தலைநகரிலும் சுற்றுவட்டாரத்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இக்குழுவினர் 'டொல்ஃபின்' ரக வாகனம் ஒன்றில் பயணம் செய்வதாக அறிவிக்கப்பட்டதால் இந்த ரக வாகனங்கள் காவலரண்களில் மறித்து வைக்கப்பட்டு மிக நுணுக்கமான சோதனைகளுக்குள் உட்படுத் தப்படுகின்றன. இத்தகவலை 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

# விசாரணையில் ஓட்டம் புலிகளால் சுடப்பட்டார்

மட்டக்களப்பு-சித்தாண்டியைச் சேர்ந்த சி.சிங்கராஜா(23) என்பவர் புலிகளால் சுடப்பட்டு சடலம் வந்தாறுமூலை-உப்போடையில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர் சில காலங்களுக்கு முன்னர் புலிகள் இயக்கத்தில் அங்கத்தவராக இயங்கியவர். அதிலிருந்து விலகியிருந்தவர். ஊர் மக்களிடத்தில் சில விரும்பத்தகாத வேலைகளைச் செய்து புலிகள் இயக்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வண்ணம் செயற்பட்டு வந்ததாக மக்கள் முறையிட்டதைத் தொடர்ந்தே புலிகள் அவரைப் பிடித்துச் சென்றிருந்தனர் என்று அறிய வருகிறது.

இவர் புலிகளுடன் இயங்கிய காலப்பகுதியில் கள்ளத்தனமாக ஆயுதங்கள் வைத்திருந்து பாவித்தார் என்பதும் இவர் மீதுள்ள முறைப்பாடாகும். இவரது சகோதரர் ஒருவர் தற்சமயம் கணேசகுமாரின் (ராசிக்) குழுவில் உள்ளார்.

சிங்கராஜா விசாரணைக்குட்படுத்தியிருந்த வேளையில் ஓட எத்தனித்தபோது புலிகளால் சுடப்பட்டார் என்று தெரியவருகிறது. இச்சம்பவம் 31.05.1999 அன்று காலை இடம் பெற்றது.

# மினிமுகாம் தாக்குதல்

வன்னியில் நெடுங்கேணி பகுதியில் படையினருக்கு நீர் விநியோகம் செய்யும் இரண்டு நீர்த்தாங்கி வாகனங்கள் புலிகளது தாக்குதலுக்கு இலக்காகின.

ஒரு நீர்த்தாங்கி முற்றாக நாசமானது. இன்னொன்று சேதமடைந்தது. அப்பகுதியில் இருந்த மினிமுகாம்மீதும் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத் தாக்குதலில் மினிமுகாம் தீப்பிடித்து எரிந்தது. படையினர் புகைக் குண்டுகளை வெடிக்க வைத்துவிட்டு, காயமடைந்த படையினரை தூக்கிக் கொண்டு அங்கிருந்து அகன்றனர்.

23.05.99 அன்று காலை 8 மணி முதல் நண்பகல் 11 மணிவரை இத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதே தினத்தில் ஒட்டிசுட்டான் பகுதியில் உள்ள காவலரண்கள் இரண்டு மீதும் புலிகள் ஆர்.பி.ஜி. தாக்குதல் நடத்தினர். சேத விபரங்கள் தெரியவில்லை.

31.05.99 இரவு வவுனியாவில் இரண்டு மின்மாற்றிகள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன. வவுனியாவில் புலிகளது தாக்குதல்கள் தொடரும் என்று தெரிகிறது.

# அரச இரகசியங்கள் அம்பலம்

## யோசனை கோருகிறார் ஜனாதிபதி

அரசாங்க அந்தரங்க நடவடிக்கைகள் மற்றும் அமைச்சரவையின் இரகசியத் தகவல்கள் யாவும் மிக விரைவாகவே பத்திரிகைகளில் பிரசுரமாகி விடுகின்றன. இத்தகைய சம்பவங்கள் தொடர்வதனால் ஜனாதிபதி சந்திரிக்கா பத்திரிகைகள் மீது கடும் சினங் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அரச இரகசியங்களை வெளியிட்டு அபகீர்த்தியை ஏற்படுத்திவரும் பத்திரிகைகளையும் எழுத்தாளர்களையும் உரிய முறையில் தண்டித்தாக வேண்டும் என்று அவர் கருதுவதாகவும் தெரிகிறது.

அரசாங்க இரகசியக் காப்பு விதிகளடங்கிய 1953ம் ஆண்டு சரத்துக்களை அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டி, இத்தகைய இரகசியச் செய்திகளைப் பிரசுரிக்கும் பத்திரிகை நிறுவனம்மீதும் ஆசிரியர், நிருபர் ஆகியோர் மீதும் குற்றம் சாட்டி வழக்குத் தொடர முடியும் என்றும் அமைச்சர் பீரிஸ் சுட்டிக் காட்டியதாகத் தெரிகிறது.

சட்டமா அதிபர் சரத் சில்வா தலைமையில் ஒரு குழுவினை நியமித்து உரிய நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை, 1992ம் ஆண்டு ஜூன் மாதம் 2ம் திகதியன்று 'சுதந்திரச் செய்திகள் இயக்கம்' புதிய நகர மண்டபத்தில் கூட்டிய ஒரு மகாநாட்டில் ஜனாதிபதி சந்திரிக்காவும் தகவல்துறை அமைச்சர் மங்கள சமரவீரவும் கலந்து கொண்டனர்.

அரச இரகசியங்கள் சட்டத்தை முழுமையாக அகற்றிவிடக் கோரும் ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்துக்கு ஜனாதிபதியும் அமைச்சரும் அப்போது ஆதரவு தந்தனர்.

ஆனால் இப்பொழுது அன்றைய நிலைப்பாட்டினை முற்றாக மறந்து பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடும் நிலைக்கு ஜனாதிபதி முன்வந்திருப்பதானது முன்னுக்குப்பின் முரணானதாகவுள்ளது என்று நோக்கர்கள் கருதுகின்றனர்.

# உபயோகமற்ற உடற்கவசங்கள்

## உயிரிழந்தால் நஷ்டஈடு!

போர் முனையில் முன்னரங்க வரிசைகளில் நின்று போர் புரியும் படையினரின் உயிரைப் பாதுகாப்பதற்கான உடற் கவசங்கள் மூவாயிரம் அண்மையில் இங்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக அங்கொன்றும் இங்கொன்றுமாக எட்டுக் கவசங்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு, இதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரிகளினால் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

இவற்றில் மூன்று கவசங்கள் பயன்படுத்தத் தகுதியற்றவை என்று தெரியவந்தமையினால் மொத்தம் 3000 கவசங்களையும் நிராகரித்து விடவேண்டும் என்று கருதப்பட்டது.

உடற் கவசங்கள் முன்னரங்க படையினரால் அணியப்பட்டிருந்தால், பலருடைய உயிர்களையும் வெகுபலருடைய அங்கங்களையும் காப்பாற்றியிருக்க முடியும். இதனால் இருவருடங்களுக்கு மேலாக உடற்பாதுகாப்புக் கவசங்கள் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உலகளாவிய நிலையில், கவசங்களை விநியோகிப்போர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டன.

அவுஸ்திரேலியா, பிரிட்டன், இந்தியா, கனடா, அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளிலிருந்து பதினொரு விநியோகத்தர்கள் விண்ணப்பித்தனர். இவ்வாறு விண்ணப்பித்தவர்களுடைய பிரதிநிதிகள் வரவழைக்கப்பட்டு, மாதிரிக்காக அனுப்பி வைக்கப்பட்ட கவசங்கள் பரீட்சிக்கப்பட்டன.

இவற்றில் பலகுறைபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவ்வாறான கேள்விப்பத்திரத்தை உரிய காலத்தில் அனுப்பிவைக்கப்படாத ஒரு நிறுவனத்தின் பிரதிநிதி இராணுவ அதிகாரிகளுடன் கலந்தாலோசித்ததைத் தொடர்ந்து, அவருடைய நிறுவனத்திடமிருந்தே கவசங்களைப் பெறுவதென முடிவு செய்யப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 10ம் திகதியன்று கொழும்புத் துறைமுகத்தில் மூவாயிரம் கவச உடைகளும் வந்து சேர்ந்தன. இத் தொகுதியிலிருந்தே எட்டு உடைகள் பொறுக்கி எடுக்கப்பட்டுப் பரிசோதித்தபோதே இவற்றில் மூன்று உடைகள் பாதுகாப்பாற்றவை என்று கண்டு பிடிக்கப்பட்டது.

### நஷ்டஈடு

இவ்வாறு வந்து சேர்ந்துள்ள மூவாயிரம் காப்புக் கவசங்களை ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்புவதிலும் பல சங்கடங்கள் இருந்தன. இவற்றின் மொத்த பெறுமதி- 11 இலட்சம் டொலர் (ரூ 76 இலட்சம்)

ஆகவே வேறு எந்த நாட்டிலும் கடைப்பிடிக்கப்படாத ஒருமுறையை அதிகாரிகள் அனுசரிக்கத் திட்டமிட்டனர். இந்தப் பாதுகாப்புக் கவசத்தை அணியும் படையினர் எவராவது காயமடைந்தால் அல்லது உயிரிழந்தால் இவற்றை விநியோகித்த நிறுவனம் அதற்கான நஷ்ட ஈட்டை வழங்க வேண்டும் என்றொரு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

# வரதரே வந்ததென்ன? போனதென்ன?

## சுவரொட்டிகளை ஒட்டியது யார்?

கிழக்கின் பல பகுதிகளெங்கும் கடந்த வாரம் புலிகளால் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன. படையினரின் 24 மணி நேர முழுக் கண்காணிப்புள்ள பகுதிகளிலும், புலிகளின் வசமுள்ள பகுதிகளிலும் காணப்பட்ட இப் பிரசுரங்களில்: "வரதரே வந்ததென்ன? போனதென்ன?" என்ற குறிப்புடன் கருத்துப் படங்களும் வரையப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு நகரின் இறுக்கமான 24 மணிநேர முழுக் கண்காணிப்புள்ள பகுதிகளிலும் காலையில் இந்தச் சுவரொட்டிகளைக் கண்ட பொதுமக்கள் ஆரம்பத்தில் படையினரோ அல்லது அவர்களுடன் சேர்ந்து செயற்படும் தமிழ் இயக்கத்தினரோதான் ஒட்டியிருக்கக்கூடுமென நினைத்திருந்தனர்.

ஆனால் பின்னர் இராணுவத்தினரும் பொலிஸாரும் இந்தப் பிரசுரங்களைக் கிழித்த போதுதான் அது புலிகளால் ஒட்டப்பட்ட பிரசுரம் என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்தது.

மட்டக்களப்பிலுள்ள சீருடையினரின் முகாம் ஒன்றுக்குச் சமீபத்தில் மேற்படி துண்டுப் பிரசுரங்களை ஒட்டுவதற்காக திரண்டிருந்த ஏராளமான புலி இயக்க உறுப்பினர்கள் அவ்வழியால் சென்ற வாகனங்களில் பிரசுரங்களை ஒட்டிவிட்டு, அருகிலிருந்த முகாமிலும் கொடுத்துவிடுமாறு சில பிரசுரங்களை வாகனக்காரர்களிடம் கையளித்தனர்.

இதனைக் கேள்வியுற்ற சீருடையினர் உடனடியாக அந்த முகாமின் முன்னரங்கப் பகுதியிலிருந்து உள்வாங்கிக் கொண்டனர்.

அன்றைய வேளையின் முறுகலில் அகப்பட்டுக் கொண்ட வாகனக்காரர்கள் தாம் இருபக்க நெருக்கடியில் பீதி கொண்டதாகத் தெரிவித்தனர்.



படிப்பகம்

# தொலைபேசி அட்டைகள்
## குறைந்த கட்டணத்தில் வசதி

(நமது நிருபர்)

வெளிநாடுகளில் உள்ள நம்மவர்கள் இங்குள்ள குடும்பத்தினருடன் தொலைபேசி தொடர்பு கொள்வதில் பெருமளவான பணம் செலவாகிவருகிறது.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு தொலைபேசி எடுப்பதும் பெரும் செலவு தான்.

தற்போது 'டெலிஃபோன் காட்' எனப் படும் தொலைபேசி அட்டைகள் பாவனைக்கு வந்துள்ளதால், முன்னைய தொலைபேசி கட்டணத்தைவிட குறைந்த கட்டணத்தோடு இலங்கையில் உள்ள உறவினர்களுடன் உரையாட முடிகிறது.

ஏட்டிக்குப் போட்டியாக 'தொலைபேசி அட்டைகள்' விற்பனைக்கு வருவதால், ஒவ்வொரு நிறுவனமும் கட்டணத்தைக் குறைத்து போட்டியில் குதிக்கின்றன.

தற்போது அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் 'கார்த்திகன் கோல் டெலிஃபோன் காட்' பாவனைக்கு வந்துள்ளது. இதுமுன்னைய டெலிஃபோன் காட் கட்டணங்களைவிட குறைவான கட்டணத்தோடு வாடிக்கையாளர்களைக் கவர முயற்சிக்கிறது. இலங்கைக்கு ஒரு நிமிட கட்டணம் 50 சதம் மட்டும் அறவிடப்படுகிறது.

ஃபிரான்ஸ் ரெலிகொமுடன் இணைந்து பெல்கடை ஒப்பந்தத்தின்கீழ் இது விற்பனைக்கு வந்துள்ளது. எப்படியோ 'டெலிஃபோன் காட்' நிறுவனங்களது போட்டிகளால் வெளிநாடுகளிலுள்ள நம்மவர்களுக்கு செலவு சற்றுக் குறையும்.

# கைதிகளைப் பார்வையிடவும் 'அன்பளிப்பு'

(நமது நிருபர்)

மன்னார் சிறைக் கூடத்தில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்படும் கைதிகளைப் பார்வையிட வருபவர்களிடம் இங்குள்ள காவலாளிகள் 'அன்பளிப்பு' கேட்பதாக பாதிக்கப்பட்டவர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மன்னார் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்படும் சந்தேக நபர்கள், அநுராதபுர சிறைச்சாலைக்கு விளக்க மறியலுக்காகக் கொண்டு செல்ல வேண்டி ஏற்படும்போது அங்கு அனுப்பிவைக்கப்படும்வரை இங்குள்ள சிறைக்கூடத்தில் தங்க வைக்கப்படுகின்றனர்.

அவ்வாறு வைக்கப்படுபவர்களை தினமும் காலை 8 மணி முதல் 12 மணிவரையும், பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரையும் பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த நேரங்களில் வருபவர்களிடமே இவ்வாறான இலஞ்சம் கேட்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விலையுயர்ந்த வெளிநாட்டு சாராய வகைகள், சிகரெட் உணவுப் பொருட்கள், பணம், கைக்கடிகாரம் என்பன 'அன்பளிப்'பாகக் கோரப்படுகின்றது.

# மைதானம் தேவை

(நமது நிருபர்)

அட்டாளைச்சேனை நகரில் ஒரு பொது விளையாட்டு மைதானம் இல்லாதிருப்பதனால் இங்குள்ள விளையாட்டு வீரர்கள் தம் திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள முடியாதிருப்பதாக அட்டாளைச்சேனை இஃலாஸ் இளைஞர் கழகம் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இக் கழகத்தின் தலைவர் எம்.எஸ்.எம். ஜஃபர் கருத்துத் தெரிவிக்கையில்,

"அட்டாளைச்சேனையில் உள்ள பல விளையாட்டு வீரர்கள் தேசிய மட்டத்திலும் சாதனை படைத்துள்ளனர். எனினும் தற்போது இந்நிலை குறைந்து வருகிறது. முழுமையான மைதானம் ஒன்று இல்லாதிருப்பதே இதற்கான காரணமாகும்.

இங்கு தற்போது காணப்படும் மைதானமானது மழை காலம் வந்தால் தொடர்ந்து பல மாதங்களுக்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் ஏராளமான இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வம் கொண்டுள்ள போதிலும் சிறந்ததொரு மைதானமின்மையால் தம் திறமைகளை வெளிக்காட்டவோ, மேலும் திறமைகளை வளர்த்துக்கொள்ளவோ முடியாத நிலை இருந்து வருகிறது.

# விதிமுறைகளுக்கு மாறான போட்டி
## பங்குகொண்டோர் அதிருப்தி தெரிவிப்பு!

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை வலயத் தமிழ்மொழி தினப் போட்டியின் பிரிவு நான்குக்குரிய பேச்சுப்போட்டி விதிமுறைகளுக்கமைவாக நடத்தப்படவில்லையெனத் தெரியவருகிறது.

7 நிமிடப் போட்டியான இதற்கு 10 நிமிடம் முன்னாயத்தஞ் செய்வதற்காக வழங்கப்பட வேண்டும் எனவும். போட்டியாளர்களுக்கு திடுமெனச் சீட்டு மூலம் தீர்மானிக்கப்படுவதோடு ஒவ்வொரு போட்டிக்கும் நான்கு தலைப்புகள் வழங்கப்பட்டு ஒரு தலைப்பைத் தெரிவு செய்து பேசுவதற்கு அனுமதிக்கப்படவேண்டுமெனவும் 11க்கு மேல் விதிமுறைகள் தெளிவாக வரையறுத்துள்ளன.

ஆனால் குறிப்பிட்ட போட்டியின்போது ஒரேயொரு தலைப்பு வழங்கப்பட்டதன் மூலம் போட்டியாளரது தெரிவுக்குரிய உரிமை மறுக்கப்பட்டுள்ளதோடு ஒரு போட்டியாளர் பேசத் தொடங்கிய பின்னர், அடுத்த போட்டியாளர்கள் தலைப்பு வழங்கியதன் மூலம் 7 நிமிடத்துக்கும் குறைவான முன் ஆயத்த நேரமே வழங்கப்பட்டுள்ளது.

போட்டி விதிமுறைகளையே சரியாக விளங்கிக்கொள்ளும் ஆற்றல் அற்ற நடுவர்கள் எவ்வாறு திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டார்கள் என்பது தெரியவில்லை என அதிகாரியொருவர் முரசு நிருபரிடம் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, மாணவர்களது மொழித்திறனை வளர்த்துக் கொள்ளும் போக்கில் நடைபெறும் தமிழ்மொழித்தினச் சுற்று நிருபம் 99ல் பிழைகள் காணப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. 4ம் பக்கத்தில் கீழிருந்து மேல்நோக்கி நான்காவது வரியில்- பதற்றம் என இருக்கவேண்டிய சொல்- பதட்டம் எனவும், 51ம் பக்கத்தில் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் தமிழ் மொழித்தினப் போட்டி 1999 என இருக்க வேண்டியது, தமிழ்த் தினப்போட்டி 1999 எனவும் காணப்படுகிறது. கல்விக்குப் பொறுப்பானவர்கள் பிழை விடலாமா?

# அடையாள அட்டை

காங்கேசன்துறை, தையிட்டி, கல்லூரி வீதியைச் சேர்ந்த மாணவி கணேசபிள்ளை அமலா என்பவரின் தேசிய அடையாள அட்டை இல: 757021722V கொழும்பில் கண்டியைச் சேர்ந்த ஜெளஃபர் தம்பதியினரால் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தக்க ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்.


## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

**கொழும்பில் ஜுன் 23 முதல் 30 வரை சந்திக்கலாம்**

Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

**கல்முனையில் ஜுன் 5,6ம் திகதிகளில் சந்திக்கலாம்**

T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329

**வவுனியாவில் ஜுன் 12,13ம் திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(HOTEL VASANTHAM), 40, கண்டி வீதி, வவுனியா. T.P.024-22607, 024-22615, 22365

கடிதத்தொடர்பு:- Resident T.P. 065-24019
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.



## Follow a Diploma Course in Hotel Management at International Hotel Schools-United Kindom, Switzerland & Cypres

qualifications: Age over 18 years, pass in G.C.E. (A/L), & (O/L) Pass in English Language in G.C.E. (O/L)

Whilst on studies students are directed for practical training and during these periods the students are paid a generous stipend.

Leaving from Sri Lanka in September 1999.

Please call over with all your Certificates for the Interview.

for more details Contact:

**DALUWATTA & JAFFE ASSOCIATES,**
(SRI LANKAN REPRESENTATIVE)
LG. 15, Peoples Park, Colombo-11. Tel: Nos: 075-336437, 852525.



வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஏராளமாகப்பெற்றுத்தரும்...

## கணனிப்பொறியியல் நுட்பம்
## (Diploma in Computer Hardware Engineering)

இப்பொழுது புதியமாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். பாட நெறி ஆரம்பத்திலிருந்து முறைப்படி கற்பிக்கப்படும்காலம் - 1மாதம்

**பாடத்திட்டம்** கணனியைப்பொருத்துதல்(Assembling), கோளாறுகளைக்கண்டுபிடித்தல்(Troubleshooting), தரமுயர்த்துதலும்பேணுதலும்(Upgrading PCs, Maintenance & Servicing), பழுதுபார்த்தல்(Repairing), செயல்முறைப்படுத்துதல்(Software Instalation) தொழிற்பாட்டுமுறை(Operating System).

**விசேடசேவை** அரசு அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழ், பழுதுபார்த்தல் சம்பந்தமான நிபுணத்துவத்திற்கானசான்று, அமெரிக்க சர்வகலாசாலை விரிவுரையாளர்களின் விரிவுரையடங்கிய Recorded CD யுடனான போதனை என்பன வழங்கப்படும்.

மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் 10 நாட்களுக்குள் அதிபின்பெயருக்கு ரூபா 25/= காசுக் கட்டளையை அனுப்பி அல்லது நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

The Principal (TM)
**Higher Tech (Lanka)**
85/2, St.Anthony's Mawatha,
Colombo - 3


## 60ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 21 ☆ 09 ☆ 77



உதிர்வு: 01 ☆ 04 ☆ 99

**இரகுநாதன் இராகவன்**

இவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

பருத்தித்துறை, கல்லடி, தும்பளை வீதியைச் சேர்ந்த இ. இராகவன் சென்னையில் அகாலமரணமடைந்த செய்தியறிந்து சென்னையில் நடைபெற்ற அவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களிற்கும், அனுதாபச் செய்தியனுப்பியவர்களிற்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்,
இரகுநாதன் குடும்பத்தினர்.
32, ரயில்வே அவெனியூ, கொழும்பு-05.

## 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு: 16 • 03 • 1922

உதிர்வு: 05 • 06 • 1998

**சின்னையா இராசரத்தினம்**

ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது. பாசத்துடன் எம்மை வளர்த்து எங்கள் எல்லோரையும் வாழவைத்து கண்ணீர்க்கடலில் ஆழ்த்தி எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது ஐயா! உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்- உங்கள் பிரிவால் வாடும்.

**மனைவி:** சிவபாக்கியம்.

**பிள்ளைகள்:** தவமலர், கருணானந்தராசா, ராதா, ரயினா, றோசா, வனிதா.

**மருமக்கள்:** விவேகானந்தராசா, விஸ்ணு காந்திவேணி, தவராசா, யோகேஸ்வரன், திருமலைராசா.

**பேரப்பிள்ளைகள்:** யசோ, யசி, கிரிதரன், தசி, அனுறஜி, கபிறஜி, வசி, சதீஷன், காண்டீபன், சகிதா, வினோஜன், லதன், அபிலன், தனுசியன், தினேஸ், தனா, புஸ்பன்.

மற்றும் சகோதர சகோதரிகள், உற்றார்கள், உறவினர், நண்பர்கள். ஓராண்டு நினைவு தினம் 1999/05/25 ம் திகதி அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது.

*தகவல்: மனைவி, இ. சிவபாக்கியம், தண்ணீருற்று, முள்ளியவளை.*

## 90ம் நாள் நினைவு அஞ்சலி

(8.6.99)

**அன்னையின் கரங்களில்**
**11.03.1970**

**இதயங்களில் கல்வெட்டாக**
**11.03.1999**



**செல்வி சுமதி இராஜரட்ணம்**

(யாழ் பல்கலைக் கழக புவியியல் சிறப்புக்கலைப் பட்டதாரி, ஆசிரியை- மருதனார் மடம்- இராமநாதன் மகளிர் கல்லூரி)

இதழ்களை மௌனத்தின் உறைவிடமாக்கி,
இதயத்தை வற்றாத அன்பு நீரூற்றாக்கி,
உறவுகளை வளர்த்த; எம் உயிர் சுமதியே
புவியியல் சிறப்புக்கலைப் பட்டத்துடன் மேலும்
பல பட்டங்கள் இணைத்து பெரும் பதவி
வகித்திட நீ கண்ட கனவையும்-உனைச்சுற்றி
நாம் வளர்த்த கனவுகளையும்-காலன்
கணப்பொழுதில் கலைத்ததேனம்மா!
காலத்தால் அழியா உன் நினைவுகளை- நெஞ்சில் சுமந்து
கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்!

குடும்பத்தினர்.


## METRO COMPUTER WORLD

பெருமையுடன் வழங்கும்

## 1000 புலமைப்பரிசில் திட்டம்

இரண்டு ஆண்டுகளினை பூர்த்தி செய்யும் எமது நிறுவனம் இரண்டாயிரம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் மாணவர்களுக்காக இத்திட்டத்தினை அறிமுகப்படுத்துகின்றது.

ஆறிற்கும் மேற்பட்ட தொகுதிகளாக மாணவர்கள் பாடநெறியை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு வெளியேறியுள்ளனர். உங்கள் குழந்தைகளும் இத்திட்டத்தில் தோற்றுவதற்கு நீங்கள் செய்யவேண்டியது இதுவே!.

இத்திட்டத்தில் 11-16 வயதிற்கிடைப்பட்ட மாணவர்கள் கீழ்க்கண்ட கூப்பனை நிரப்பி கீழ்க்கண்ட முகவரிக்கு 27-06-99 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

பாட நெறிகள்

① Computer literacy
② Word Processing
③ Data base
④ Presentation graphics
⑤ Programming
⑥ Laboratory applications
⑦ Spread sheet
⑧ Computer control technology
⑨ Internet E-mail

இரண்டாண்டு பூர்த்தியை முன்னிட்டு
**பரீட்சைக்கட்டணம் இலவசம்**

Name: .................................... Age: ............
Address: ....................................................
School : ....................................................
Class: .............. Sex: .............. Phone: ..............

முதன்முதலாக புலமைப்பரிசில் மூலம் குழந்தைகளுக்கான கம்யூட்டர் பாடத்தை அறிமுகப்படுத்திய பெருமை எமக்கேயுரியது

**குழந்தைகளின் கணனி உலகம்**
**METRO COMPUTER WORLD**
17, Charlemont Road, Colombo-06.
T.P: 599479, 074-511164 E-mail :mci1@sltnet.lk

முன்பு பரீட்சை எழுதியவர்களும் விண்ணப்பிக்கலாம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# காத்திருந்து நடந்த கரும்புலித் தாக்குதல்

தமது நீண்டகால இலக்கு ஒன்றை மட்டக்களப்பில் புலிகள் தாக்கியழித்துள்ளனர்.

அந்த இலக்கு ராசிக் என்று அழைக்கப்பட்ட முத்துலிங்கம் கணேசகுமார் (35).

இந்தியப் படை காலம் முதல் கிட்டத்தட்ட பத்து வருடங்களாக புலிகள் ராசிக்குக்கு குறிவைத்திருந்தனர்.

இந்தியப் படையோடு ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். இயக்கமும் நாட்டைவிட்டு வெளியேறியது. ஆனால் ராசிக் தனது குழுவுடன் மட்டக்களப்பு காடுகளில் பதுங்கியிருந்து புலிகளுக்கு எதிராக செயற்பட்டார்.

இக்காலத்தில் இலங்கை அரச படைகளுடனும் தொடர்பு ஏற்பட்டது.

ராசிக் கெட்டிக்காரன். தானே முன்னின்று தாக்குதல் நடத்தும் துணிச்சலான ஆசாமி. அதனால் படையினரும் புலிகளுக்கு எதிராக ராசிக்கை பயன்படுத்தினார்கள்.

இடையே சில காலம் இந்தியா சென்றிருந்த ராசிக், மூன்று வருடங்களுக்கு முன்பு மறுபடியும் மட்டக்களப்பு திரும்பினார்.

படையினரின் உதவியுடன் புலிகளுக்கு எதிராக மீண்டும் செயற்படத் தொடங்கியது ராசிக் குழு.

மோட்டார் சைக்கிள்களை பழுதுபார்க்கவும், மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு வந்தால் பார்வையிடவும் ராசிக் நேரடியாகவே செல்லத் தொடங்கினார்.

மட்டக்களப்பு, திருமலை வீதியில் உள்ள கராஜ் ஒன்றுக்குத்தான் ராசிக் அடிக்கடி செல்வதுண்டு.

இந்தக் கராஜ் உரிமையாளரான ஜவர் பறங்கி இனத்தவர். இங்கு வேலை செய்பவர்கள் மட்டக்களப்பு பிரதேசவாசிகள்.

ராசிக்கின் நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த புலிகளுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் ஆகிவிட்டது.

ராசிக்கை தீர்த்துக்கட்ட கராஜ்தான் ஏற்ற இடம் என்று தீர்மானித்துவிட்டனர். கராஜுக்கு ராசிக் வந்து செல்வதை கண்காணிக்க ஏற்பாடு செய்ததுடன், ராகிக்குக்காக என்று கரும்புலி ஒருவரையும் மட்டக்களப்பு நகருக்குள் அனுப்பி விட்டனர்.

இதேவேளை ராசிக் குழுவிக்குள்ளும் புலிகளுக்கு தகவல் சொல்ல ஆள் ஒருவர் இருந்தார். ராசிக் குழு பற்றியும், ராசிக் குழுவுடன் சென்று படை முகாம்கள் பற்றி தகவல் அறிவதும் இவரது வேலை.

அழைத்துக் கொண்டு புலிகளிடம் சென்றவர் ராசிக் குழுவின் சிரேஷ்ட உறுப்பினர். இவர் மூன்று வருடங்களாக ராசிக் குழுவில் இருந்துள்ளார்.

ஆரம்பத்தில் இவர் புலிகளது ஆளாக இருக்கவில்லை. சமீபகாலத்தில்தான் புலிகளுடன் தொடர்பு ஏற்பட்டதாக தெரிகிறது. ஆனாலும் இவர் ராசிக்மீது தாக்குதல் நடத்தி உயிர் இழக்க சித்தமானவரல்ல. அப்படிச் சித்தமாக இருந்திருந்தால் முகாமுக்குள் வைத்தே ராசிக்கை முடித்திருப்பார்கள்.

புலிகளுக்கு தகவல் கொடுத்து தம் உயிரைப் பாதுகாப்பதும், கொடுத்த தகவலுக்கு பிரதியுபகாரமாக எதையாவது பெறுவதுமே அந்த சிரேஷ்ட உறுப்பினரது நோக்கமாக இருக்கலாம்.


ராசிக்

தான் மாட்டுப்படப் போவதை உணர்ந்ததும், தனக்கு நெருக்கமான மேலும் சிலரை அழைத்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டார்.

இது தொடர்பாக முரசு 310இல் செய்தி வெளியாகியிருந்தது. 'முக்கிய தகவல்கள் அம்பலமாகும். ராசிக் குழு உறுப்பினர்கள் புலிகளிடம் ஒட்டம்' என்று செய்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

தார். ராசிக்கின் முதுகுப் பக்கம்தான் கரும்புலி வந்த திசை இருந்தது.

ராசிக்கை நெருங்கியதும் சைக்கிளை விட்டு தடாலென குதித்திருக்கிறார். அந்தச் சத்தம் கேட்டு கழுத்தை திருப்பிய ராசிக்குக்கு தன்னை ஒருவர் நெருங்கியது தெரிந்திருக்க வேண்டும். தனது வலது கையால் கரும்புலியை தள்ளியிருக்கிறார். அதேநேரம் கரும்புலி தன் உடலிலுள்ள குண்டை வெடிக்க வைத்தார்.

ராசிக்கும்,அவருடன் உரையாடிக் கொண்டிருந்த தாஹிர் மற்றும் ராசிக் குழு உறுப்பினரான சேக்குமார் ஆகியோர் அவ்விடத்திலேயே பலியானார்கள். படுகாயமடைந்த தயாபரன் பின்னர் இறந்துபோனார்.

ராசிக்கை கரும்புலி கட்டியணைத்ததாக வந்த செய்திகள் சரியல்ல. கட்டியணைத்திருந்தால் ராசிக்கின் உடலில் எதுவும் மிஞ்சியிருக்காது.

கரும்புலியைத் தள்ளிய ராசிக்கின் வலது கை சிதறியுள்ளது. பின்புறமாக திரும்ப முற்பட்டதால் அவரது உடலின் ஒரு பகுதி திரும்பி முறுகிக் கிடந்தது.

அதே சமயம் கரும்புலியின் உடல் அடையாளம் காண முடியாதளவுக்கு சிதறிப்போனது. தனது முகத்தை அடையாளம் காணாது சிதைக்கும் விதமாக முகத்தையும் தாக்கும் விதமாக குண்டு பொருத்தப்பட்டுள்ளது.

முகத்தை வைத்து அடையாளம் காணும் முயற்சியை முறியடிக்க புலிகள் கையாளும் உபாயம் இது.

கரும்புலியின் உடலை பொறுப்பேற்றது மூலம் தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரியதாகிவிட்டது.

ராசிக்கின் இழப்பு கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். அமைப்புக்கு மட்டுமல்ல, படையினருக்கும் பெரும் இழப்பாகும்.

ராசிக் குழுவை நம்பியே மட்டக்களப்பில் இருந்து சில படைப்பிரிவுகளை வாபஸ் பெற்று வன்னிக் களமுனைக்கு அனுப்பினார்கள்.

ராசிக் தமது உறுப்பினரல்ல என்று அவர் இறந்த பின்னரும் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். அமைப்பின் செயலாளர் அறிக்கை விட்டிருந்தார்.

ஆனால் அது அப்பட்டமான பொய் என்பதை ராசிக்கின் இறுதி நிகழ்வுகள் காண்பித்துவிட்டன.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். மட்டக்களப்பு அமைப்பாளரும், மத்திய குழு உறுப்பினருமான துரைரத்தினம் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அந்த அமைப்பின் தலைவர்களான வரதராஜப் பெருமாள், தம்பிராஜா சுபத்திரன் ஆகியோர் கொழும்பில் இருந்து விரைந்து சென்று அஞ்சலி செய்தனர்.

ராசிக்குக்கும் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் இடையே சிறு பிரச்சனை இருந்தது உண்மை. ராசிக்குழு என்ற பெயரில் இயங்கட்டும், கட்சியின் பெயரை கெடுக்க வேண்டாம் என்று சுரேஸ் கூறிவிட்டார்.

இந்த மூன்று வருடங்களில் ராசிக்கை கொல்வதற்கு பல முயற்சிகளை புலிகள் மேற்கொண்டனர். ஆனால் ராசிக் புலிகளிடம் சிக்காமல் நழுவிக் கொண்டிருந்தார்.

ஆரம்பத்தில் ராசிக் முகாமைவிட்டு வெளியே அதிகம் நடமாடுவதில்லை. அப்படி வெளியே சென்றாலும் கடும் பாதுகாப்புடன் அவதானமாகவே சென்று வந்தார்.

இதனால்தான் மூன்று வருடங்களாக புலிகளால் ராசிக்கை நெருங்க முடியாமல் இருந்தது.

இந்த மூன்று வருடங்களில் ராசிக் குழுவினர் புலிகளுக்கு எதிராக வெற்றிகரமான நடவடிக்கைகள் சிலவற்றையும் மேற்கொண்டிருந்தனர்.

புலிகள்மீது தாக்குதல் நடத்திவிட்டு, புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரது உடலை மோட்டார் சைக்கிளில் கட்டி இழுத்துச் சென்றனர். புலிகள் இயக்க உறுப்பினரது தலையை வெட்டியும் காட்சிக்கு வைத்திருந்தனர்.

இதுதவிர, புலிகளது கட்டுப்பாட்டு பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் பதுங்கியிருந்து சில தாக்குதல்களையும் நடத்தினார்கள்.

அதேசமயம் புலிகளும் ராசிக் குழுவினர் பலரை தீர்த்துக் கட்டியிருந்தனர். ராசிக் மட்டும் புலிகளிடம் சிக்கவில்லை.

ராசிக் அடிக்கடி நடமாடும் இடங்கள், ராசிக் சென்றுவரும் பாதைகள் போன்ற குறிப்பான தகவல்கள் புலிகளுக்கு கிடைக்கவில்லை. ஏனெனில் ராசிக் அவ்வாறான தகவல்களை திரட்டக் கூடியவிதமாக தனது நடமாட்டங்களை வைத்துக் கொள்ளவில்லை.

அதனால்தான் ராசிக்குக்கு எதிராக தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு புலிகள் நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருந்தது.

ஆனால் மெல்ல மெல்ல ராசிக்கின் அவதானமும், விழிப்பும் குறைந்து கொண்டு வந்தது.

மட்டக்களப்பு நகருக்குள் சமீபகாலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் ராசிக்குக்கு அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டதும் விழிப்புக் குறைந்ததுக்கு ஒரு காரணம்.

நகரில் புலிகளை இனம் கண்டு பிடிப்பதும் ராசிக் குழுவின் வேலைதான். தம்மையும், படையினரையும் மீறி நகருக்குள் இனி புலிகள் எதுவும் செய்ய முடியாது என்று நினைத்துவிட்டார் ராசிக்.

அதனால் மோட்டார் சைக்கிள்களிலும் நகருக்குள் வலம்வர ஆரம்பித்தார்.

ராசிக்குக்கு மோட்டார் சைக்கிள்கள் என்றால் வெகு பிரியம். ஒவ்வொரு ரகமாக பயன்படுத்தி பார்க்க ஆசை. இந்த ஆசைதான் அவருக்கு எமனாகியது.

ராசிக் மோட்டார் சைக்கிள் கராஜுக்கு சென்று வருவது பற்றியும் புலிகளுக்கு தகவல் கொடுத்தது இவர்தான்.

பல மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவம் ஒன்று, உள்ளிருந்து சென்ற தகவலுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

புலிகள்மீது தாக்குதல் ஒன்றை நடத்திய ராசிக் குழுவினர், அவர்களது மோட்டார் சைக்கிள்கள் இரண்டை கைப்பற்றினார்கள். அவற்றை உபயோகித்து வந்தனர்.

அதில் ஒரு மோட்டார் சைக்கிள் பழுதுபட்டதால் ஜவர் கராஜில் திருத்துவதற்காக விட்டுவைத்திருந்தனர். இத் தகவல் புலிகளுக்கு போய்ச் சேர்ந்தது. இரவோடு இரவாக வந்து மோட்டார் சைக்கிளை மீட்டுச் சென்றுவிட்டனர்.


குண்டுத் தாக்குதலுக்காக அணியும் உடைகளில் ஒன்று

இத் தகவல் கராஜுக்குள் இருந்து சென்றிருக்கலாம் என்றே ராசிக்குழுவினர் நினைத்தனர். ஆனால் ராசிக் குழுவின் உள்ளிருந்தே தகவல் போயிருக்கிறது.

தமது குழுவுக்குள்ளும் ஊடுருவல் இருக்கலாம் என்று ராசிக்குக்கு சில வாரங்களுக்கு முன்னர் சந்தேகம் ஏற்பட்டது. இதனையறிந்ததும் ராசிக் குழுவில் இருந்து சிலர் ஆயுதங்களுடன் தப்பியோடினார்கள். அவர்களையும்

கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியாக குறிப்பிட்ட கராஜ் புலிகளால் அவதானிக்கப்பட்டது. அப்போது ஹொண்டா 125 மோட்டார் சைக்கிள் ஒன்றை ராசிக் குழுவினர் ஜவர் கராஜில் திருத்த வேலைக்காக கொண்டு வந்து விட்டனர்.

புலிகள் உஷாரானார்கள். ராசிக் எப்படியாவது கராஜுக்கு வருவார் என்று உறுதி செய்து கொண்டு தினசரி அவதானித்து வந்தனர்.

அந்த எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை. தாஹிர் என்பவர் தனது மோட்டார் சைக்கிளை விற்க விரும்பினார். அதனை பார்வையிடவும், திருத்த வேலையில் உள்ள மோட்டார் சைக்கிளை கவனிக்கவும் 29.05.99 அன்று பகல் 11.30 மணிக்கு தனது முகாமில் இருந்து புறப்பட்டார் ராசிக்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ராசிக் உட்பட நான்கு பேர் கராஜுக்கு சென்றனர்.

கராஜில் இறங்கிய ராசிக் தனது குழுவைச் சேர்ந்த பாஸ்கரன், சிவா இருவரையும் மகேஸ் என்பவரை அழைத்துவருமாறு கூறி அனுப்பினார்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்த இருவரும் மகேஸ் இல்லை என்று கூறினார்கள். அதற்குள் ராசிக்குடன் நின்ற இன்னொரு உறுப்பினர் தனக்கு மயக்கம் வருவது போல் இருப்பதாகக் கூற, அவரை முகாமுக்கு செல்லுமாறு அனுப்பிவைத்தார்.

கராஜில் இருந்து நேராக செங்கலடி செல்வது தான் ராசிக்கின் திட்டம்.

செங்கலடிக்கு மகேஸ் என்பவரையும் அழைத்துப் போகவேண்டி இருந்ததால் கராஜில் மேலும் தாமதிக்க வேண்டியிருந்தது.

இந்த தாமதம் ராசிக்குக்காக காத்திருந்த கரும்புலிக்கு தகவல் செல்வதற்கும், அவர் குண்டை உடலில் பொருத்திக் கொண்டு வரவும் போதுமானதாக இருந்தது.

கராஜின் வெளியே வந்த ராசிக் அருகிலுள்ள கடை ஒன்றில் குளிர்பானம் அருந்தினார். பின்னர் கராஜின் முன்பாக தாஹிருடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

அப்போதுதான் கரும்புலி தனது சைக்கிளில் ராசிக்கை நோக்கி வந்து கொண்டிருந்

கராஜில் இருந்து ராசிக் அரைமணிநேரத்திற்குள் புறப்பட்டிருந்தால் இத் தாக்குதல் நடந்திருக்க வாய்ப்பில்லை.

ஆனால் நண்பகல் 11.40 அளவில் கராஜிக்கு வந்த ராசிக் தாக்குதலுக்கு உள்ளாகும்போது நேரம் பகல் 1.05. இரண்டு மணி நேரமாக ஒரே இடத்தில் தரித்து நின்றுள்ளார்.

தகவல் கராஜிக்குள் இருந்து சென்றிருக்கலாம் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

ஆனால் இது வழக்கமான சாதாரண சந்தேகம். ராசிக் வந்ததும் கராஜிக்குள் இருந்து யாரும் புறப்பட்டு போனதாக தெரியவில்லை.

**'புலிகளை ஒழித்துக்கட்டியே தீருவேன்' என்று பி.பி.சி. பேட்டியில் ராசிக் கூறிய சில நாட்களில் அவரை புலிகள் அழித்து விட்டனர்!**

ராசிக் குழுவின் உள்ளிருந்து கிடைத்த தகவலை வைத்தே, மிகக் கவனமாக காத்திருந்து, அவதானித்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் புலிகளுக்கு பெரும் வெற்றியே. தமிழ் இயக்க பிரமுகர் ஒருவர்மீது கரும்புலித் தாக்குதலை புலிகள் நடத்தியதும் இதுதான் முதற் தடவை.

கிடைக்கும் சந்தர்ப்பத்தை தவறவிடாது காரியத்தை முடிக்க வேண்டும் என்பதாலேயே கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதுதவிர நகருக்குள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் செல்வதும் கடினம். ராசிக் திறமைசாலி என்பதால் சூட்டில் இருந்து பாய்ந்து, பதுங்கி தப்பிக் கொள்ளவும் கூடும். அதன் பின்னர் ராசிக்கை எதிர்கொள்ள ஏற்ற இடம் கிடைப்பதும் அரிது.

ராசிக்மீதான தாக்குதலுக்கு புலிகள் இதுவரை உத்தியோகபூர்வமாக உரிமை கோரவில்லை. ஆனால் புலிகளின் குரல் வானொலியில் பின்வருமாறு அறிவிக்கப்பட்டது:

"ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். தேச விரோத கும்பலைச் சேர்ந்த ராசிக் குண்டுவெடிப்பொன்றில் கொல்லப்பட்டார். இவர் கொல்லப்பட்டதை அடுத்து மட்டக்களப்பு மக்கள் மகிழ்ச்சியும் நிம்மதியும் அடைந்துள்ளனர்." என்று புலிகளின் குரல் கூறியது.

கரும்புலியாக வந்தவர் மட்டக்களப்பு சந்திவெளியைச் சேர்ந்தவர் என்று ஒரு தகவல் கூறுகிறது. அவர் சுதாகரன் என்றும் அழைக்கப்படுவர் எனவும் கூறப்படுகிறது. ஆனால் இது இன்னமும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. கரும்புலியின் உடல் சிதைவுகளை புலிகளிடம் ஒப்படைத்ததும், புலிகள் அதனை பொறுப்பேற்றதும் இதுவே முதற் தடவையாகும்.

ராசிக் குழு என்ற பெயரில் இயங்கினாலும், மட்டக்களப்பு ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப் அமைப்பின் செலவுகளுக்கு ராசிக்தான் பணம் கொடுத்து வந்தார். மட்டக்களப்பில் ராசிக் குழுதான் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். அமைப்பின் காப்பாளர்கள் என்பது மட்டக்களப்பு மக்களுக்கு நன்கு தெரியும்.

ராசிக் காரைதீவைச் சேர்ந்தவர். அண்மையில் காரைதீவில் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னின்றதும் ராசிக்தான்.

இத்தனைக்கும் மேலாக ராசிக் இறப்பதற்கு சிலநாட்களுக்கு முன்னர் இலண்டன் பி.பி.சி தமிழோசைக்கு அவர் பேட்டியளித்திருந்தார்.

புலிகளை ஒழித்துக் கட்டுவதே தனது நோக்கம் என்றும், அதற்காகவே செயற்பட்டு வருவதாகவும் கூறிய ராசிக், தான் இப்போதும் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். இயக்கத்தில் இருப்பதாகவே கருதுவதாக கூறியிருந்தார்.

ராசிக்கை கொன்ற புலிகளை சுரேஸ் கண்டித்திருக்கிறார். ஆனால் ராசிக் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். அல்ல என்று தெரிவித்தது மூலம் ராசிக்கை பொய்யராக்கி விட்டார்.

ராசிக்கின் பணம், ராசிக்கின் உதவிகள் போன்றவை ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப்.புக்கு தேவையாக இருந்தது. ராசிக் இறந்தபோது தமது தோழர் என்று உரிமை கோர மட்டும் வெட்கமாக இருந்துள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப்.புக்குள் சுரேசின் எதிர் அணியினர் மட்டும் ராசிக்கை தமது தோழராக ஏற்றுள்ளனர்.

துணைப்படையைச் சேர்ந்தவர் என்று ராசிக்கை கூறுவதால் அவர் இயக்க உறுப்பினர் அல்ல என்று அர்த்தமாகாது.

படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ்க் கட்சிகளுக்கு பாதுகாப்பு அமைச்சு நிதி உதவி செய்து வருகிறது, அந்த நிதி உதவியை தேசிய துணைப்படை பிரிவுக்கான நிதி என்ற பெயரிலேயே வழங்கி வருகிறது. அவ்வாறுதான் ராசிக் குழுவுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். என்ற பெயரில் பகிரங்கமாக செயற்பட்டால் பெயர் கெடும் என்று பிரச்சனை இருந்தமையால், துணைப் படைப் பிரிவு என்ற பெயரை ராசிக் பயன்படுத்திக் கொண்டார்.

இதனை புரிந்து கொள்ளாமல் ராசிக் குழுவுக்காக மட்டும் துணைப்படைப் பிரிவு என்ற ஒன்று உருவாக்கப்பட்டது போல செய்திகள் வருகின்றன.

எப்படியோ ராசிக்கின் கதை அரசியல் அநாதையாக, முடிந்திருக்கிறது. அவரது உடலைப் போர்க்க கட்சிக் கொடிகூட இல்லாமல், சிறீலங்கா தேசியக் கொடியால் போர்த்தப்பட்டிருந்தது.

இந்தக் கொடியைத்தான் வடக்கு-கிழக்கு மாகாணசபையில் ஈழப் பிரகடனம் செய்த போது அந்நியக் கொடி என்று ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப்.குழுவினர் தீமிட்டு எரித்திருந்தனர்.

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



**யாழ் குடாநாட்டில்** அரச நிர்வாகத்தை இரண்டு எழுத்தார் தடுத்தவை. அதற்குள் மூக்கை நீட்டிய தமிழ்க் கட்சிகள், தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள சபைகள் நன்கு இயங்குவதாக அறிக்கை விட்டவை. இதில் கழகத்தினரின் சபைகள் இன்னமும் இயங்கவே தொடங்கவில்லை. பின்னர் எப்படி இயங்கியதாகக் கூறியவை? இப்படியும் சவாலுக்கு அறிக்கை விட்டுக் கொண்டு, உள்ளூராட்சிசபை ஆட்களை ரெண்டு எழுத்தார் சுடுவது சகோதரப் படுகொலை என்று புலம்புவதில் என்ன பயன்? அப்படி சவாலுக்கு அறிக்கை விடுவது என்றால் ரெண்டு எழுத்தார் எதிரிகள் என்றுதானே அர்த்தம். பிறகென்ன சகோதரர்கள்? எதிரிகளை எதிர்க்கவும் தயாராய்த்தானே இருக்க வேணும்?!

**ஆயுதக் குழுக்களோடு** ஒட்டும் இல்லை; உறவும் இல்லை என்று கூட்டான கட்சியினர் அறிக்கை விடுவது தெரியும்தானே? ஆனால் தேனகத்தில் பலியானவரது இறுதிச் சடங்கில் கூட்டான கட்சிப் பிரமுகரும் ஆஜராகி அஞ்சலி செலுத்தியிருக்கிறார்.

**வவுனியாவில்** இயக்க மோதலால் சனத்துக்குள் வெறுப்பு இருக்குதாம். அதனால் அடுத்த முறை அங்கு இரண்டு ஆசனத்தையாவது கைப்பற்றுவது உறுதி என்று தன் சகாக்களுக்கு உறுதி கூறியுள்ளாராம் ஒரு கட்சிப் பிரமுகர். அதுவரை கழகத்தை பகைத்துக்கொள்ளக் கூடாது என்றும் உபதேசித்தாராம். அதனால் அங்கு ஊர்வலம் நடத்த முன்பாக கழக மாணிக்கத்தோடு பேசி தாஜா பண்ணினாராம். வாழ்க ஒற்றுமை!

**யாழ் குடாநாட்டில்** பிரசித்திபெற்ற ஆலய திருவிழாக்கள் நடந்தன. இந்து, கிறிஸ்தவ பண்டிகைகள், விசேஷ நாட்கள் பல வந்தன. ஊரடங்கு சற்றும் தளரவில்லை. வந்தது வெசாக்! இரண்டு நாட்களுக்கு யாழில் ஊரடங்கு தளர்வு! சபாஷ்! குடாநாட்டு மக்களுக்கு இத்தால் அறியத்தந்தது யாதெனில், "இது ஒரு பௌத்த நாடு!" அதுசரி- குடாநாட்டை விடுவித்ததாக கூறியது வெசாக் கொண்டாடத்தானோ?!

**மதுபானக் கடைகளுக்கு** மூடுவிழா என்று அறிவிக்கப்பட்ட நாட்களில்தான் மதுபான விற்பனை முன்பைவிட பன்மடங்கு அதிகமாக இருந்ததாம். மதுபானக் கடை உரிமையாளர்கள் முகவர்கள் மூலம் கறுப்புச் சந்தையில் கொள்ளை விலையில் விற்றுத் தீர்த்தனராம். குடிமக்களும் தீர்த்தமாடினராம்!

**இது கிரிக்கெட் திருவிழாக்** காலம் என்பதால், காதில் விழுந்த சங்கதிகளைத் தருகிறேன். நமநாட்டு அணித் தலைவருக்கும், அதிகாரமுள்ள சக்தியானவருக்கும் இடையே பனிப்போர். 'இம்முறை கிண்ணத்தோடு வருவோம். ஆனால் மாளிகைக்குச் சென்று வாழ்த்துப்பெற மாட்டோம்.' என்று கூறிவிட்டுத்தான் அணித்தலைவர் சென்றாராம். ஆனால் கிண்ணம்தான் எண்ணத்துக்கு மாறாக கைநழுவிப் போய்விட்டது.

**கிரிக்கெட் அணி** உபதலைவரது விளம்பரச் சுவரொட்டிகளுக்கு தலைநகரில் சாணியடிப்பு நடந்திருக்குது. அவரது உணவகத்துக்குள் புகுந்து ஒரு கும்பல் உடைப்பு நடத்திவிட்டு சில இலட்சம் ரூபாய்களையும் அபேஸ் பண்ணியது அதன் பின்னர்தான்!

**சனத்துக்கு யுத்தம்** பற்றிக் கூட இத்தனை கவலையில்லைப் பாருங்கோ. சுப்பர் சிக்ஸுக்கு அணி போகவில்லை என்றதும் துக்கதினம் மாதிரி தென்பகுதி இருண்டு போச்சுது! வெசாக்கூட கலகலப்பு இல்லாமல் போச்சுது!

**கொழும்பில்** கீரை விற்கும் ஆச்சி ஒருவர் சந்தோசத்தில் இருந்தாராம். வாடிக்கையாளரிடம், "நேற்று போட்டி பார்த்தியளோ?" என்று கேட்டாராம். ஆச்சி இலங்கை அணிக்கு ஆதரவானவர் என்ற நினைப்பில், வாடிக்கையாளரும், கவலையோடு "ஓமோம் ஆச்சி, இலங்கை தோற்றுப் போச்சு!" என்றாராம். ஆச்சியின் முகம் சுருங்கிப்போச்சு. "நீங்கள் இந்தியாவுக்கு ஆதரவு என்று நினைச்சல்லோ கதைச்சுப்போட்டேன்!" என்றாராம். பாவம், அந்த வாடிக்கையாளருக்கு தர்மசங்கடமாகப் போச்சு. இத்தனைக்கும் அவரும் இந்திய அணி இரசிகர்தானாம்!

**இந்த வாரப் பொன்மொழி**

"வீரம் என்பது
பத்து என்றால்
அதில் ஒன்பது
தந்திரமாகும்!"


படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை


# கொழும்பை அதிரவைத்த குண்டுத் தாக்குதல்!

கொழும்பில் வைத்து பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரான ரஞ்சன் விஜயரத்னாவை தீர்த்துக்கட்டிய பின்னர், அடுத்த இலக்கை புலிகள் குறித்தனர்.

வடக்கு-கிழக்கு இராணுவ நடவடிக்கைக்கு அப்போது ஜே.ஒ.சி. என்றழைக்கப்படும் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகமே பொறுப்பாக இருந்தது.

கூட்டுப்படைத் தளபதியாக இருந்தவர்




ஹமில்டன் வனசிங்கா.

கொழும்பு பிளவர் வீதியில் ஜே.ஒ.சி. தலைமையகம் அமைந்திருந்தது.

தற்போது உள்ளதைப்போல முக்கிய அலுவலகங்களுக்கு முன்பாக பாரிய வாகனத் தடைகளோ, காவல் அரண்களோ அப்போது இருந்ததில்லை.

ஆனாலும் கொழும்பில் ரஞ்சன் கொல்லப்பட்ட பின்னர் தேடுதல்கள் வாகனச் சோதனைகள் என்பவை மேற்கொள்ளப் பட்டு வந்தன.

அவற்றின் மத்தியிலும் ஜே.ஒ.சிக்கு குறிவைத்தனர் புலிகள். முப்படைகளது மூளையாக கருதப்படும் ஜே.ஒ.சி. தலைமையகத்தை தகர்ப்பது மூலம் தமது பலத்தை காட்ட புலிகள் திட்டமிட்டனர்.

ரஞ்சன் விஜயரத்தினாவின் குண்டுத் தாக்குதலுக்கு பொறுப்பாக செயற்பட்ட வரதனிடமே ஜே.ஒ.சி. தாக்குதல் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது.

தகவல்கள் திரட்டப்பட்டு தாக்குதலுக்கான திகதியும் குறிப்பிடப்பட்டது.

20.06.1991 அன்றுதான் தாக்குதலுக்கான நாளாக தெரிவு செய்யப்பட்டது.

வெடிமருந்து நிரப்பப்பட்ட வேனுடன் சென்று ஜே.ஒ.சிக்குள் புகுந்து இடிப்பது தான் திட்டம்.

கரும்புலித் தாக்குதலாகவே இதுவும் திட்டமிடப்பட்டது. தாக்குதலுக்கு தெரிவான கரும்புலியின் பெயர் சந்திரன். வயது 21, வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்.

18.06.91 அன்றுதான் சந்திரன் கொழும்புக்கு வந்து சேர்ந்தார். வவுனியாவில் இருந்தே வந்திருந்தார்.

19.06.91 அன்று நீலநிற இசுசு வேனில் குண்டு பொருத்தப்பட்டது. வரதன்தான் குண்டை பொருத்தினார். கொழும்பில் வரதனுக்கு அறிமுகமான வீடொன்றில் வைத்தே குண்டு பொருத்தப்பட்டது.

20ம் திகதி காலையில் தாக்குதலுக்கு தயாரானபோது எதிர்பாராத தடங்கல் ஏற்பட்டு, மறுநாளைக்கு ஒத்திபோடப்பட்டது.

21.06.91 காலையில் வெடிமருந்து நிரப்பப்பட்ட வேனை வரதன் செலுத்தி வந்து பிளவர் வீதிக்கு சமீபமாக காத்து நின்ற சந்திரனிடம் ஒப்படைக்கிறார்.

குண்டு எங்கு வைத்துப் பொருத்தப்பட்டது என்பதோ, வரதனின் மறைவிடம் பற்றியோ சந்திரனுக்கு தெரியாது.

சந்திரனை வேறு ஓர் இடத்தில் தங்க வைத்திருந்தார் வரதன். அனைத்தும் புலிகளது இரகசிய வேலை முறையின்படியே நடைபெற்றன.

## குண்டோசை

சந்திரனிடம் வேனை ஒப்படைத்த வரதன், வேனின் பின்னால் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டார்.

குண்டு வேன் பிளவர் வீதியில் கூட்டுப்படை தலைமையகத்தை நெருங்கும் வரை வரதன் மோட்டார் சைக்கிளில் தொடர்ந்து சென்றார்.

தளப்பொறுப்பாளரான வரதனுக்கு கையசைத்துவிட்டு சந்திரன் வேனை வேகமாக ஓட்டிச் சென்றார்.

அதன்பின்னர் நிமிடங்கள் சில கரைந்த போது, மாபெரும் குண்டுச் சத்தத்தால் கொழும்பு அதிர்ந்தது.

காலை 9.58 மணியளவில்தான் அந்த குண்டோசையின் அதிர்வு கேட்டது.

ஜே.ஒ.சி.யின் முன்புற மதிலின் அருகிலேயே குண்டுவேன் வெடித்துவிட்டது.

இதனால் ஜே.ஒ.சியின் முன்புறப்பகுதி தரைமட்டமானது. எங்கும் ஒரே புகை மண்டலமாக காட்சியளித்தது.

இடிபாடுகளுக்குள் சிக்கிய இராணுவத்தினர் பலியானார்கள். அச்சமயம் வீதியால் சென்றவர்களும் பலியானார்கள். உள்ளே நின்ற பல வாகனங்களும் நாசமாகின.

அயலிலுள்ள 50 வீடுகள் வரை பலத்த நாசமடைந்தன. மேலும் பல வீடுகளது சன்னல் கண்ணாடிகள் சிதறின.

இராணுவத்தினர் உட்பட 60 பேர் பலியானதாகவும், 150ற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் ராய்டர் செய்தி கூறியது.

70 கிலோ வரையான வெடிமருந்து பயன்படுத்தப்பட்டதாக விசாரணையாளர்கள் கூறினார்கள்.


குண்டுத்தாக்குதலின் பின்னர்

## பிறந்தநாள் பரிசு

ஜே.ஒ.சியில் குண்டு வெடித்த மறு நாள்தான் ஜனாதிபதி பிரேமதாசாவின் பிறந்த நாள்.

அதனால் பிரேமதாசாவுக்கு பிரபாகரன் கொடுத்த அதிர்ச்சிகரமான பிறந்தநாள் பரிசாகவும் அத் தாக்குதல் அமைந்தது.

இத்தாக்குதலை அடுத்து கொழும்பில் அரசுக்கு எதிராக பாரிய கண்டனங்கள் எழத் தொடங்கின.

சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் சீறி எழுந்தன. கொழும்புக்குள் ஜே.ஒ.சி. வரை புலிகள் வந்துவிட்டனர். அரசு புலிகளை ஒடுக்கத் தவறிவிட்டது என்பதே அவர்களது குற்றச்சாட்டு.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியது:

'முப்படை தலைமையகத்தை சுடுகாடாக மாற்றிவிட்ட இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் மூலம் வடக்கு, கிழக்குப் போர் தலைநகருக்கும் நீண்டுவிட்டது' என்பது உண்மையாகிவிட்டது.

'ஐயோ பாவம்' என்று அங்கலாய்ப்பதை விட, உலகத்தின் மிக ஆபத்தான பயங்கரவாதக் குழுக்களில் ஒன்றான விடுதலைப் புலிகளுடன் நாம் மோதுகிறோம் என்ற உண்மை பலருக்கு உறைத்ததாகத் தெரியவில்லை.

கவனமாகக் குறித்துக் கொள்ளுங்கள். விடுதலைப் புலிகள் மிகக் கொடிய பயங்கரவாதிகள்.

அவர்களுக்கு எதிரான இந்த யுத்தம் அரை மனதுடன், பகுதி நேர அடிப்படையில் நடத்தப் பட்டால் நாம் வெற்றி பெறுவது பகல் கனவு. 1983 கலவரத்தின் பின்னர் இந்த யுத்த வேகம் அதிகரித்துக்கொண்டே போகிறது!" என்று அத் தலையங்கம் தொடர்ந்தது.

'பெரும் அவமானம்' என்ற தலைப்பிலேயே அத் தலையங்கம் தீட்டப்பட்டிருந்தது.

## புலிகள் கூறியது

கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் தாக்கப்பட்டதற்கு புலிகள் உரிமை கோரவில்லை.

இத் தாக்குதல் தொடர்பாக புலிகளது அன்றைய பேச்சாளர் யோகரத்னம் யோகி பின்வருமாறு கூறியிருந்தார்:

"இத் தாக்குதலுக்கு யார்" காரணமாக இருந்தாலும், இத் தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகளாகிய நாம் சந்தோசம் கொள்ளுகிறோம்!"

இத்தாக்குதலைக் கண்டித்த பத்திரிகைகளையும், தமிழ்க் கட்சிகளையும் 'உலகத் தமிழர்' பத்திரிகை பின்வருமாறு சாடியிருந்தது.

"இந்திய அமைதிப்படையை சிறீலங்கா அரசு வாயால் வெளியேற்றிக்கொண்டு இருந்தபோது, தங்கள் உயிரைக் கொடுத்து அவர்களை எதிர்த்துப் போராடியவர்கள் விடுதலைப் புலிகள். அப்போது தேசப் பக்தர்களாக சிங்கள மக்களது கண்ணில்பட்ட புலிகள் இப்போது பயங்கரவாதிகளாகத் தெரிகிறார்கள்.

விடுதலைப் புலிகளது போராட்டம் அரச பயங்கரவாதத்துக்கு எதிரான ஒரு தேசிய இன எழுச்சி என்ற உண்மையை படித்த சிங்கள புத்திஜீவிகளால்கூட ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

சிறீலங்கா அரசு போடும் சலுகையில் வாழ்ந்து கொண்டு பத்திரிகை அறிக்கைகள் மூலம் உயிர் வாழும் தமிழ்க் குழுக்களும் சிறீலங்கா அரசுக்கு ஆறுதல் கூறியுள்ளன" என்று சாடியிருந்தது.

இவையெல்லாம் உரிமை கோராது விட்டாலும் தாக்குதலுக்கு யார் காரணம் என்பதை மறைமுகமாக வெளிப்படுத்தின.

## பாதுகாப்பு

ஜே.ஒ.சி.தாக்குதலால் 150 மில்லியன் (15 கோடி)நஷ்டம் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டது.

இத் தாக்குதல் ஏற்படுத்திய கிலியால் கொழும்பில் பாராளுமன்றம், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி இல்லம் போன்றவற்றுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இக் குண்டு வெடிப்பால் கொழும்பு உயர் மட்டத்தினர் திகிலுற்றனர். தமது குடிமனைகள் மத்தியில் படையினரின் அலுவலகங்கள் இருக்கக்கூடாது என்று கூறத்தலைப்பட்டனர்.

## கைதுகள்

கொழும்பில் நூற்றுக்கு மேற்பட்டோர் கைதாகி விசாரணை செய்யப்பட்டனர்.

விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. புலிகளது உறுப்பினர் சிலர் கைதாகினர்.

அவர்கள் மூலம் வரதன் பற்றிய தகவல் கசிந்தது. வரதனை வலை விரித்து தேட ஆரம்பித்தனர்.

கொழும்பு நகரில் வீடியோ கடை ஒன்றிலேயே வரதன் வேலை பார்த்து வந்தார். அக் கடை உரிமையாளரும் கைதானார்.

தமது உறுப்பினர்கள் சிலர் கைதானதுமே வரதன் உஷாராகிவிட்டார். அதனால் முன்னைய இருப்பிடத்தைவிட்டு நழுவிவிட்டார்.

(தொடர்ந்து வரும்)

# "பெரிய கட்சிகள் பதுங்கிக்கொண்டன"

*ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை தூக்குமேடையில் இருந்து காப்பாற்றியதில் திரு.நெடுமாறனின் பங்கு முக்கியமானது. தமிழர் தேசிய இயக்கத் தலைவரான நெடுமாறன் தமிழக ஜூனியர் விகடனுக்கு அளித்த பேட்டியிலிருந்து...*

*"நீங்கள் பழம்பெரும் காங்கிரஸ்காரர். காமராஜருக்கு அடுத்தபடியான தமிழகத் தலைவராக இந்திரா காந்தியோடு நெருக்கமாக இருந்தீர்கள். இந்திராவின் மகனைக் கொன்றவர்கள் என்று கருதப்பட்டவர்களையே காப்பாற்றும் வேலையில் இறங்கியது எப்படி?"*

"நான் ஒரு தமிழன் என்ற முறையில் சக தமிழர்களைக் காப்பாற்ற முயற்சித்தேன். இவர்கள் எல்லாம் நிரபராதிகள் என்று மனதார நம்பினேன். சி.பி.ஐ-யால் ஜோடிக்கப்பட்ட வழக்குக்கு இவர்கள் பலியானார்கள். முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியே விசேஷ நீதிமன்றத்தின் தீர்ப்பை ஜூடிஷியல் மஸாக்கர் என்று விமரிசிக்கிறார்.

கேரளா, ஆந்திரா, டெல்லி போன்ற பல இடங்களிலிருந்த மனித உரிமை அமைப்புகள், பூந்தமல்லி தனி நீதிமன்றம், இருபத்தாறு பேருக்கும் தூக்குத் தண்டனை கொடுத்ததை எதிர்த்து குரல் கொடுத்து ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதின. ஆனால், தமிழ்நாட்டில் ஒரு கட்சிகூட இதுபற்றிப் பேசவில்லை. பேசப் பயந்தன என்பதே உண்மை.

இதன் பின்னர்தான் 'தமிழர் உயிர் காப்பு வழக்கு நிதிக்குழு' என்ற கமிட்டி அமைக்கப் பட்டது. அனைத்துக் கட்சிகளையும் பல்வேறு தமிழ் அமைப்புகளையும் முறைப்படி இந்த கமிட்டியில் இடம் பெற நாங்கள் அழைத்தோம். ஆனால், தமிழர்கள் மீது பற்றுள்ளதாகக் காட்டிக் கொள்ளும் பெரிய கட்சிகள் எங்கள் அழைப்பை மதிக்கவில்லை.

சில சிறிய கட்சிகளும் சிறிய அமைப்புகளும் தான் பற்றுதலுடன் பங்கெடுத்துக் கொண்டன. இதில் பங்கெடுத்த அமைப்புகள் மட்டுமன்றி பொதுமக்களும் ஏராளமாக நிதி உதவி செய்தனர். சில பெண்களே தங்களுடைய தாலி, வளையல்கள், மோதிரங்களைக்கூட கழற்றிக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

இப்படி வசூலான நிதியைக் கொண்டுதான் உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்யத் தயாரானோம். உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கில் யாரை வாதாட வைப்பது என்பதிலும் ஏராளமாக யோசனை செய்தோம்.

வட இந்தியாவில் குறிப்பாக டெல்லியில் உள்ள பிரபல கிரிமினல் வழக்கறிஞர்கள் வாதாட முன்வந்தனர். ஆனால், இவர்கள் எல்லாம் தமிழ் உணர்வுடன் கடைசி வரை எங்களுக்கு ஒத்துழைப்பார்களா அல்லது அரசியல் குறுக்கீடுகளுக்கு ஆட்பட்டு தடம் புரளுவார்களா என்ற சந்தேகம் எங்களுக்கு எழுந்தது.

இந்த வழக்கில் ஏற்கனவே எங்களுக்காக ஆஜராகி வந்த என்.சந்திரசேகரன், தன்னுடைய சீனியர் என். நடராஜன்தான் இதில் பொருத்தமானவர் என்று சொல்லவே அவரை நாடினோம்.

எங்கள் தரப்பில் உள்ள நியாயத்தை எடுத்துச் சொல்லியபிறகு நடராஜன் வாதாட ஒப்புக்கொண்டார். சந்திரசேகர் மட்டுமல்லாது அவரிடம் பயிற்சி பெற்ற குணசேகரன், குணசீலன் போன்றவர்களும் விசேஷ நீதிமன்றத்தில் இதே வழக்கில் ஆஜராகி இருந்தனர். இதனால் நடராஜன் 'என்னுடைய பிள்ளைங்க அப்பியர் ஆன கேஸ் என்பதால் நான் கண்டிப்பாக ஆஜர் ஆகிறேன்' என்று சொல்லி ஏற்றுக் கொண்டார்.


பிரபாவுடன் நெடுமாறன்

இருபத்திரண்டு பேருக்கு தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதே மிகப் பெரிய சாதனை. எந்தப் பெரிய வழக்கிலும் இந்த அளவுக்கு தீர்ப்பு மாற்றிக் கொடுக்கப்பட்டதில்லை.

அதுவும் தவிர இந்திய விடுதலைப் போராட்டத்தில்கூட எந்த அமைப்புகளும் நிதி திரட்டி வழக்குகளை நடத்தவில்லை. இப்படிப்பட்ட ஒரு சாதனையில் பெரிய கட்சிகளின் பங்களிப்பு இல்லாதது மட்டுமல்ல... தீர்ப்பு வந்த பிறகுகூட இவர்கள் வாயைத் திறக்க அஞ்சுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது!"

*"இந்தியாவில் தடை செய்யப்பட்ட எல்.டி.டி.ஈ. இயக்கத்துக்கு நீங்கள் பரிவு காட்டியது எந்த வகையில் சரி...?"*

"எல்.டி.டி.ஈ. தடை செய்யப்பட்டதையே நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அரசியல் உள்நோக்கோடு அந்தத் தடை போடப்பட்டது. அடுத்து, குற்றம் சாட்டப்பட்டவர்கள் எல்.டி.டி.ஈ. இயக்கத்தினர்தான் என்று எதை வைத்துச் சொல்லுகிறீர்கள்? இவர்கள் எல்லாம் எல்.டி.டி.ஈ.தான் என்பதற்கு சி.பி.ஐ. என்ன ஆதாரங்களை கோர்ட்டில் வைத்தது? சி.பி.ஐ.க்கு இலங்கை அரசு கொடுத்த ஆவணங்கள் உண்மையாக இருக்குமா? 'சத்தியமேவ ஜெயதே' என்று முன்பு சொன்ன கார்த்திகேயனை இந்தத் தீர்ப்புக்கு பின்னர் காணவில்லை!

கார்த்திகேயனுக்குக் கொஞ்சமாவது ரோஷம் இருந்தால் தற்போது அவர் வகிக்கும் பதவியை (தலைவர்-மனித உரிமை கமிஷன்) ராஜினாமா செய்துவிட்டு வீட்டுக்குப் போக வேண்டும்."

*"உங்கள் குழு கணக்குக் காட்டிய நிதி, வசூல் மூலம் வந்தது அல்ல... எல்.டி.டி.ஈ. சம்பந்தப்பட்டவர்கள் அனுப்பிய நிதிதான் என்று சொல்லப் படுகிறதே?"*

"இப்படிச் சொல்லுபவர்களுக்கெல்லாம் நான் பதில் சொல்ல விரும்பவில்லை. எந்த நேரமும் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு மத்திய-மாநில அரசின் அமைப்புகளும் பல்வேறு புலனாய்வு அமைப்புகளும் என்னையே சுற்றிக் கொண்டு இருக்கிறதே... இவர்களையெல்லாம் மீறி நான் விடுதலைப்புலி தரப்பிலிருந்து நிதியைப் பெற்றிருக்க முடியுமா? அப்படி வாங்கியிருந்தால் ஏன் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை?

தவறே செய்யாத பத்தொன்பது பேர்களுக்கு மரண தண்டனை வாங்கிக் கொடுத்தவர்கள்தான் இப்படி அபாண்டமாகச் சொல்லிக்கொண்டு இருக்கின்றனர்!"



படிப்பகம

www.padippakam.com

# தீர்ப்பும் - திருப்பங்களும்

## அலசுவது - இராஜதந்திரி

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு விடுதலைப் புலிகளுக்கு பல வகைகளில் சாதகமாக அமைந்துள்ளது.

முன்னர் 26 பேருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது, குற்றங்கள் நிரூபிக்கப்பட்டே தீர்ப்பு வழங்கப்பட்டதாக இந்தியாவெங்கும் நம்பப்பட்டது.

அந்த எண்ணத்தை உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு தகர்த்தெறிந்திருக்கிறது.

26 பேருக்கும் தனி நீதிமன்றம் தூக்குத் தண்டனை கொடுத்திருந்த நிலையில், அதில் பத்தொன்பது பேர் உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டமை பெரும் அதிர்ச்சியாகவும் அமைந்திருக்கிறது.

தனி நீதிமன்றமும், விசேட புலனாய்வுக் குழுவும் தகுந்த ஆதாரம் இன்றி அப்பாவிகளைத் தண்டிக்க முனைந்திருக்கின்றன என்பதே அந்த அதிர்ச்சிக்கு காரணமாகும்.



விடுதலையாகிவரும் சுபாசுந்தரம்

இந்த அதிர்ச்சியின் விளைவை தமக்கு சாதகமாக அறுவடை செய்வதில் தமிழகத்தில் உள்ள புலிகளது ஆதரவாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

'ராஜீவ் கொலை பயங்கரவாதச் செயல் அல்ல என்றும், இக் கொலையில் விடுதலைப் புலிகளது தொடர்பு நிரூபிக்கப்படவில்லை' என்றும் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருக்கிறது. இக் கூற்று புலிகளது ஆதரவு சக்திகளுக்கு தெம்பைக் கொடுத்திருக்கிறது.

ராஜீவ் காந்தியும் அவரது தலைமையிலான அரசும் இலங்கைக்கு இந்தியப் படையை அனுப்பியதும், அப்படை அமளிப் படையாக மாறியதும் தமிழக மக்களிடையே கண்டனங்களையே தோற்றுவித்திருந்தது.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோது சிறந்த தலைவர் ஒருவரை கொன்றுவிட்டார்களே என்ற கோணத்தில் அல்லாது, தமிழக மண்ணில் வைத்து இப்படியொரு காரியத்தை செய்துவிட்டார்களே என்ற கோணத்தில்தான் தமிழ்நாட்டில் எதிர்ப்புணர்வு ஏற்பட்டிருந்தது.

தமிழக பத்திரிகைகள் சில கற்பனையாக வெளியிட்ட தகவல்களும் அந்த எதிர்ப்புணர்வை தக்கவைத்திருந்தன.

ராஜீவ் காந்தியை மட்டுமன்றி தமிழக அரசியல்வாதிகள் சிலரையும் தீர்த்துக்கட்ட புலிகள் திட்டமிட்டிருந்தனர் என்று அப்பத்திரிகைகள் தகவல் வெளியிட்டன.

தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியை கொலை செய்யப் புலிகள் திட்டமிட்டுள்ளதாகவும் இந்திய புலனாய்வுத்துறை கதை கட்டிவிட்டிருந்தது.

தி.மு.க.வுக்குள் பிளவை ஏற்படுத்தவே அப்படியொரு கதையைக் கட்டிவிட்டதோடு, வை.கோ.மீது அபாண்டமான பழியையும் சுமத்தியிருந்தனர்.

ஒரு காலத்தில் புலிகளுக்கு அதிக ஆதரவு கொடுப்பது யார் என்பதில் தி.மு.க, அ.தி.மு.க ஆகிய இரு கட்சிகளுக்கிடையேயும் போட்டி நிலவியது.

இப் போட்டியானது புலிகள்மீது கொண்ட கரிசனத்தால் ஏற்பட்ட ஒன்றல்ல. புலிகளுக்கு உதவுவது மூலம் தாமும் இனஉணர்வு உள்ளவர்கள் என்று தமிழக மக்களிடம் நிரூபிக்க அக் கட்சிகள் முயன்றன.

இதே கட்சிகள் ராஜீவ் கொலையின் பின்னர் புலிகளுக்கு எதிரான அதிருப்திகளை கண்டுவிட்டு, தாமும் புலிகளை எதிர்த்துப் பேசத் தலைப்பட்டன.

அது மட்டுமன்றி தமது அரசியல் போட்டா போட்டிகளுக்கும் புலிப்பூச்சாண்டி காட்ட ஆரம்பித்தன.

வை.கோ.வை தமது கட்சியில் இருந்து தூக்கியெறிந்துவிட்டு, தனது மகன் மு.க.ஸ்டாலினிடம் கட்சியை ஒப்படைக்க கலைஞர் கருணாநிதி தீர்மானித்திருந்தார்.

புலிப்பூச்சாண்டி காட்டியே வை.கோவை கட்சியில் இருந்து தூக்கி எறிந்திருந்தார்.

செல்வி ஜெயலலிதாவும் தி.மு.க.அரசை கலைக்க வைப்பதற்கு புலிப்பூச்சாண்டியே காட்டி வந்துள்ளார். 'தமிழகத்தில் புலிகள் நடமாட்டம் அதிகமாகி விட்டதால் தமிழக அரசை கலை'க்குமாறு கோரிக்கை விடுவதை வழக்கமாக கொண்டிருந்தார்.

இத்தகைய புலிப்பூச்சாண்டிகளே ராஜீவ் கொலையால் தமிழ்நாட்டில் தோன்றிய அதிருப்திகளை தணியாது வைத்திருந்தன.

ஆனால் இந்தியாவில் பாரதிய ஜனதா அரசு பதவிக்கு வந்த சூழலில் இந்திய அரசியலில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இம் மாற்றங்கள் புலிகளுக்கு ஆதரவான சக்திகளையும் மறுபடி முன்னுக்கு கொண்டுவந்துள்ளன.

விடுதலைப் புலிகளை ஆதரித்து வரும் ம.தி.மு.க, பாட்டாளி மக்கள். கட்சி என்பவை பாரதிய ஜனதா ஆட்சியில் முக்கிய பாத்திரம் வகித்திருந்தன.

புலிகளது அசைக்க முடியாத ஆதரவாளரான ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் மத்திய பாதுகாப்பு அமைச்சராக பொறுப்பேற்றார்.

பாரதிய ஜனதா அரசு கவிழ்ந்த பின்னர் தற்போது இந்தியாவில் உருவாகிவரும் அரசியல் கூட்டணிகளும் புலிகளுக்கு சாதகமானதாகவே அமைந்துள்ளன.

பாரதிய ஜனதா கட்சியோடு தி.மு.கவும், ம.தி.மு.கவும் கூட்டணி அமைத்துள்ளன.

தி.மு.க. தலைவரை கொல்ல புலிகளுடன் சேர்ந்து சதி செய்ததாக வை.கோமீது சுமத்தப்பட்ட பழியும் இக் கூட்டணி மூலம் துடைத்தெறியப்பட்டுள்ளது.

இதனால் தி.மு.க. தொண்டர்கள் மத்தியில் புலிகள்மீது இருந்த தப்பான அபிப்பிராயமும் களையப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில்தான் ராஜீவ் கொலை வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பும் வெளியாகியுள்ளது.

காங்கிரஸ் கட்சி பதவியில் இருக்கும் போது இத்தகைய தீர்ப்பு ஒன்றை வழங்க உச்ச நீதிமன்றம் முன்வந்திருக்குமா? என்பது கேள்விக்குறிதான்.

பாரதிய ஜனதா ஆட்சியும் அரசியல் சூழல் மாற்றங்களுமே உச்சநீதிமன்றம் இத்தகைய தீர்ப்பை வழங்க உறுதுணையாக இருந்துள்ளன என்றே கருத வேண்டியுள்ளது.

குற்றச்சாட்டுகளும், ஆதாரங்களும் செல்லாக் காசாக இருந்தாலும்கூட, தனது மனம் விரும்பியபடி மரணதட்டனைகளை ஒரு நீதிபதி வழங்கமுடியும் என்பதற்கு முன்னைய தனி நீதிமன்ற நீதிபதியும், அவரது தீர்ப்பும் தக்க உதாரானமாக அமைந்திருந்தன.

## பாரதிய ஜனதாவின் சந்தேகம்

எனவே, உச்ச நீதிமன்ற நீதிபதிகளும் முன்னைய நீதிபதிபோன்று சிந்தித்திருந்தால், அதே தண்டனைகளை உறுதிப்படுத்தியுமிருக்கலாம்.

சூழ்நிலைகளும் நீதிபதிகளது மனங்களில் மாற்றங்களையும், தாக்கங்களையும் ஏற்படுத்தவே செய்யும்.

ஆனாலும் ராஜீவ் கொலை நடந்த சூட்டோடு இத்தகைய தீர்ப்பு வந்திருக்குமானால், இந்திய மக்களிடையே தீர்ப்புக் குறித்து அதிருப்திகள் தோன்றி இருக்கக்கூடும்.

அல்லது, ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த தனி நீதிபதி நேரடியாக இப்படியொரு தீர்ப்பை கூறியிருந்தால்கூட கொலையாளிகளை சட்டம் தப்ப வைத்து விட்டது என்று அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கும்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் அரசாங்கம் உச்ச நீதி மன்றத்தில் மேன் முறையீடு செய்திருக்கும்.

தனி நீதிமன்றம் விடுவித்தவர்களை உச்ச நீதிமன்றம் தண்டித்திருந்தாலோ, தண்டனையை அதிகப்படுத்தியிருந்தாலோ கொலையாளிகள் தப்ப முடியவில்லை, தகுந்த தண்டனை கிடைத்துள்ளது என்ற கருத்தே தோன்றியிருக்கும்.

அத்தகைய கருத்து தமிழ் நாட்டில் புலிகளுக்கும் பாதகமானதாகவே அமைந்திருக்கும்.

ஆனால், அதற்கு மாறாக, தனி நீதிமன்றம் 26 பேருக்கு தூக்குத் தண்டனை கொடுத்திருந்ததும், அதில் நான்கு பேருக்கு மட்டுமே தூக்குத் தண்டனையை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது.

எனவே, மாபெரும் அநீதியை உச்சநீதிமன்றம் தடுத்துவிட்டதாகவே தற்போது அபிப்பிராயம் தோன்றியிருக்கிறது.

விடுவிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட அமோகமான வரவேற்புக்களும் அதனை நிரூபித்துள்ளன.

மே 11 ம் திகதி உச்ச நீதிமன்ற தீர்ப்பு வெளியாகியது. ராஜீவ் கொலை வழக்கு கைதிகளை ஒரே சிறையில் வைத்திருக்காது பல்வேறு சிறைகளில் வைத்திருந்தனர்.

சென்னை, சேலம், வேலூர் சிறைச்சாலைகளிலேயே அவர்கள் இருந்தனர். மே 12ம் திகதி அதிகாலையில் மேற்படி சிறைச்சாலைகள் முன்பாக புலிகளின் ஆதரவாளர்கள் ஒன்று கூடினார்கள்.

ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த மத்திய புலனாய்வு பிரிவை எதிர்த்து அவர்கள் ஆக்ரோஷமாக கோஷம் எழுப்பினார்கள். விடுதலையானவர்களை உற்சாகமாக வரவேற்றனர்.

மூன்று சிறைச்சாலைகள் முன்பாகவும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் புலிகளது ஆதரவாளர்கள் திரண்டமை தமிழக அரசையே அதிர்ச்சியில் ஆழத்தியுள்ளது.

புலிகளுக்கு கிடைத்த வெற்றியாகவே உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கொண்டாடப்பட்டு வருகிறது.



வை.கோவும், கலைஞரும்

இதேவேளை தமிழக பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்பன தற்போது வெளியிட்டு வரும் பரபரப்பான தகவல்களும் ராஜீவ் கொலையில் மர்ம முடிச்சுக்களை போடுவதாகவே காணப்படுகின்றன.

உச்ச நீதிமன்றத்தால் விடுதலையான சிலர் தம்மிடம் பல இரகசியங்கள் உள்ளதாக கூறிவருகின்றனர்.

ராஜீவ் கொலையில் காங்கிரஸ் பிரமுகர்களுக்கு தொடர்பு இருக்கிறது. இதனை தாம் மத்திய புலானய்வுத் துறையிடம் கூறியும், அவர்கள் அதனை மூடிமறைத்துவிட்டனர் என்று அவர்கள் குண்டொன்றை தூக்கி போட்டுள்ளனர்.

இவற்றுக்கு பத்திரிகைகள் மட்டுமன்றி, பாரதிய ஜனதா கட்சியும் முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

இத்தகைய புதிய தகவல்கள் பரபரப்பாக அடிபடுவது புலிகள் தொடர்பான அதிருப்திகளை மேலும் தணிக்கக் கூடியதாகவுள்ளது.

ராஜீவ் கொலை விவகாரமானது புலிகள், பிரபாகரன், பொட்டம்மான் என்று சுற்றி வந்த நிலை மாறி, சந்திராசாமி, காங்கிரஸ் பிரமுகர்கள், வெளிநாட்டுச்சதி என்ற பரபரப்பான புதிய திசைகளுக்கு சென்றுள்ளது.

எனவே, ராஜீவ் கொலை வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு புலிகளுக்கு கிடைத்த வெற்றி என்பதில் சந்தேகமில்லை.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பாரதிய ஜனதா கூட்டணி, பெரு வெற்றி பெறுமானால், புலிகளுக்கு மேலும் சாதகமான நிலை தோன்றும்.

இலங்கை அரசு குறித்து பாரதிய ஜனதா கொண்டுள்ள சந்தேகங்களும், அதிருப்திகளும் புலிகளுக்கே சாதகமாக அமையக் கூடியவையாகும்.

புலிகளுக்கு ஆயுதக் கப்பல் வந்ததாகவும், அதனை தடைசெய்ய வேண்டாமென்று பாதுகாப்பு அமைச்சர் கூறியதாகவும் இந்தியப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டது. எம்.வி.மரியம்மா என்னும் கப்பலில் புலிகளுக்கு ஆயுதம் வந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இது பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸை சங்கடத்தில் மாட்டுவதற்காக திட்டமிட்டு வெளியான செய்தியாகும். புதுடில்லியில் உள்ள இலங்கை தூதரகமே இத் தகவலை குறிப்பிட்ட பத்திரிகைக்கு கொடுத்திருக்கலாம் என்று பாரதிய ஜனதா அரசுக்கு அப்போதே சந்தேகம் ஏற்பட்டிருந்ததாம்.

அது மட்டுமன்றி இலங்கைப் படையினர் தொடர்ச்சியாக கூறிய கப்பல் கதைகளும் பாரதிய ஜனதா அரசுக்கு எரிச்சலைக் கொடுத்தனவாம்.

இந்திய எதிர்க்கட்சிகளுக்கு பாரதிய ஜனதா அரசை குற்றம் சாட்ட வசதியாகவே இவ்வாறான கதைகள் கிளப்பப்பட்டன என்று சந்தேகிக்கின்றனர்.

'சேது சமுத்திர திட்டத்தைக் கண்டு இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா அதிர்ச்சி அடைந்துள்ளார்' என்று இந்தியப் பிரதமர் வாஜ்பேய் ம.தி.மு.க. தலைவரான வை.கோ.விடம் கூறியுமிருக்கிறார்.

இதனை வை.கோ. ஒரு பேட்டியில் கூறியுள்ளதோடு, பாரதிய ஜனதா அரசு கவிழ்ந்ததில் சந்தோசப்பட்ட பெண்மணிகளில் சந்திரிக்கா அம்மையாரும் ஒருவர் என்று கூறியிருக்கிறார்.

இராஜதந்திர நட்பு கருதி இலங்கை ஜனாதிபதியுடன் வாஜ்பேய் சுமுகமான நட்பை கொண்டிருந்தார். அதே சமயம் அவரை நன்கு எடைபோட்டும் வைத்திருந்தார் என்பதும் புலனாகிறது.

வை.கோ. இலங்கைத் தமிழர்களது ஆதரவாளர் என்பது தெரிந்தே, இலங்கை ஜனாதிபதியின் அதிர்ச்சி பற்றி அவரிடம் தெரிவித்துள்ளார் வாஜ்பேய். அதன் மூலம் சேது சமுத்திர திட்டம் இலங்கை அரசுக்கு பலத்த அடியாக அமையும் என்பதை கோடிட்டு காட்டியிருக்கிறார் என்பதே அர்த்தமாகிறது.

எனவே, பாரதிய ஜனதா மறுபடி பதவிக்கு வருமானால் புலிகளுக்கு மகிழ்ச்சியாகவும் இலங்கை அரசுக்கு அதிர்ச்சியாகவுமே அது அமையும். ●

### அம்மையார் அதிர்ச்சி

"வாஜ்பேய் அரசின் சாதனைகள் என்று எதை விளக்கப்போகிறீர்கள்?"

"பொக்ரான் அணுகுண்டு சோதனையும், லாகூர் பஸ் சர்வீஸும் முக்கியமாகச் சொல்லப் படும். 'ஐந்தாண்டுகள் ஆளவிட்டிருந்தால் இன்னும் எண்ணற்ற சாதனைகள் செய்து காட்டியிருப்போம்' என விளக்குவோம். தமிழகத்தைப் பொறுத்தவரை, 'சேது சமுத்திர திட்டம் வர வேண்டுமானால் மீண்டும் பி.ஜே.பி-க்கு வாக்களியுங்கள்' என்று கேட்போம். சேது சமுத்திர திட்டம் அறிவிக்கப்பட்டவுடனேயே இலங்கை அதிபர் சந்திரிக்கா எந்த அளவுக்கு அதிர்ச்சி அடைந்தார் என்று பிரதமரே என்னிடம் சொல்லியிருக்கிறார். இந்தத் திட்டம் நிறைவேறிவிட்டால், சர்வதேச கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை தொட்டுக் கொண்டு போகும் அவசியம் இராது. இதனால் இலங்கையின் பொருளாதாரத்துக்கே பலத்த அடி விழும். இந்தியாவுக்கோ ஏராளமான நன்மைகள்!

இதனால் பி.ஜே.பி. அரசு கவிழ்க்கப்பட்டு புதிய ஆட்சி வரவேண்டும் என இலங்கை அதிபர் சந்திரிக்கா விரும்பினார். வாஜ்பேய் அரசு கவிழ்ந்தபோது, சோனியா, ஜெயலலிதாவோடு சேர்ந்து சந்தோஷப்பட்ட மூன்றாவது பெண்மணி சந்திரிக்கா." வை.கோ-

*விகடன் பேட்டியில்*

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

### அரச ~~சிவில்~~ நிர்வாகமும் புலிகளும்

'யாழ் குடாநாட்டில் சிவில் நிர்வாகம் ஸ்தம்பிதம்.'

இப்படித்தான் அரசு கூறுகிறது. அதனையே சில செய்தி நிறுவனங்களும் திரும்பக் கூறுகின்றன.

சிவில் நிர்வாகம் யாழ் குடாநாட்டில் இருந்ததா? இருக்கிறதா?

யாழ் குடாநாட்டில் 600ற்கு மேற்பட்டோர் காணாமல் போனார்களே. அப்போது சிவில் நிர்வாகம் இருந்தால், பொலிசார் அல்லவோ முறைப்பாடுகளை உடன் பதிவு செய்திருப்பர். பின்னர் அவர்களைக் கண்டுபிடித்து கொடுத்திருப்பர். குறைந்த பட்சம் அவர்களுக்கு என்ன நடந்தது என்றாவது கண்டுபிடித்துக் கூறியிருக்க வேண்டும்.

பாஸ் முறை, குடும்ப புகைப்படத்தை தொங்க விடுவது போன்ற நடைமுறைகள் எந்த சிவில் நிர்வாக அதிகாரி செய்த முடிவு?

யாழ் அரச அதிபரது அனுமதிகூட பெறப்படாது, இராணுவ அதிகாரிகள்தானே இந்த விதிகளை அமுல்படுத்தியுள்ளனர்.

யாழுக்கான போக்குவரத்து விடயத்தில் சிவில் அதிகாரிகள் எவராவது தீர்மானம் எடுக்க முடிந்ததா?

சிவில் நிர்வாகம் இருந்தால் இராணுவம் கைதுகள் நடத்தி, தாமே விசாரணை நடத்த முடியுமா?

யாழில் தொலைபேசி வழங்கக்கூட இராணுவ அனுமதி தேவையாக இருக்கிறது. இதுதான் சிவில் நிர்வாகமா?

ஆகவே, யாழ் குடாநாட்டில் இராணுவ நிர்வாகமே இருக்கிறது. அரச நிர்வாகம் என்றும் அதனைக் கூறலாம்.

அரச நிர்வாகத்தை சீர் குலைக்கவே புலிகள் முயற்சிக்கிறார்கள்.

'சிவில் நிர்வாகத்தை' புலிகள் சீர்குலைப்பதாக கூறினால்தான் அரசுக்கு ஆதாயம். அதனால்தான் அப்படிக் கூறுகின்றனர்.

***

அரச நிர்வாக சீர்குலைப்பை புலிகள் இது வரை உத்தியோக பூர்வமாக உரிமை கோரவில்லை.

யாழ்குடாநாட்டில் அரச அலுவலகங்களுக்கு இனம் தெரியாத அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டதை அடுத்தே, அலுவலகங்கள் யாவும் முடப்பட்டன என்றே 'புலிகளின் குரல்' அறிவித்துள்ளது.

இத்தனைக்கும் புலிகளது யாழ் மாவட்ட பொறுப்பாளர்களில் ஒருவரான தூயவனின் கையொப்பத்துடன்தான் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது.

அப்படியானால் புலிகள் உரிமை கோராதது ஏன்?

தமது அறிவித்தலை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க புலிகள் உத்தேசித்திருக்கலாம். அப்படி நடவடிக்கை எடுக்கும்போதும் உரிமை கோராது இருக்க வசதியாகத்தான் இப்படி செய்கிறார்களோ?

***

ஈ.பி.ஆர்.எல்.எ.ப். சுரேஸ் பிரேமச்சந்திரன் சமீபத்தில் எம்.ரி.வி. தொலைக் காட்சிக்கு பேட்டி ஒன்று அளித்திருந்தார்.

அரசும், புலிகளும் பேச்சு நடத்த வேண்டும் என்பதற்காகவே வவுனியாவில் ஊர்வலம் நடத்தப்போவதாக கூறினார்.

'அடடா நல்ல விஷயமாச்சே' என்று நினைத்து முடிப்பதற்குள், அடித்தார் ஒரு பல்டி.

'சமஷ்டித் தீர்வை அரசு முன்வைத்து புலிகளை தனிமைப்படுத்த வேண்டும்' என்று கூறினார்.

புலிகள் தனிமைப்படுத்த வேண்டிய சக்திகள் என்றால், அரசு புலிகளோடு பேசவேண்டும் என்று ஊர்வலம் ஏன் நடத்துகிறார்கள்?

அதேபோல வீர வசனங்களோடு வெளியான பிரசுரத்திலும் முன்னுக்குப் பின் முரணான கரணமடிப்புக்கள்.

தனிநாடு என்ற கோரிக்கைக்குள் புலிகள் மூழ்கிவிட்டனர் என்று முதலில் கண்டனம். அதே பிரசுரத்தின் பின்பகுதியில் "மக்களே! எம் மண்ணை மீட்க அணிதிரளுங்கள்" என்று அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது.

'தமிழ் மக்களை பிச்சைக்காரர்களாக மாற்றுவதே அரசின் நோக்கம்' என்றும் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

அப்படிப்பட்ட அரசாங்கத்திடம்தானே புலிகளை தனிமைப்படுத்த வேண்டும் என்று எம்.ரி.வி. பேட்டியில் கோரியிருக்கிறார் சுரேஸ்.

வேறொன்றுமில்லை, உட்கட்சிப் பிரச்சனையால் சுரேஸ் ரொம்பத்தான் குழம்பி விட்டார்.

உட்கட்சிப் பிரச்சனையில் வரதரை ஓரம் கட்டி தன் பலத்தை காட்டத்தான் சுரேஸ் அறிக்கைகள், ஊர்வலம் என்று ஓடுப்பட்டுத் திரிகிறார்.

எனவே, அவரது பேட்டிகளும், பிரசுரங்களும் இப்படித்தான் இருக்கும்.

ஒன்றில் அரசை எதிர்க்க வேண்டும். அல்லது ஆதரிக்க வேண்டும். அரசையும் பகைக்க கூடாது, அரசை எதிர்ப்பது போல மக்களுக்கும் காட்டவேண்டும். அரசு சந்தேகப்படாது இருக்க புலிகளையும் இரண்டு திட்டு திட்ட வேண்டும். மக்களை முட்டாள்களாக நினைக்கிறார்கள். ஆனால் மக்கள் புத்தி சாலிகள். ●



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

# அதிர் இடி 64

**கடந்தவாரம்**

**உகண்டா இராணுவத்துக்குள் இன வேறுபாடுகள் தலை தூக்கி மோதல்கள் நடக்கின்றன. உடனடியாக அமீனுக்கு தகவல் கொடுக்கத் தவறிய புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் கொல்லப்படுகிறார். அவரது காதலி அமீனின் பிடிக்குள் சிக்குகிறாள்.**

**இனி....**

# இடி அமீன்

தனது காதலனான புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பலியான செய்தியை அறிந்ததும், அவளுக்கு தனது காலடியில் இருந்து பூமி நழுவுவது போலிருந்தது.

அப்படியே மயங்கிப்போனாள். அவளது தலை துவண்டு தொங்கியது. அப்போதும் பிடியைத் தளர்த்தாத அமீன், **"நடிக்காதே! இப்படி எத்தனை நாடகங்களில் நடித்துப் பழகியிருப்பாய்,"** என்று அவளின் கன்னத்தில் அறைந்தான்.

அதற்கும் அவள் அசையாதிருக்கவே, அப்படியே தூக்கி கட்டிலில் எறிந்தான்.

**"என்னைவிட அவனுக்கு நீ முக்கியமாகிவிட்டாயா? அப்படி என்னதான் இருக்கிறது உன்னிடம் என்று பார்க்கிறேன்!"** என்று உறுமிக்கொண்டே, அவள்மீது பரவினான்.

மறுநாள் கம்பலா பிரதான சாலையில் மரம் ஒன்றுடன் கார் ஒன்று மோதிக் கிடந்தது.

காருக்குள் சாரதி ஆசனத்தில் அவள் செத்துக் கிடந்தாள்.

'நாடக நடிகை கார் விபத்தில் பலி' என்று செய்தி தெரிவித்தது, உகண்டா வானொலி. அதனையே பத்திரிகைகளும் வெளியிட்டன.

பிரேத பரிசோதனை செய்த டாக்டருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அவளது மார்பகங்களில் பற்களால் கடிக்கப்பட்ட அடையாளங்கள் பதிந்திருந்தன. அவளது உடலெங்கும் நகத்தால் பிறாண்டப்பட்டிருந்தது. அவளது உதடுகளில் சதை பிய்ந்திருந்தது.

இது விபத்தால் ஏற்பட்ட மரணமல்ல, விபரீதத்தால் ஏற்பட்ட மரணம் என்பது டாக்டருக்கு தெரிந்து போனது.

இதற்குக் காரணம் அமீன் என்பதோ, பெரிய இடத்துப் பின்னணி இருப்பதோ டாக்டருக்கு அப்போது தெரியாது.

ஆகவே, மிகத் துணிச்சலாக பிரேத பரிசோதனை அறிக்கையைத் தயாரிக்க ஆரம்பித்தார்.

அறிக்கையின் முதல்வரியை எழுதிய போது தொலைபேசி அழைப்பு வந்தது.

"ஜனாதிபதி செயலகத்தில் இருந்து பேசுகிறோம். நாடக நடிகையின் உடலை பரிசோதனை செய்தது நீங்கள்தானே?"

டாக்டருக்கு பயத்தில் வியர்த்தது.

"ஆ... ஆம்!"

"உமது பரிசோதனை என்ன கூறுகிறது?"

டாக்டர் புத்திசாலி. பிழைக்கத் தெரிந்த மனிதர். சட்டென்று நிலைமையைப் புரிந்து கொண்டார். கைக்குட்டை எடுத்து நெற்றியைத் துடைத்துக் கொண்டே; "எப்படி அறிக்கை எழுத வேண்டும் என்று கூறுகிறீர்களோ, அப்படியே எழுதிவிடுகிறேன்" என்று நேரடியாகவே கூறினார்.

மறுமுனைக் குரலில் ஆச்சரியம் தெரிந்தது. "பரவாயில்லையே, வேலை சுலபம் ஆகிவிட்டது. இல்லாவிட்டால் உம்மையும் அநியாயமாக... சரி, இனி அது எதற்கு? அதுதான் நீரே வழிக்கு வந்துவிட்டீரே! விபத்து என்று தெளிவாக அறிக்கை கொடுத்துவிட்டு அமைதியாக நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகிறோம்!" என்று தொடர்பு துண்டிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அமீனின் உதவியாளர்களில் ஒருத்தன்தான் பேசியிருக்க வேண்டும் என்று டாக்டர் நினைத்தார்.

அமீன்தான் பேசினான் என்ற உண்மை அவருக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் பயத்தில் மேலும் நடுங்கிப் போயிருப்பார்.

உத்தரவுப்படியே 'விபத்து நேர்ந்ததால் மரணம் நிகழ்ந்தது' என்று பிரேத பரிசோதனை அறிக்கையை சமர்ப்பித்தார்.

அடுத்த வாரத்திலேயே அந்த டாக்டருக்கு மருத்துவமனையின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்று தரப்பட்டது.

இக் காலகட்டத்தில் சியம்பா சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார்.

அந்த டாக்டருக்கு சியம்பா நெருக்கமான நண்பர்.

அவரிடம் நடந்த உண்மைகளை மிக இரகசியமாகக் கூறிவிட்டார் டாக்டர். **"வெளியே சொல்லித் தொலைக்க வேண்டாம். காணாமல் போய்விடுவீர்!"** என்று எச்சரித்தார் சியம்பா.

ஆனாலும் சியம்பா மூலமாகவே பிற்காலத்தில் இந்த உண்மைகள் யாவும் வெளிவரப்போகின்றன என்பது, அப்போது சியம்பாவுக்கே தெரியாது.

இராணுவத்துக்குள் ஏற்பட்ட மோதல்கள் உகண்டாவுக்குள் தெரியவருவதற்கு முன்பாகவே, வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்கு தெரிய வந்துவிட்டது.

அதனை அறிந்ததும் அமீனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டபோதும், அதனை வெளிக் காட்டவில்லை.

**"இராணுவத்துக்குள் தீய சக்திகள் சிலர் குழப்பம் விளைவிக்க முற்பட்டனர். அவர்களை வெற்றிகரமாக ஒடுக்கிவிட்டோம்"** என்று அமீன் அறிவித்தான்.

வெற்றியின் அடையாளமாக கம்பலா வீதிகளில் தனது லாண்ட்ரோவர் வாகனத்தில் பவனி வந்தான்.

வழியில் எதிர்ப்பட்டவர்களைப் பார்த்து கையசைத்தபடி சென்றான். அமீனின் இச்செயலை நாடகம் என்று மக்கள் புரிந்து கொண்டபோதும், அது பற்றி வெளிப்படையாகப் பேசிக்கொள்ளப் பயந்தனர்.

இராணுவத்துக்குள் புகைச்சலை அடக்கிவிட்டதாக அமீன் காட்டிக்கொண்டாலும் பிரச்சனை தொடர்ந்தது.

சூடானியர்கள் பலர் படையைவிட்டு விலக அனுமதி கோரினார்கள். வேறு பலர் அனுமதிக்கு காத்திருக்காமல் ஓடிவிட்டனர்.

சூடானியர்களை இனிமேல் இராணுவத்திற்குள் வைத்திருப்பது, ஏனைய இராணுவத்தினருக்கு தன் மீதும் வெறுப்பை ஏற்படுத்தும் என்று அமீன் உணர்ந்து கொண்டான்.

அதனால் சூடானியர்கள் விலக அனுமதி அளித்ததோடு, சூடானியரான பிரிகேடியர் மாரெல்லாவுக்கு கௌரவமான முறையில் ஓய்வு கொடுத்தான்.

முழுமையான ஓய்வு ஊதியம் அவருக்குக் தரப்பட்டது. அவரும் அவரது குடும்பத்தினரும் உகண்டாவை விட்டு வெளியேறும்வரை அமீனின் நம்பகமான பாதுகாப்பு படைப்பிரிவு அவர்களுக்கு பாதுகாப்பளித்தது.

பிரிகேடியர் மாரெல்லா அமீனுக்காக பல கொலைகளைச் செய்தவன். அமீனின் பதவிக்கு பக்கத்துணையாக இருந்தவன்.

அதனால்தான் அமீன் அவன்மீது அத்தனை அக்கறை காட்டினான்.

மாரெல்லா தனது பதவியைப் பயன்படுத்தி நிறைய சம்பாதித்து வைத்திருந்தான்.

ஆசிய நாட்டவர்களை உகண்டாவை விட்டு வெளியேற்றியபோது, அவர்களிடம் இருந்து பெறுமதியான பொருட்களைச் சுருட்டிவைத்திருந்தான். அவையே பல கோடி ரூபாய்கள் தேறும்.



**தருவது ரசிகன்**

தனது உடமைகளை பல லொறிகளில் மூட்டைகளாகக் கட்டி ஏற்றிக்கொண்டார்.

வங்கியில் தனது பெயரில் இருந்த பணத்தை அமெரிக்க டொலர்களாக மாற்றி எடுத்துக்கொண்டார்.

அப்படி மாற்றப்பட்ட டொலர்களே பல மூட்டைகளாகக் கட்டப்பட்டன.

அமீனின் ஆட்சியில் இராணுவ அதிகாரிகள் எப்படிக் கொழுத்தனர் என்பதற்கு மாரெல்லா நல்ல உதாரணம்.

அமீனுக்குப் பிடித்தமான பொறுப்பதிகாரிகள் எப்படி வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம். அமீன் தலையிடமாட்டான்.

அதுவே அவனுக்குப் பிடிக்காத அதிகாரியாக இருந்தால் நேர்மாறாக நடந்து கொள்ளுவான்.

இராணுவ மேஜர் ஒருவன் அமீனுக்கு எதிராக படைக்குள் பிரசாரம் செய்வதாக கைது செய்யப்பட்டான்.

அவன் ஊழல் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. ஊழல் செய்து சொத்துக்கள் குவித்துவிட்டான் என்று உகண்டா வானொலி அறிவித்தது. இறுதியில் அந்த மேஜர் பணியிலிருந்து நீக்கப்பட்டான்.

தனக்கு எதிரான அதிகாரிகள் சம்பாதிக்கவும் முடியாது என்பதை ஏனைய அதிகாரிகளும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே அந்த மேஜரை அமீன் தண்டித்தான்.

அமீனுக்கு என்று இரகசிய நிதி ஆண்டுதோறும் ஒதுக்கப்படும். அத்தகைய நிதிக்கு கணக்குக் காட்டத் தேவையில்லை.

நாட்டின் பாதுகாப்புக்காக இரகசியமான திட்டங்களுக்கு செலவிடுவதற்காகவே அத்தகைய நிதி ஒதுக்கப்படுவதாகக் கூறப்படும்.

ஆனால், நாட்டின் உயர் பதவியில் உள்ளோர் சுருட்டிக் கொள்வதற்கே அத்தகைய 'இரகசிய நிதி' பயன்பட்டு வந்தது.

அமீனும் இரகசிய நிதியைத் தன் குடும்பங்களுக்கான நிதியாக மாற்றிக் கொண்டான்.

அமீனின் மனைவியரும், காதலிகளும் உல்லாசமாக வாழ்வதற்கு அந்த இரகசிய நிதியே பயன்பட்டது.

**"நாட்டின் ஜனாதிபதிக்கு எத்தனையோ பணிகள் உள்ளன. அதனை எல்லாம் வெளியே கூறினால் எதிரிகள் அறிந்து விடுவார்கள். எனக்கு ஒதுக்கப்படும் நிதி போதாது இருப்பதால், அதனை அதிகப்படுத்த வேண்டியுள்ளது!"** என்று அமைச்சரவைக் கூட்டத்தில் அமீன் கூறினான்.

அமைச்சர்கள் யாரும் மறு பேச்சுப் பேசவில்லை. சகலருமே அமீனின் நிழலில் தாமும் சம்பாதிக்க நினைப்பவர்கள். அதனால் மௌனமாக இருப்பார்கள்.

பிரிகேடியர் மாரெல்லா இடி அமீனுக்கும் தனது சுருட்டலில் ஒரு பகுதியை அவ்வப் போது கொடுத்து வந்தான்.

அதனால்தான் அவன்மீது தனிப்பிரியம் வைத்திருந்தான் அமீன்.

**"பிரிகேடியர் மாரெல்லா ஜனாதிபதி நிதிக்கு நிறைய வசூல் செய்து தந்துள்ளார். அதுபோல ஏனைய இராணுவ அதிகாரிகளும் முயற்சி செய்ய வேண்டும்!"** என்று அமீன் வெளிப்படையாக கூறியும் இருக்கிறான்.

ஜனாதிபதி நிதி என்று திரட்டி தனது பெயரில் வெளிநாடுகளில் உள்ள வங்கிகளில் பணம் போடவும் ஆரம்பித்தான் அமீன்.

அதற்காகவே வெளிநாடுகள் சிலவற்றுக்கும் இரகசியமாகச் சென்று வந்தான்.

நாட்டின் இராணுவ ஆற்றலை மேம்படுத்த உலக நாடுகள் சிலவற்றுக்குச் சென்று வந்ததாக அமீன் கூறிக் கொள்ளுவான்.

அப்படி எந்த முயற்சியும் நடந்திருக்காது. தனது மனைவியின் உறவினர்கள் சிலரின் உதவியுடன் வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை சேமிக்க ஆரம்பித்தான்.

வெளிநாட்டு வங்கியில் பணம் போடும் யோசனையை முதலில் கூறியதும் பிரிகேடியர் மாரெல்லாதான்.

ஜனாதிபதி நிதிக்கு வர்த்தகர்கள் மாதாந்தம் பணம் கொடுத்தனர். அப்படிப் பணம் கொடுக்காதவர்கள் மிரட்டப்பட்டனர்.

தனது பெயரில் மட்டுமல்லாது தன் மனைவியர் சிலரது பெயரிலும் வெளிநாட்டு வங்கிகளில் பணம் போட்டான்.

என்றாவது ஒருநாள் தனது பதவிக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அமீன் நம்பத் தொடங்கினான்.

அதனால் தனது எதிர்கால வாழ்வுக்காக சேமிக்க ஆரம்பித்தான். பிரிகேடியர் மாரெல்லாதான் தன் கண்களைத் திறந்து வைத்ததாக, அவன்மீது அமீனுக்கு அபிமானம் அதிகமாயிருந்தது.

இவ்வாறு பலதரப்பட்ட வகையில் உதவியதால்தான் மாரெல்லாவுக்கு முழு மரியாதை கொடுத்து, பாதுகாப்பும் கொடுத்து அனுப்பி வைத்தான் அமீன்.

தென் சூடானில் உள்ள ஜுபா நகருக்கு மாரெல்லா போய்ச் சேர்ந்தார். உகண்டாவில் அவர் பயன்படுத்திய வெள்ளை பென்ஸ் காரையும் எடுத்துச் சென்றார்.

மாரெல்லாவின் இடத்திற்கு கக்வா இனத்தைச் சேர்ந்த ஒருவனை அமீன் நியமித்தான்.

இராணுவத்துக்குள் ஏற்பட்ட கொந்தளிப்பை ஒருவிதமாக அமீன் சமாளித்து மூச்சு விடுவதற்குள், இன்னொரு பிரச்சனை ஏற்பட்டது.

"உகண்டாவை கிறிஸ்தவ ஆதிக்கத்தில் இருந்து விடுவித்து, முஸ்லிம் நாடாக மாற்றுவதே அமீனது திட்டம்." என்று எங்கும் பேச்சு எழுந்தது.

அமீனுக்கு எதிரான சக்திகள் மிகச் சாதுரியமாக அப் பிரசாரத்தைக் காட்டுத்தீபோல பரவச் செய்திருந்தன.

'அதனை முறியடிக்க என்ன செய்யலாம்?' என்று தன் மூளையைக் கசக்கினான் அமீன்.

(இடி தொடரும்)

# ஜடேஜாவுக்கு கிடைத்த பரிசு

இந்திய கிரிக்கெட் அணியில் லீக் போட்டிகள் சிலவற்றில் ஜடேஜா வெளுத்து வாங்கியிருக்கிறார்.

இங்கிலாந்துடன் நடந்த போட்டியில் ஓட்ட எண்ணிக்கையை தனது விளாசல் மூலம் கிடுகிடுவென்று உயர்த்தினார்.



சமீபகாலமாக ஜடேஜாவுக்கு யோகம்தான். அணிக்கு தலைமை தாங்கியபோதும் வெற்றி களை அடுக்கி வியக்கவைத்தார்.

அசாருதீனின் பின்னர் அடுத்த கப்டனுக்கு தகுதியானவர்கள் யாருமில்லை என்றே நம்பப்பட்டது.

ஆனால் தற்போது ஜடேஜாமீது இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கும், இந்திய கிரிக்கெட் தேர்வாளர்களுக்கும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

ஜடேஜாவின் உற்சாகமான மனநிலையும் சமீபத்திய வெற்றிகளுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

இதுபற்றி சுவையான சங்கதிகள் மும்பாயில் உலாவுகின்றன.

நடிகை மாதுரி டிக்ஷித்தை காதலிக்க ஆரம்பித்த பின்னரே ஜடேஜா மறுபடி உற்சாகமான ஆண்மகனாக மாறியுள்ளார் என்று மும்பாய் பத்திரிகைகள் குறும்புடன் கூறுகின்றன.

உலகக் கிண்ணப் போட்டிக்கு இந்திய அணி புறப்பட முன்னர் மாதுரி வீட்டில் ஜடேஜாவுக்கு சிறப்பான விருந்து தரப்பட்டதாம்.

அந்த விருந்தில் மாதுரி ஜடேஜாவுக்கு மறக்கமுடியாத பரிசு கொடுத்திருக்கிறாராம். அது என்ன பரிசு என்பதை வாசகர்களது ஊகத்திற்கு விட்டுள்ளது மும்பாய் சஞ்சிகை.

இந்திய அணியின் நாளைய கப்டனை கட்டியாள்கிறார் நடிகை மாதுரி டிக்ஷித்.

மாதுரியைத் தவிர ஜடேஜாவுக்கு பல நண்பிகள் உள்ளனர். ஆனாலும் மாதுரி டிக்ஷித்தின் நெருக்கம்தான் ஜடேஜாவை உயரத் தூக்கியிருக்கிறது.

இருவருமே தமது காதலை மறைக்கிறார்கள். ஆனால் சகல விதத்திலும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துகொள்ளுமளவுக்கு நெருங்கிப் பழகியுள்ளனர்.

இந்த உறவு திருமணத்தில் முடியாது விட்டாலும், ஜடேஜாவும், மாதுரியும் ஒருவரை ஒருவர் மறக்கமாட்டார்கள். அவர்கள் நினைப்பதற்கு இனிய நினைவுகள் பல இருக்கின்றன என்றும் அப் பத்திரிகை எழுதியுள்ளது.

இம்முறை உலகக் கிண்ணப்போட்டியில் இந்தியா தோல்வியுடன் திரும்பினால், அடுத்த கப்டன் ஜடேஜாதான்.

# கிரிக்கெட்டும் பந்தயமும்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் ஒருபுறம் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

மறுபுறம் இப்போட்டியை வைத்து பந்தயங்களும் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன.

ஆனாலும் எதிர்பாராத விதமாக சில அணிகள் சுருண்டுபோனதால் பந்தயம் கட்டிய பலர் தலையில் கைவைத்து புலம்பும் நிலை ஏற்பட்டது. ஆனால் பந்தய ஏற்பாட்டாளர்களுக்கு பல கோடி ரூபாய்கள் இலாபம் ஏற்பட்டுள்ளது.

இந்தியா, சிம்பாப்வே அணிகள் மோதும் போது இந்தியா நிச்சயம் வெற்றி பெறும் என்று பலரும் பந்தயம் பிடித்தனர்.

ஆனால் இந்தியா சொற்ப ஓட்டங்களால் தோல்வியை முத்தமிட்டது. இதனால் பந்தயம் கட்டியவர்கள் தம் பணத்தை இழந்தனர்.

பந்தய ஏற்பாட்டாளர்கள் கிரிக்கெட் வீரர்களை நெருங்கவிடாது அந்தந்த கிரிக்கெட் அணி மேலாளர்கள் கண்காணித்து வருகின்றனர்.

உலகக் கோப்பையை வெல்வது யார்? என்று பந்தயம் கட்டுவோர் தொகை அதிகரித்துள்ளது.



பந்தயத்தில் தென் ஆபிரிக்க அணி முதலிடத்தில் உள்ளது. இரண்டாம் இடத்தில் பாகிஸ்தான் இருக்கிறது. இந்த அணிகள்மீதே பெரும்பாலானோர் பணத்தை கட்டியிருக்கின்றனர்.

# பறவை அபிமானம்

பறவைகள்மீது அபிமானம் உள்ளோர் பலர் இருக்கின்றனர். அவர்களில் நோர்வேயைச் சேர்ந்த ஆனி மாரிட் என்னும் பெண்மணியின் அபிமானம் அளவுக்கு மீறியது.



அவரது வீட்டுக்கு அருகே உள்ள வயல் வெளியில் ஒரு பறவையின் முட்டையைக் கண்டெடுத்தார். உடனே அதனை வீட்டுக்கு எடுத்துச் சென்றார்.

அந்த முட்டையை கதகதப்பாக வைத்திருந்தால்தான் குஞ்சு பொரிக்கும்.

அதனால் தனது மார்பகங்களின் மத்தியில் அந்த முட்டையை பாதுகாத்து வருகிறார். இதற்கு அவரது கணவரும் சம்மதித்தார்.

"உனது பணி முடிவடையும்வரை தொல்லை கொடுக்க மாட்டேன்." என்று கணவர் கூறியிருக்கிறாராம். நல்ல மனைவி, நல்ல கணவன்.

# இந்திய-பாக் மோதல்

இந்திய-பாகிஸ்தான் மோதலில் அமெரிக்காதான் குளிர் காய்கிறது.

அதேசமயம் பாகிஸ்தானை கண்டிப்பது போலவும் நடுநிலை நாடகம் ஆடுகிறது. காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு சார்பாக முதலில் கருத்துக் கூறியவர் கிளின்ரன்தான்.

இந்தியாவும்-பாகிஸ்தானும் மோதுவதை உள்ளூர ரசித்தபடி, வெளியே மோதலை நிறுத்துமாறு கோரிக்கைவிடுக்கிறது அமெரிக்கா.

நம்நாட்டில் தமிழ்க் கட்சிகள் இயக்க ஒற்றுமைக்கு அறிக்கை விடுப்பது போன்றதே இதுவும். தற்போதைய இராணுவ நடவடிக்கை வெற்றியளித்தால் பிரதமர் வாஜ்பேயின் செல்வாக்கு மேலும் உயரும்.

இந்தியாவில் தேர்தல் நடக்கப்போகும் நேரமாகப் பார்த்து தீவிரவாதிகள் காஷ்மீரில் ஊடுருவியது பாரதிய ஜனதாவுக்கு இலாபம்.

பாரதிய ஜனதா தன் செல்வாக்கை உயர்த்தவே தாக்குதல் நடத்துவதாக சோனியா குற்றம் சாட்ட முடியுமா? ஏற்கனவே வெளிநாட்டவர் நாட்டுப் பற்று இல்லாதவர் என்று அவர்மீது விமர்சனங்கள் உள்ளன. எனவே தாக்குதலைக் கண்டித்தால் அதனையே அவரைத் தாக்கும் பிரசார ஆயுதமாக பாரதிய ஜனதா கட்சி பயன்படுத்த ஆரம்பித்து விடும்.

# கறுப்பின அழகி

கடந்த 47 ஆண்டுகாலமான மிஸ் யூனிவர்ஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை கறுப்பின அழகிகள் எவருக்கும் பட்டம் கிடைத்ததில்லை.

இம்முறைதான் போட்ஸ்வானாவைச் சேர்ந்த 19 வயது கறுப்பின அழகி பூலி வெலாகோப் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



84 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் போட்டியில் குதித்து, தம் உடலின் வளைவு, நெளிவுகளை நடுவர்களுக்கு காண்பித்தனர்.

அவர்களில் கறுப்பின அழகிதான் நடுவர்களின் கண்களையும், கருத்தையும் கவர்ந்தார். அதனால் பட்டம் வென்றார்.

இவ்வாறான அழகிப்போட்டிகளில் நடுவர்களாக இருப்பவர்களை பல வழிகளில் முன்கூட்டியே சரிக்கட்டிவிடுவார்கள்.

அழகிகளும் நேரடியாக சந்தித்து நடுவர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வார்கள். இதனால் இம்மாதிரியான போட்டிகளில் நடுவர்களாக இருக்க பலத்த போட்டியே இருக்கிறது.



வாரமலர் தினமுரசு

ஜூன்.06-12, 1999

படிப்பகம்

www.padippakam.com

# உறுதிக்கு உதவி



ஆக மொத்தம் இரண்டு அடி உயரம்தான் இருக்கிறார் இரா.கார்த்திகேயன் (21). தமிழ்நாட்டில் திருப்பூரைச் சேர்ந்தவர்.

உயரம் சிறிதானாலும் உள்ளத்தின் உறுதியில் உயர்ந்து நிற்கிறார். 'சன்' தொலைக் காட்சியில் விசுவின் அரட்டை அரங்கத்திலும் பங்குகொண்டு பிய்த்து உதறினார்.

இவரது உறுதியைக் கண்டு வியந்த தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, அரசு சார்பாக 8.5 இலட்சம் ரூபா (இந்திய மதிப்பில்) வழங்கியுள்ளார்.

சுயமாக கணனி மற்றும் அச்சக தொழில் ஆரம்பிக்கவே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. கார்த்திகேயன் கணனிப் பயிற்சியும், அச்சகத் தொழிற் பயிற்சியும் கற்று வைத்திருக்கிறார். அதனால்தான் தமிழக முதல்வரால் நம்பிக்கையுடன் உதவ முடிந்தது. யானையின் பலம் தும்பிக்கையிலே. மனிதனின் பலம்? நம்பிக்கையிலே!




# தங்க டயானா

இளவரசி டயானாவின் நினைவாக 7ஆயிரத்தி 500 தங்க நாணயங்கள்- அவருடைய உருவம் பொறிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

இவை முறைப்படி புழக்கத்துக்கு வருவதற்கு முன்னரே அரைவாசிக்குமேல் முன்பதிவு செய்யப்பட்டுவிட்டன.

ஆனால் டயானாவின் உடல் அடக்கம் செய்யப்பட்ட அவருடைய இளமைக்கால வதிவிடமான அல்தோப்பில் ஓர் அருங்காட்சியகம் ஒன்றினை அமைக்குமுகமாக நிதி சேர்ப்பதற்கு சீட்டுக்கள் விற்பனைக்காக வெளியிடப்பட்டன.

இதன் விற்பனை மிகவும் மந்தமாக இருக்கிறது. இன்னும் 75 ஆயிரம் சீட்டுக்கள் விற்பனையாகாது தேங்கிக்கிடப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கு என்ன காரணம்? காட்சியகம் அமைப்பதைவிட தம் வீட்டிலேயே டயானா தொடர்பான பொருட்களை வாங்கி வைக்கத்தான் பலரும் விரும்புகின்றனர்.




# கவரும் மட்டை

எங்கும் கிரிக்கெட் என்பதே பேச்சு. அந்தளவுக்கு கிரிக்கெட் கிண்ணத் திருவிழா களை கட்டியுள்ளது.

இதனைப் பயன்படுத்தி கிரிக்கெட் ரசிகர்களை கவருவதற்கு வியாபார நிறுவனங்கள் போட்டி போடுகின்றன.

தமிழ் நாட்டின் தலைநகரான சிங்காரச் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்று இந்த பிரமாண்டமான கிரிக்கெட் மட்டையை பார்வைக்கு வைத்துள்ளது. இதனை தயாரித்து முடிக்க நம்மூர் பண மதிப்பில் 70 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதன் உயரம் 25 அடி. இதனை தூக்கி அடிக்க முடியாது. தூரத்தில் நின்று ரசிக்கத்தான் முடியும்.

# தகவல் பெட்டி



# செல்லக் குறும்பு

செல்லப் பிராணிகளது குறும்புகளையும், திறமைகளையும் வெளிச்சம் போட்டு காட்டுவதற்கும் ஒரு கண்காட்சி. ரசியாவில் நடந்த அக் கண்காட்சியில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் தான் இப் பெண்மணி.


அவரது கிளி அவருடைய பல்லை சுத்தம் செய்யுமளவுக்கு பயிற்சி பெற்றுள்ளது. (பற்தூரிகையும் பற்பசையும் தேவையில்லை. செலவுமிச்சம்)


இது போல பல பிராணிகளது வித்தைகள் அக் கண்காட்சியில் நடைபெற்றன. தான் வளர்க்கும் பிராணியை சான்றோன் (ள்) எனக் கேட்டு பிராணி வளர்ப்போர் உவகை அடையும் காலம் இது!

# மகா சைக்கிள்

இது மகா சைக்கிள்! இதனை ஓடமட்டுமல்ல, ஓரமாய் தள்ளக்கூட முடியாது. அத்தனை பாரம். எடை: 800 கிலோ. உயரம் 19.8 அடி. சக்கரங்களது விட்டம் 13.2 அடி.

உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெறுவதற்காக ஃபிரான்ஸ் நாட்டினர் நான்குபேர் இணைந்து தயாரித்துள்ளனர். அநேகமாக இடம் கிடைக்கலாம்.





# நட்சத்திர சண்டை

இந்த உலகங்களில் வாழும் ஜீவராசிகள் அண்ட வெளியில் உள்ள பல்வேறு உலகங்களுடன் போர்புரிவதாகவும் கற்பனைக் கதைகளைப் புனைந்து திரைப்படங்களும் தொலைக்காட்சித் தொடர்களும் 1977ம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டன. சிறியோர் முதல் பெரியோர் வரை சகலரையும் இவை கவர்ந்தன.

இவற்றில் 'ஸ்ரார் வோர்ஸ்' என்ற படம் மிகப் பிரபலம். இது பல பாகங்களாக வெளிவந்துள்ளது. தற்போது 'ஃபாண்டம் மெனாஸ்' என்ற பெயரில் மற்றுமொரு பாகம் அமெரிக்காவில் வெளியாகியுள்ளது.

இப்படம் பிரிட்டினில் ஜூலை 14ம் திகதியன்றுதான் திரையிடப்படுகிறது.

அதற்குமுன்பே இத்திரைப்படத்தை நியூயோர்க் நகருக்கு இலவசமாக விமானத்தில் சென்று பார்ப்பதுடன் 3 நாட்கள் அங்கு தங்கியிருந்துவிட்டு- 1000 பவுண் பெறுமதியான பொருட்கள் கொள்முதல் செய்து திரும்புவதற்கும் ஏதுவான ஒரு போட்டி நடைபெறுகிறது.

'ஹலோ' என்ற ஆங்கில சஞ்சிகை 'ஸ்டார் வோர்ஸ்' தயாரிப்பாளர்களுடன் இணைந்து இப்போட்டியை ஏற்பாடு செய்துள்ளனர்.

ஏராளமானோர் போட்டியில் பங்கு கொண்டுள்ளனர். அந்தளவுக்கு அப் படத்திற்கு மவுசு. 'ஸ்ரார் வோர்ஸ்' வரிசையில் தற்போது வெளியாகியுள்ள ஃபாண்டம் மெனாஸ் படத்தில் 'பிறகோள் உயிரினம்' போல் உருவாக்கப்பட்டதே இங்கு காணப்படுகிறது. பலகோடி செலவில் இதனை உருவாக்கியுள்ளனர். முன்னைய படங்கள் போல இதுவும் வசூலை குவிக்கும் என்று நம்பப்படுகிறது.

www.padippakam.com

## சேரன்–சங்கவி

'பாரதி கண்ணம்மா', 'பொற்காலம்' போன்ற வெற்றிப் படங்களையும், தோல்விப் படமான தேசிய கீதத்தையும் இயக்கியவர் சேரன்.

நடிப்பதற்காகவே முதலில் விரும்பிய சேரன் இயக்குநராகிவிட்டார். அப்படியிருந்தும் ஒரு சில காட்சிகளில் சில படங்களில் தோன்றியிருக்கிறார்.

தற்போது இயக்கி வரும் 'விண்ணோடும் முகிலோடும்' படத்தில் பிரசாந்துடன் இன்னொரு கதாநாயகனாக நடிக்கிறார் சேரன். இவருக்கு ஜோடி சங்கவி. வரவேற்பு கிடைத்தால் கதாநாயகனாக தொடர்ந்து நடிப்பாராம்.

## ஷாலினி பாடல்

"சொந்தக் குரலில் பாட
ரொம்ப நாளா ஆசை
ஹலோ சசிலா ஆன்ட்டி
ஹலோ ஜானகி ஆன்ட்டி
குயில் பாட்டு சித்ரா
எல்லோரும் என்னை மன்னியுங்கள்"

இப்படி தொடங்கும் பாடல் 'அமர்க்களம்' படத்தில் இடம்பெறுகிறது.

இதனை முதன் முதலில் சொந்தக் குரலில் பாடியுள்ளார் நடிகை ஷாலினி.

சரண் இயக்கும் இப்படத்தில் அஜித்குமார், ஷாலினி ஜோடியாக அமர்க்களம் பண்ணுகிறார்கள்.

பாடலைப் பாடுவதற்காக 15 நாட்கள் ஐஸ்கிரீம் சாப்பிடாது இருந்தாராம் ஷாலினி. அதனால் பாடல் பதிவானதும் 9 கிலோ ஐஸ்கிரீம் வாங்கி ஷாலினிக்கு கொடுத்து திக்குமுக்காட வைத்தாராம் இயக்குநர்.




## சோனாலி வாக்குமூலம்

'காதலர் தினம்' படத்தில் நடித்துவரும் 'சோனாலி பந்த்ரே' பலமுறை சினி விசிட் வாசகர்களான உங்களுக்கு அறிமுகமானவர்தான்.

அவர் சமீபத்தில் அதிரடியாக கூறியுள்ள வாக்குமூலம் இது:

"எந்த ஆணுடனும் அரை மணி நேரத்திற்கு மேல் பேசினாலும் சலிப்பு ஏற்படுகிறது. என்னைப் பற்றி எவர் என்ன சொன்னாலும் பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டேன்.

நான் அழகாக இருப்பதால் என்னை விளையாட்டாக எடுத்துக் கொள்கின்றனர்!" என்கிறார்.

அஜய் தேவ்கானுடனும் சோனாலியை முடிச்சுப் போட்டனர்.

ஆனால் கஜோல் அவரைக் கொத்திக் கொண்டுபோய் கல்யாணம் பண்ணிக் கொண்டார்.

## காதோடு...

சமீபத்தில் தனது க...
'குமார' நடிகர் 'உன்னை...
சுற்றுகிறாராம். அது ...
யையும் கண்டிப் பார்...
கொண்ட படத்தில் நடி...
களை தாங்கிய சிம்ம ந...
கொண்டாராம்.

அம்பிக நடிகையில்...
நடிக்க ஆசைப்படுகிறா...
நடிகைதானாம். ஆடின...
காட்டினால் சும்மாயிரு...

ரம்ப நடிகை மட்...
வந்தாலும், அவ...
பார்ப்பாரே ...
செல்லமாட்ட...
றாராம் 'பூ'...
ளவுக்கு கற்...
முக்கிய இர...
யின் கைய...



களாக...
அது ...
நகைச்...
ஒரு வா...
வேலிட...
அதற்கு...
னாரா...
னையே...
என்ன ...
பிக ...
மிடம் க...
கொடுத்...
தது ...
தான...

மாதுரி டிக்ஷித்




மாதுரி டிக்ஷித்
படம்: என்ஜினியர்

திரையுலக மறுபக்கம் 106

## வாய்ப்புக்காக கொள்கை மாற்றம்

தமிழ்நாட்டிலிருந்து மயன்

தமிழில் மிகப்பெரிய வசூல் நடிகரால் அறிமுகமானவர் அந்த மூன்றெழுத்து நடிகை.

முதல் படம் நன்றாக ஓடியதால் நடிகையும் வேகமாக முன்னுக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டார்.

ஆனால் குறிப்பிடத்தக்க வாய்ப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளில் நடிக்க ஆரம்பித்தார்.

அங்கு இயக்குநர்கள் சிலருடன் அனுசரித்துப் போனதால் வாய்ப்புக்கள் கிட்டின.

ஒரு கட்டத்தின்பின்னர் திகட்டிப்போக, குறிப்பிட்ட இயக்குநர்கள் கைவிட்டனர். வாய்ப்புக்கள் குறைந்தன.

'கவர்ச்சி காட்டி நடிக்க மாட்டேன்' என்று உறுதியாகக் கூறிக்கொண்டிருந்தவர் அவர்.

ஆனால், பலரது ஆசைகளுக்கு தன் உடலை விருந்தாக்க வேண்டியிருந்தது. எனவே தனது முடிவை மாற்றிக்கொண்டார்.

எப்படியும் நடிக்கத் தயார் என்று இயக்குநர்களுக்கு கூறினார். அப்படிக் கூறுவதன் அர்த்தம் என்னவென்று இயக்குநர்களுக்கு புரியும்.

தமிழ்ப்பட இயக்குநர்கள் சிலரும் மூன்றெழுத்து நடிகையின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, பிரதியுபகாரமாக கவர்ச்சியாக நடிக்க வாய்ப்புக் கொடுத்தனர்.

இயக்குநரும், நடிகருமான ஒருவரது பலவீனத்தை அறிந்த நடிகை அவருக்கும் வலை வீசினார்.

அவரும் நடிகையின் கவர்ச்சியில் மயங்கியதுடன், தான் நடித்த புதுமையான படத்திலும் சிபாரிசு செய்தார்.

தன்னை 'ஏகபத்தினி விரதன்' என்று பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தபடி மலருக்கு மலர் தாவும் பித்தன் அவர். புதுமைப்பித்தன் என்றும் அழைக்கலாம்.

மூன்றெழுத்து நடிகையுடன் அப்படத்தில் நெருக்கமான பாடல் காட்சியில் நடித்தபோது, பித்தன் உணர்ச்சி வசப்பட்டுவிட்டார்.

### மனைவி விசாரிப்பு

அன்றிரவு நடிகர் வீடு திரும்ப நேரமானது. முன்னாள் நடிகையான அவரது மனைவி விசாரித்திருக்கிறார். ஜாடைமாடையாக தகவல் கிடைத்திருக்கிறது.

மறுநாள் நடிகர் படப்பிடிப்புக்கு சென்ற பின்னர், தனது உறவினர் ஒருவர் உதவியுடன், சில அடியாட்களுடன் புறப்பட்டார் நடிகை.

நேராக மூன்றெழுத்து நடிகை வீட்டுக்குப் போனார்கள். இவர்களைக் கண்ட நடிகை சுதாகரித்துக் கொள்வதற்கு இடையில், நடிகரின் மனைவி அவரை நெருங்கினார்.

தலைமுடியைப் பற்றி கன்னத்தில் பளார் பளார் என்று அறைவிட்டார்.

"இனிமேல் என் கணவனை கட்டிலுக்கு அழைத்தால் உன்னை உயிரோடு விடமாட்டேனடி" என்று எச்சரித்து விட்டுப் போய்விட்டார்.

அத்தோடு நடிகை அடங்கிப்போனார். வேறு பக்கம் தன் வலையை வீசத் தொடங்கினார்.

தற்போது படவாய்ப்புக்கள் குறைவானாலும், வருமானத்திற்கு குறையில்லை.

தினமும் மாலையானால் பெரும்புள்ளிகள் அவர் வீட்டுக்கு விஜயம் செய்கின்றனர்.

சென்னையில் இவர் முன்பு குடியிருந்த வீட்டுக்கு அருகே இருந்தவர்களுக்கு இவரது நடவடிக்கைகள் சகிக்கவில்லை. பிரச்சனை கிளப்பினார்கள். அதனால் வேறு வீட்டுக்கு மாறியிருக்கிறார்.

போதையில் உழல்வதும் மெத்தையில் புரள்வதுமாக இருந்த நடிகைகள் சிலர் இறுதியில் விரக்தியடைந்து தற்கொலை செய்து கொண்டனர்.

இந்த நடிகையும் அவ்வாறு துக்ககரமான முடிவை தேடிவிடக்கூடாதே என்று விஷயமறிந்த சினிமா உலகத்தினர் சிலர் வருத்தப்பட்டுக் கொள்கின்றனர்.

## மாதுரி வியப்பு

இந்தித் திரை உலகில் முதலிடத்தில் இருப்பவர் மாதுரி டிக்ஷித். புது நடிகைகள் பலர் வந்தும்கூட தனது இடத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கிறார். இன்னமும் இளமையோடு காட்சியளிக்கிறார்.

மாதுரியின் கவர்ச்சி முன்பாக புது நடிகைகளின் கவர்ச்சி எடுபடாது என்று இயக்குநர் சுபாஸ்கய் போன்றோர் கூறுகின்றனர்.

சஞ்சய் தத்தை காதலித்து ஏமாற்றியவர் என்று ரசிகர்களிடையே கெட்ட பெயர் இருந்தது. தற்போது அதுவும் மறைந்துவிட்டது.

இத்தனை சிறப்புப் பெற்ற மாதுரி டிக்ஷித் தமிழில் 'என்ஜினியர்' படம் மூலம் அறிமுகமாகிறார்.

அரவிந்தசாமி ஜோடியாக நடிக்கும் மாதுரிக்கு, இந்திப் பட கதாநாயகர்களைவிட அரவிந்தசாமியின் அணுகுமுறைகள் பிடிக்கிறதாம்.

'மென்மையாக நடந்து கொள்கிறார். அப்பாவியாக இருக்கிறார்' என்று வியக்கிறார் மாதுரி.

'என்ஜினியர்' படப்பிடிப்பு நிதிப் பிரச்சனையால் தாமதமாகிறது. இயக்குநர் ஷங்கர் உதவ முன்வந்துள்ளாராம்.

## பனிப்போர்

இயக்குநர் பாசிலின் படம் ஒன்றில் விஜய்-ஷாலினி நடிப்பதாக இருந்தது. பாசிலிடமே விஜய் படக்கதையைக் கூறுமாறு கேட்டாராம். அதனால் பாசிலுக்கு கோபம். அப்படம் கைவிடப்பட்டது.

தற்போது, 'மின்சாரக் கண்ணா' படத்தில் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமாருடன் விஜய்க்கு பனிப்போர் என்கிறார்கள்.

## சூர்யாவுக்கு புது ஜோடி

'பெரியண்ணா' படத்தின் பின்னர் சூர்யாவின் நடிப்பில் முதிர்ச்சி தெரிகிறது. அதனால் புதுப்பட வாய்ப்புகளும் அவருக்கு வந்துள்ளன.

எஸ்.ஏ.சந்திரசேகரனிடம் உதவியாளராக இருந்த கே.ஆர்.ஜெயா இயக்கும் படத்தின் நாயகன் அவர்தான். 'உயிரிலே கலந்தது' என்று படத்திற்கு பெயர் சூட்டியுள்ளனர். இசை:தேவா.

சூர்யாவுக்கு சோக்கான ஜோடியொன்றை புதிதாக அறிமுகம் செய்கிறார்கள். சிவகுமார், ரகுவரன், ராதிகா, வையாபுரி, பாரி வெங்கட் பாலாவிங் உட்பட பலர் நடிக்கவுள்ளனர்.

### முகப்பில்

ஜடேஜா,
மாதுரி டிக்ஷித்
விஜயகாந்த்

## வீரவரலாறு

'ரகசியப் பொலிஸ்' படத்தை நக்மாவை நம்பி சொந்தமாகத் தயாரித்தார் சரத்குமார். அப்போது இருவரும் ஒரே வீட்டில் தங்கிய காலகட்டம். நக்மாவும் தன் காதலரது படவெற்றிக்காக கவர்ச்சியை கொட்டினார். ஆனாலும் படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

நீண்டகாலத்தின் பின்னர் சரத்குமார் இப்போது சொந்தப் படத் தயாரிப்பில் குதித்திருக்கிறார். படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'வீரவரலாறு'.

விஜய...
தைப் பே...
தம்பியா...
கை...
கவும், ...
நடித்த ...
திற்கும் ...
வி...
நன்றா...
அடுத்த...
மிட எ...
படப் பி...



படிப்பகம்

www.padippakam.com

## ...சொல்லுகிறோம்

...ன நடிகையைப் பிரிந்த
...ய நடிகையின் பின்னால்
... என்று 'சிம்ம' நடிகை
...ம். இரண்டு எழுத்துக்
...ரை. நடிகரது சில்மிஷங்
... அதன்பின்னர் வெட்டிக்

...தரி நடிகையும் மறுபடி
...ரபம் போட்டவர் அம்பிக
..., பாடின வாயும் ஆசை
...?

வேறு எவர் குறுக்கே
... தொட்டுப்
...தாடர்ந்து
...று கூறுகி
...க. அந்த
...யக்குநரது
...'பூ' நடிகை
...ப்பதாகக்
...றார்கள்.

...த்து ஜோடி
...கிறீர்களே.
...' என்று
... நடிகர்
...கைச்சுவை
...ட்டாராம்.
...ர் சொன்
...என் ரச
...டித்தான்!"
...ாலும் அம்

## கணேஷ்-வசந்த்

'சக்தி' ரி.வியில் 'நிம்மதி உங்கள் சாய்ஸ்' தொடரில் பொறுப்பில்லாத கணவனாக நடித்து பெண்களிடம் பயங்கரமாக வசை வாங்கியிருப்பவர் விஜய் ஆதிராஜ். திட்டு வாங்குமளவுக்கு தத்ரூபமான நடிப்பு. இவர் பொண்ணு வீட்டுக்காரன் படத்திலும் இரண்டாவது கதாநாயகனாக நடித்திருந்தார்.

இப்போது மற்றொரு அரிய வாய்ப்பு இவருக்கு கிடைத்திருக்கிறது. மணிரத்னம் சின்னத்திரைக்காக தயாரிக்கும் தொடர் 'கணேஷ் வசந்த்.' நாவலாசிரியர் சுஜாதாவின் கதைதான் தயாராகிறது.

இதில் கணேஷாக விஜய் ஆதிராஜும் வசந்த்தாக சுரேசும் நடிக்கின்றனர். இதனை இயக்கி நடிக்கவும் போகிறார் சுகாசினி.



ஜெயராம்
படம்: 'ஃப்ரெண்ட்' (மலையாளம்)

## நீரும், பெண்ணும் ஒன்று

### ரகுமான் இசையில் வைரமுத்து

'கேளடி கண்மணி' உட்பட பல இதமான படங்களை இயக்கிய வஸந்த் தரும் படம் 'ரிதம்'. அர்ஜுன்-மீனா ஜோடி. விரைவில் வெள்ளித்திரையில் உலாவரப்போகிறது.

இப் படத்திற்கு ஐந்து பாடல்களை, நிலம், நீர், காற்று, வானம், நெருப்பு ஆகிய ஐந்து தலைப்புக்களில் உருவாக்கியுள்ளார் வைரமுத்து.

நீரையும் பெண்ணையும் ஒப்பிட்டு எழுதப்பட்டுள்ள அட்டகாசமான பாடலில் சிலவரிகள்:

நடந்தால் ஆறு
எழுந்தால் அருவி
நின்றால் கடலல்லோ
சமைந்தால் குமரி
மணந்தால் மனைவி
பெற்றால் தாயல்லோ

வெட்கம் வந்தால் உறையும்
விரல்கள் தொட்டால் உருகும்
வண்ண வண்ண பெண்ணே
வட்டமிடும் நதியே
வளைவுகள் அழகு உங்கள்
வளைவுகள் அழகு

மெல்லிசைகள் படித்தல்
மேடு பள்ளம் மறைத்தல்
நதிகளின் குணமே அது
நங்கையின் குணமே

தீங்கனியில் சாறாகி
பூக்களிலே தேனாகி
பசுவினில் பாலாகும் நீரே
தாயருகே சேயாகி
தலைவனிடம் பாயாகி
சேயருகே தாயாகும் பெண்ணே

பெண்ணும் ஆறும்
வடிவம் மாறக்கூடும்.
நீர் நினைத்தால்
பெண் நினைத்தால்
கரைகள் யாவும்
கரைந்து போகக்கூடும்!"

இப்பாடலுக்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார். பெரும் செலவில் பாடல் காட்சியை படமாக்கியுள்ளனர்.

## மினி சினி

* மணிரத்னத்தின் 'அலை பாயுதே' படத்தில் முதன் முறையாக அரவிந்தசாமியும் குஷ்புவும் ஜோடியாக நடிக்கிறார்கள். இதில் அரவிந்தசாமிக்கு டாக்டர் வேடம்.

* சத்யராஜின் 'பூவிழி வாசலிலே' படத்தில் குழந்தை நட்சத்திரமாகப் பிரகாசித்த பேபி சுஜிதா. இப்போது வளர்ந்து விட்டார். 'ஹலோ' படத்தில் இரண்டாவது நாயகியாகவும் நடிக்கிறார்.

* பிரியதர்ஷன் இயக்கத்தில் மம்முட்டி நடிக்கும் மலையாளப்படத்திற்கு 'மேகம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் இந்தி நடிகை பூஜா பத்ரா கதாநாயகியாக நடிக்கிறார்.

* தமிழில் நன்றாக ஓடிய 'எனக்கொரு மகன் பிறப்பான்' படம் இந்தியில் 'தில்தோ தடுக்கன்' என்ற பெயரில் தயாராகவுள்ளது. தமிழில் ராம்கி நடித்த வேடத்தில் இந்தியில் கோவிந்தா நடிக்கிறார்.

* பாண்டியராஜன் நடிக்கும் 'கபடி கபடி' படத்தைத் தயாரித்து வரும் கே.பாக்யராஜ், அடுத்த கே.சுபாஷ் இயக்கத்தில் பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றையும் தயாரிக்கவுள்ளார்.

* சங்கர்-கணேஷ் இரட்டை இசையமைப்பாளர்களில் சங்கரின் மகன் ஜெய்கிஷன் 'புதிய தீர்ப்பு' என்ற படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.

* 'அமர்க்களம்', 'அலைபாயுதே' ஆகிய இரண்டு தமிழ்ப்படங்களில் நடித்து வரும் ஷாலினி, 'நிறம்' என்ற மலையாளப் படம் ஒன்றிலும் நடித்து வருகிறார்.

* நடன இயக்குநராக இருந்து நடிகர் அவதாரம் எடுத்த பிரபு தேவா, அடுத்த வருடத்தில் படமொன்றை இயக்கப் போகிறார்.

* தெலுங்கில் தயாராகி வரும் 'தலைமுறை' படத்தில் தமிழில் பானுப்பிரியா நடித்த வேடத்தில் தெலுங்கில் நடித்து வருகிறார் 'கல்கி' பட நாயகி ஸ்ருதி.

* 'படையப்பா' படத்தில் ரஜனியின் நண்பர்களில் ஒருவராக நடித்த ரமேஷ்கண்ணா, அடுத்து 'மின்சாரக் கண்ணா' படத்தில் விஜய் அண்ணனாக நடிக்கவுள்ளார்.

## ஒரே பாடல்

பணத்தைக் கொட்டிக் கொடுத்தால், ஆட்டம் போடத் தயார். ரோஜா, ரம்பா, சிம்ரான் ஆகியோர் இந்தக் கொள்கையில் உறுதியாக உள்ளனர்.

'காதல் கவிதை' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் ரோஜா துள்ளி விட்டு போனார். 'எதிரும் புதிரும்' படத்தில் ஒரு பாடல் காட்சியில் சிம்ரான் கவர்ச்சி விருந்து படைத்தார். வரப் போகும் 'காதலர் தினம்' படத்தில் ரம்பா ஆட்டம் போட்டிருக்கிறார்.

'அந்தப்புரம்' படத்திலும் பார்த்திபனுடன் ஒரே ஒரு பாடலில் கவர்ச்சி கொட்டி கலக்க இருக்கிறார் சிம்ரான்.

## கட்டான காந்த்

முரசின் முகப்பில் கம்பீரமாக இருக்கிறார் விஜயகாந்த்.

அவரைப் பார்ப்பவர்கள் வியந்து போகிறார்கள். காரணம், உடற்பயிற்சிமூலம் 15 கிலோ எடை குறைந்துள்ளார்.

எடை குறைந்ததால் கட்டான தோற்றத்துடன் காட்சி அளிக்கிறார். சிம்ரானுக்கு ஜோடியாக ஈடுகொடுக்க தோதான உடம்பு.



## அங்கு சாந்தி

'ராஜஸ்தான்' படத்தின் தமிழ் வெளியீட்டில் சரத்குமாருக்கு விஜயசாந்தியைவிட சற்றுக் கூடுதலான முக்கியத்துவம் இருக்கிறது. ஆனால் தெலுங்கு வெளியீட்டில் விஜயசாந்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்காக மேலதிக சண்டைக் காட்சிகளும் சேர்க்கப்பட்டதாம். தெலுங்கின் சூப்பர் ஸ்டாரிணியாச்சே!

விஜயசாந்தி
படம்: தளபதி கோட்டை




சங்கீதா
படம்: ஜெயம்

## தம்பி நெப்போலியன்

...விக்ரமன் இயக்கத்தில்
...த நடிக்கும் படம் 'வானத்
...இப்படத்தில் விஜயகாந்தின்
...டிக்கிறார் நெப்போலியன்.
... அரிவாளுடன் வில்லனா
...ார் கதாநாயகனாகவும்
...போலியன் தம்பி வேடத்
...மதித்து விட்டார்.
...ந்தின் 'பெரியண்ணா'
...டிக் கொண்டிருப்பதால்,
...த்தை விரைவாக வெளி
...ியுள்ளனர். அதனால்
...ு தீவிரமாக நடக்கிறது.

## இயக்குநரின் ஆசை

'சந்திரலேகா' 'நிலா' ஆகிய படங்களை இயக்கியவர் நம்பிராஜன். இந்த நம்பிராஜனுக்கு திடீரென்று கதாநாயகனாக நடிக்க ஆசை வந்தது. 'ருக்குமணி' என்னும் படத்தை இயக்கி கதாநாயகனாக நடிக்க ஆரம்பித்தார். பல வருடங்களாகியும் படம் முடிந்தபாடில்லை.

அப்படியிருந்தும் சற்றும் சளைக்காமல் இன்னொரு படத்தையும் இயக்கி நடிக்க முடிவு செய்துள்ளார். 'உன்னைத் தேடி' படத்தின் மூலம் அறிமுகமான மாளவிகாவுடன் ஜோடி சேரும் ஆசையில் புதிய படத்துக்கு பூஜை போட்டிருக்கிறாராம். இப்படத்திற்கு 'நீயும் நானும் ஒன்று' என்று பெயர் சூட்டியுள்ளார்.

## பாடல் இல்லாத படம்

மணிரத்னம் இயக்கத்தில் மாதவன், ஷாலினி ஆகியோர் நடிக்கும் படம் 'அலை பாயுதே'.

இப்படத்தில் அரவிந்தசாமியை கதாநாயகனாக நடிக்க வைக்கவே முதலில் திட்டமிட்டார் மணி. பின்னர் அந்த முடிவு கைவிடப்பட்டது. மாதவன் கதாநாயகனாக நடிக்கிறார்.

திடீரென்று என்ன நினைத்தாரோ அரவிந்தசாமியையும் அழைத்து நடிக்க வைத்திருக்கிறார். குஷ்புவும் நடிக்கிறார். பிரகாஷ்ராஜும் உண்டாம்.

இன்னொரு சங்கதி என்ன தெரியுமா? இப்படத்திற்கு ஏ.ஆர். ரகுமான்தான் இசை. ஆனால் படத்தில் பாடல்களே கிடையாதாம்.

## கலகல ஊர்வலம்

'ராஜஸ்தான்' 'வாலி', 'நிலவே முகம் காட்டு' 'பூமகள் ஊர்வலம்', 'பூ மனமே வா' ஆகிய படங்கள் ஒரே சமயத்தில் வெளிவந்தன.

இப்படங்களில் சினிவிசிட் பார்வையில் முதலிடம் பெறும் படம் 'பூ மகள் ஊர்வலம்'.

பிரசாந்த், ரம்பா, லிவிங்ஸ்டன், விவேக், மணிவண்ணன் ராதாரவி, மாஸ்டர் மகேந்திரா, ராதிகா ஆகியோர் நடித்துள்ளனர்.


சிரித்து சிரித்து வயிறு புண்ணாக வேண்டுமா? உடன் பார்க்கலாம். பிரசாந்த், லிவிங்ஸ்டன், விவேக் மூவருமே நகைச்சுவை கூட்டணி அமைத்து கலக்குகிறார்கள். மணிவண்ணனுக்கு குணசித்திரமான பாத்திரம். புதிய இயக்குநர் மதுரவன முதல் படத்திலேயே தேறிவிட்டார்.

வழக்கமாக முன்பாதியில் சிரிக்க வைத்து விட்டு பின்பாதியில் குடம் குடமாக கண்ணீர் விடவைப்பார்கள். இதில் முன்காட்சிகளில் மாஸ்டர் மகேந்திரா அழவைக்கிறான். அது ஒரு பதினைந்து நிமிடம்தான். பின்னர் காட்சிக்கு காட்சி கலாட்டாதான்! பாடல்கள், இசை, ஒளிப்பதிவு என்பனவும் காதுக்கு இதம். கண்ணுக்கு குளிர்ச்சி!



படிப்பகம்

www.padippakam.com



## யார் இவர்?

இந்தத் துடியாட்டமான துடுப்பாட்டவீரர் யார் என்று தெரிகிறதா? தற்போதும் ஆடி வருகிறார். என்ன, கண்டுபிடித்து விட்டீர்கள் போலிருக்கிறது...?!

பதிலுதவி: 18ம் பக்கம்.

## தேன் கிண்ணம்

### "ஒரு சொட்டு(ச்) சோகம்"

மன்னிக்கவும்...
மாபெரும் தவறொன்றிற்கு
மன்னிப்பு கேட்பது
மடத்தனம் என்பது
என் மனதுக்குள்
உறைத்தாலும்...
கேட்பது...
கேட்பது...
சமுதாய கடமையல்லவா...?

வருந்துகின்றேன்..
உன் மடல்களுக்கு
வாய் திறவாமல்
இருந்ததற்கு
வருந்துகின்றேன்...

ஓ...
எத்தனை
சோக சாம்ராஜ்யங்களுக்குள்
நாம்
சோடியாய் மூழ்கிறோம்...

நீ—இல்லாமல்
தனிமைச் சோகமொன்றுக்குள்
தனியாய்
தவித்துக் கொள்கிறேன்...
உன் துணையில்லாமல்
என் மனம்
பிணமாய் கிடக்கிறது....
காதலி இல்லாமல்
என் கவிதைகள்
காயங்களோடு
காய்ந்து கிடக்கிறது...

நேற்றைய மடலில் கூட
நான் நலமா...?
என்று—நீ
நலம் விசாரித்திருந்தாய்...!

காலம் கடந்த
ஞானம் இது.
இதயத்தோடு ஒட்டாத
சில
ஸ்நேகங்களுக்காய்
அஞ்சலில் எதற்கு
கண்ணீர் அஞ்சலி?

என்றாலும் சகி...
சோகத்தோடு
வாழ்க்கையை
விசாரித்துக் கொண்டிருக்கும்
என்னால்
இதைத்தான் எழுத முடியும்.

"இன்னும்—நான்
உயிரோடிருக்கிறேன்!"

அ. சுதாசேகர், பொத்துவில்.

### உயிர் நீத்த காதல்

உன்
மடல் உமிழ்ந்த
நெருப்பு வரிகளால்
இந்த சரப் பிரதேசத்தின்
கடும் குளிரையும் மீறி
உஷ்ணமாகிப் போனேன்
நான்!
..
நீ அனுப்பியது
கடிதமல்ல;
தபால் குண்டு
படித்த போது
வெடித்துச் சிதறியது
இதயம்.
..
சாம்பலாகிப் போனதடி
மனசு.
குப்பை மேடென்று நினைத்தோ
தீ வைத்தாய்....?
..
என்—
உயிர் குடிக்கத்தானா
காதல் பாம்பே
என் இதயத்துக்குள்
புற்று வைத்தாய்?
..
நீ வேண்டுமானால்
விளையாட்டுப் பிள்ளையாக
இருக்கலாம்; ஆனால்
நானொன்றும் பந்தல்லவே...?
..
அன்பாயிருந்தவளே...
அவசரப்பட்டு—என்
காதல் குழந்தையின்
கழுத்து நெரித்து விட்டாய்.
இனி நீ
அழுது புரண்டாலும்
அதை உயிர்ப்பிக்க
முடியுமா...?

கே.எம். மர்சூக்- தோப்பூர்.

## முரசின் 300 பரிசுமழையில் வெற்றியீட்டியவர்கள் இவர்கள்தான்!

101. எஸ். ஸ்ரீரவி
இல. 118/50, குருணாகல் வீதி, மெல்புர, சிலாபம்.
102. வாணி மோகன்ராஜ்
இல. 7, ஸ்ரீ விக்கிரம மாவத்தை, மட்டக்குளிய, கொழும்பு-15.
103. திருமதி. ஜே. சுரேஸ்குமார்
13/1, பழைய கற்குளி வீதி, கல்கிசை.
104. ஏ. பாலா
51, பிரதான வீதி, கலஹா.
105. எஸ்.ஏ.எச்.ஏ. மஜீத்
காயர் வீதி, ஏறாவூர்.
106. இரா. தேவகுமார்
தொட்டுலாகலை, அப்புத்தளை.
107. எஸ். ரவிக்குமார்
கச்சேரி, திருகோணமலை.
108. சுபாஷினி சண்முகம்
மூர் வீதி, மன்னார்.
109. ஆ. அசோக்கானந்த்
ஒலிரூட் தோட்டம், தலவாக்கலை.
110. சோ. ரங்கநாதன்
ஆரையம்பதி-01, ஆரையம்பதி.
111. யோகராசா விருந்தியா
மினி பலர் வீதி, கஞவாஞ்சிக்குடி.
112. நே. துருஸ்திகா
36, பெரிய பள்ளிவீதி, புத்தளம்.
113. திருச்செல்வம் ஜெயந்தன்
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
114. கே.என். பிரகாஷன்
பிரதான வீதி, பெரிய புல்லுமலை, செங்கலடி.
115. மு. முரளிதாசன்
திருமலை வீதி, மாங்கேணி, வாகரை.
116. ரா. துரைபாண்டியன்
39, லோசன் வீதி, நுவரெலியா.
117. பாத்திமா ரஸ்கா ஆஸ்மி
276ஏ, மார்க்கட் வீதி, சாய்ந்தமருது-7.
118. அ. ஜெயசித்ரா
இந்தகல தோட்டம், மேற்பிரிவு, நமுனுகுல.
119. ஏ.ஆர். யுஸ்ரியா
120, கிதுலம்பிடிய, உலுவிடிகே, காலி.
120. எம்.எஸ். அரபா
19, மீ எல்ல, மாத்தறை.
121. ரிஸ்வியா ஜுனைட்
தாஹா நகர், மூதூர்-7.
122. த. ஜெயகாந்தி
79/1, உடங்காவல், கொச்சிக்கடை.
123. சி. செல்வநாயகம்
அப்புகஹகொட, வேத்தாவ, கலகெதர.
124. ஏ. கனகரட்னம்
20, பஸ் தரிப்பிடம், ராகல, ஆள்கரனோயா.
125. கு. தர்மினி
245, மோதர வீதி, கொழும்பு-15.
126. எம்.எம்.எம். அஸ்மி
103/9ஏ, ஹோரகொல்ல, வறகாபொல.
127. மங்களம்
02, தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி.
128. க. விஜித்தா
264, சகுந்தலா ஸ்ரோர்ஸ், வகுவபிட்டிய, புசல்லாவ.
129. எம்.பி.எம். ரிஸ்வான்
233, வெளிப்பிட்டி வீதி, வெளிகம.
130. பிரேமிளா
444, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
131. பயாஸ்
91, புத்தளம் வீதி, சிலாபம்.
132. ஏ. மலர்
இல. 69, சேர்கிலர் வீதி, ஹட்டன்.
133. சி. செந்தில் வாணி
11, வேலோன் பெசேஜ், கொழும்பு-2.
134. வி. ரத்தினம்
320, முதலாம் பிரிவு, பியதிஸ்ஸ புர, அநுராதபுரம்.
135. ஆ. சரஸ்வதி பவானி
அல்பியன் குரூப், அக்கரபத்தனை.
136. ஜி. ஆறுமுகம்
அப்பர் டிவிசன், மடுல்சீமை.
137. ஹசீனா ஷபா அத்
253, சாகிராமன்சில், நிந்தவூர்-4.
138. ஆர்.பி.குரூஸ்
பிரதேச சபைச் செயலகம், மன்னார்.
139. க. கிறிஸ்ரி லோகநாதன்
கத்தோலிக்க ஆலய வீதி, திருக்கோவில்.
140. கே. சர்மிளா
கோளாவில்-3, நாவற்காடு, அக்கரைப்பற்று.
141. ம. ரியானா
பெரிய கிண்ணியா, கிண்ணியா-6.
142. க. செல்வன்
137/2பி, செட்டியார் தெரு, கொழும்பு-11.
143. வி. புஸ்பலதா
118, புதிய வீட்டு திட்டம், எல்லப்பர் மருதன் குளம், வவுனியா.
144. எம். ரவி
71, பி. கெஸ்டல் ஹில் தெரு, கண்டி.
145. த. சுகந்தி
20/5, றொக்ஸி தோட்டம், வெள்ளவத்தை.
146. எம்.எச்.எம். தஸ்லீம்
சயிப் வீதி, கல்முனை-05.
147. ஆர். வசந்தி
சௌலன்ட் அப்பர் தமிழ் வித்தியாலயம், லுணுகலை.
148. ஜி.ஜே.சுதா
கந்தேகெதர, பதுளை.
149. P. MARIASEELAN
SACKINGERSTR-17
4310 RHEINFELDEN
SWITZERLAND.
150. S. SIVAKUMAR
F.A.A.C.CO.W.L.L.
POST BOX: 25809
SA FAT NO. 13119, KUWAIT.

ஏனையோர் விபரம் அடுத்த முரசில்

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கீர்னீர'

06.06.99 முதல் 12.06.99வரை

**மேடம்:**
ஏழரைச்சனி நீசம் பெறுவதால் அமைதியின்மையும் கருமங்கள் தடை தாமதங்களுடன், நிறைவுறும். எதிலும் வெறுப்பு ஏற்படும். நோய் துன்பங்கள் தலைகாட்டும். அச்சுவினி நட்சத்திரக்காரருக்கு வார இறுதியில் பணம் சேரும்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, வியாழன்
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 07.
அதிஷ்ட திகதிகள் : 9,10.

**இடபம்:**
எதிலும் நிலையான நன்மை கிட்டும். கல்வி, தொழில் சீராக இருக்கும். தூர இடத்துச் செய்தி நிம்மதி அளிக்காது. கார்த்திகை நட்சத்திரக்காரருக்கு உறவினர் உதவி கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண் : 3.
அதிஷ்ட திகதிகள் : 7, 11.

**மிதுனம்:**
கிரக பலம் 11ம் வீட்டில் சிறப்புப் பெறுவதால் எடுத்த காரியங்கள் கைகூடும். கவலைகள் மறையும். திருமணப் பேச்சுக்களுக்கு இடமுண்டு. சுப சம்பவங்கள் நடக்கக் கூடும். திருவாதிரை நட்சத்திரக்காரருக்கு யோகமான காலமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 12,10.

**கர்க்கடகம்:**
மனவேதனை நிலவும் காலமிது. 10ம் இடத்து வியாழன் அலைச்சல்களைத் தரும். எதிர்பார்த்த கருமம் ஏமாற்றம் தரலாம். பொறுமையுடன் செயற்படவேண்டிய காலம். ஆயிலிய நட்சத்திரக்காரர்களுக்கு பணம், சொத்துக்கள் சேரலாம்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண் : 04.
அதிஷ்ட திகதிகள் : 10, 11.

**சிம்மம்:**
பாக்கிய ஸ்தானத்தில் கிரக நிலை சிறப்படைவதால் பிரயாண வெற்றி. உறுதியான செயற்பாடு காணப்படும். காதலர்களுக்கு சிறப்பான காலம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், மக நட்சத்திரக்காரர்களுக்கு இது பொற்காலம். துலா ராசிப் பெண்களின் உதவி கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மருண்; எண் : 01.
அதிஷ்ட திகதிகள்: 10,12.

**கன்னி:**
அட்டமஸ்தானத்து சனி நல்ல பலன்களைத் தராது. எதிர்பாராத் தலை தோல்வியைத் தழுவும். குடும்பத்தில் சிக்கல்கள் தோன்றும். இவ்வாரம் இவ்விராசியினர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். முக்கியமாக உத்தர நட்சத்திர பெண்கள் கவனமாக இருக்க வேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 03.
அதிஷ்ட திகதிகள்: 12,8.

**துலாம்:**
களத்திரஸ்தான கிரகபலன் எதிர்பார்த்த கருமம் வெற்றிபெறச் செய்யும். மகிழ்ச்சி நிலவும். குடும்பத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சுவாதி, விசாக நட்சத்திரப் பெண்களுக்கு யோகமான காலம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ரோஸ்; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 10,12.

**விருட்சிகம்:**
எதிர்பார்த்த முடிவுகள் ஏமாற்றம் தரும். தூர இடத்துச் செய்தி நல்ல பலனைத்தரும். கஷ்டமாக இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் உதவி கிடைக்கும். அனுஷம், கேட்டை நட்சத்திரக்காரருக்கு நல்ல செய்திகள் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 05.
அதிஷ்ட திகதிகள்: 9,10.

**தனுசு:**
எதிர்பார்த்தவை நல்ல பலனைத் தரும். பண வசதிகள் ஏற்படும். எடுத்த காரியங்கள் நிறைவு பெறும். நெடுநாள் கனவுகள் நனவாகும். உத்திராட நட்சத்திரக்கார ஆண்களுக்கு சிறப்பான காலம்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 6, 10.

**மகரம்:**
எதிலும் நிதானமான நிலை காணப் படமாட்டாது. நோய் துன்பங்கள் தலை காட்டும். குடும்பத்தில் பிரச்சனைகள் தோன்றலாம். நிதானம் தேவை. திருவோண நட்சத்திரப் பெண்களுக்கு சிக்கலான காலம்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 6,9.

**கும்பம்:**
நோய் துன்பங்கள் தலையெடுக்கும். வியாழன், சனி மூன்றில் உள்ளதால் முடி துறந்த மன்னர் போல் அலைச்சல் பட நேரிடும். பிள்ளைகளுக்கு பல சிக்கல்களும் வழக்குக் கணக்குகளும் ஏற்படலாம். புரட்டாதி, அவிட்ட நட்சத்திரக்காரர்கள் கவனமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 9, 11.

**மீனம்:**
வியாழன், சனி 2ம் வீட்டில் இருப்பதால் மகிழ்ச்சி நிலவும். தொலைதூர நற்செய்தி கிடைக்கும். பலகாலம்பட்ட துன்பங்கள் மறையக்கூடும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், சனி
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 03.
அதிஷ்ட திகதிகள் : 12, 9.

## நில்-கவனி-முன்னேறு



சந்தோஷம் எதிர்காலத்தில் தானாகவே உங்களைத் தேடிக்கொண்டு வரப் போகிறது என்று கனவுலகிலேயே வாழ்ந்து வராதீர்கள்.

ஒருவனுடைய வாழ்க்கையிலேயே மிக முக்கியமான நேரம் அவன் வாழ்ந்து வரும் நிகழ்காலம்தான்.

ஒருவன் தன் நிகழ்காலத்தை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளுகிறான் என்பதைப் பொறுத்துத்தான் அவனுக்கு எதிர் காலத்தில் கிடைக்கும் புகழ், செல்வம், சந்தோஷம் போன்றவைகள் அமையும்.

நேற்று என்பது செத்துப் போனவைகளின் பட்டியலிலே சேர்க்கப்பட்டுவிட்டது. அதைக் குழித் தோண்டி புதைத்தாகி விட்டது. அது இப்போது உயிரற்ற ஜடப் பொருள்தான்.

கடந்த காலம் கடினமானதாக இருந்திருக்கலாம். கசப்பான சம்பவங்கள் நிறைந்ததாக இருந்திருக்கக்கூடும்.

நீங்கள் நிறைய அநியாயங்களையும் அவமானங்களையும் சந்தித்திருக்கக்கூடும். உங்களுடைய உழைப்பிற்குத் தகுந்த பலன் கிடைக்காமல் இருந்திருக்கக்கூடும்.

கடந்த காலத்தில்தான் கண்ட துயரங்களை அனைத்து நேரமும் நினைத்து வந்து தன் நிகழ்காலத்தை வீணாக்கிக் கொள்ளுபவனுக்கு மகிழ்ச்சி நிறைந்த எதிர்காலம் இல்லாமலேயே போய்விடும்.

நாளை என்பது வெறும் கனவு. அது இன்னும் பிறக்காத குழந்தை. அது இன்னும் எழுதப்படாத கதை. அது இப்போது வெறும் கற்பனைதான்.

ஆனால் நிகழ்காலம் உயிர்த் துடிப்புடன் நம்முன் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. தான் வாழ்ந்து வரும் இந்த வினாடியை ஏற்கனவே திட்டமிட்டபடி நன்கு பயன்படுத்திக்கொள்ளுபவன்தான் நிறையச் சாதனைகளைப் புரிந்துதான் ஆசைப்பட்ட அனைத்தையும் பெற்று சந்தோஷமாக வாழ்ந்து வர முடியும்.

இன்றைய நாளில் சந்தோஷமாக வாழ்ந்து வருவதாக சபதம் எடுத்துக் கொண்டு அதை நடைமுறையில் செய்து காட்ட வேண்டும்.

தானும் சந்தோஷமாக வாழ்ந்து தான் சந்திக்கும் அனைவருக்கும் சந்தோஷத்தை கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

இப்படித் தினமும் சந்தோஷமாக வாழ்ந்து வருபவன் தன் வாழ்க்கையை மாபெரும் வெற்றியாக மாற்றி விட்ட மாபெரும் சாதனையைப் படைத்தவனாக உருவெடுப்பான்.

சந்தோஷம் அனைவருடைய கைகளுக்கு எட்டும் தூரத்திலேயே இருப்பதை பெரும்பாலானவர்கள் தெரிந்து கொள்ளாமல் வாழ்ந்து வருகிறார்கள்.

தான் வாழ்ந்து வரும் இடத்திலேயே சந்தோஷத்தை அனுபவிக்கத் தவறியவன் சுவர்க்கத்திற்கே சென்றால்கூட நரகத்தைத் தான் காண்பான்.

ஒருவன் சந்தோஷத்தைத் தன் உள்ளத்திலேயே உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

நிலத்தை நன்கு கொத்தி, ரோஜா, பதியன்களை நட்டு, சரியான நேரங்களில் சரியான அளவில் உரமிட்டு, தினமும் போதுமான அளவில் தண்ணீர் ஊற்றி அவைகளை மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்தால், அங்கு சில மாதங்களுக்குப் பிறகு வண்ண வண்ண ரோஜா மலர்கள் மலர்ந்து மணம் வீசுவதை நாம் காணமுடியும்.

உழைப்பும் கவனிப்பும் இல்லாத நிலத்தில் முட்புதர்களும் எருக்கஞ் செடிகளும் தான் மண்டிக்கிடக்கும்.

'சந்தோஷம்' என்ற செடியின் விதையை மனதில் நட்டு அதை நன்கு பாதுகாத்து வந்தால் 'சந்தோஷம்' என்ற மலர்கள் அவன் உள்ளத்தில் மலர்ந்து அவனுக்கு நிறையச் சந்தோஷத்தை கொடுக்கும்.

கட்டுப்பாட்டுடன் இயங்காத மனம் பாழ்பட்ட கோவிலைப் போன்று காட்சி தரும்.

பி.எஸ்.ஆர்.



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## காய்ச்சலை அறிவதற்கு...?

குழந்தைகளின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தால் நல்ல சூடாக இருக்கும். ஆனால் அது காய்ச்சலா? காய்ச்சல் என்றால் அதன் அளவு என்ன என்று தெரியாமல் பலர் பயந்து போவார்கள். வீட்டில் வெப்பமானி இருந்தால் கவலை இல்லை. உடனடியாகக் காய்ச்சலின் அளவைக் கண்டறிந்து விடலாம். சரி, வெப்பமானியை எப்படிப் பயன்படுத்துவது?



★ வெப்பமானியின் 'பல்ப்' பகுதியில் பிடிக்கக்கூடாது. மறுபாகத்தைக் கையில் பிடித்து, கையில் இரண்டு மூன்று முறை தட்ட வேண்டும். (பாதரசம் 'பல்ப்'பின் அடிப்பகுதிக்குச் செல்லவே தட்ட வேண்டும்.)

★ நாக்கின் அடியிலோ, அக்குளிலோ வெப்பமானியின் பல்ப் பகுதியை 3 நிமிடம் வையுங்கள். (குழந்தைகள் என்றால் நாக்கின் அடியில் வைக்க வேண்டாம். அவர்கள் கடித்து விடக்கூடும்.)

★ பின் வெப்பமானியை வெளியே எடுத்துவிடவேண்டும். வெள்ளை நிறப்பாகம், பார்க்கிறவரின் எதிர்வசமாக இருக்க வேண்டும். வெள்ளி நிறம்-சிவப்பு நிறக்கோடு தெரிகின்ற அளவைப் பாருங்கள். அந்தக் கோடு இருக்கும் இடமே உடல் சூடாகும். கோடு 97 பாகைக்கு மேல் இருந்தால் காய்ச்சல் ஆகும்.

★ சாப்பிட்டவுடனும், குளித்தவுடனும் காய்ச்சல் அளவு பார்க்கக்கூடாது. அப்போது கிடைக்கும் அளவு சரியானதாக இருக்காது.

## பயனுள்ள குறிப்புகள்



★ பட்டு மற்றும் வொயில் புடவைகள் அணியும் பொழுது புடவையின் நிறத்திற்கு ஏற்ற நிறத்தில் பாவாடை அணிந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் புடவையின் சிறப்பு எடுபடாது.

★ கூந்தலைக் கட்டுவதற்கு ரப்பர் பாண்டுகளை உபயோகிக்கக்கூடாது. அதிலுள்ள சிலவகை இரசாயனப் பொருட்கள் கூந்தலை இற்றுவிடச் செய்யும்.

★ பரந்த முகம் உள்ள பெண்கள் நெற்றியில் பொட்டிட்டுக் கொள்வதுடன் கன்னத்தில் மெல்லிய பொட்டிட்டுக் கொண்டால் அழகாக இருக்கும்.

★ நெற்றியில் குங்குமம் இட்டுக்கொண்ட பிறகு அதைச் சுற்றி வேறு வண்ணத்தில் மெல்லிய கோடிட்டுக் கொண்டால் அழகாகத் தோன்றும்.

★ தூக்கம் வராமல் கஷ்டப்படுபவர்கள் வெந்தயக் கீரை சாற்றுடன் ஒரு கரண்டி தேனைக் கலந்து சாப்பிட்டு வந்தால் இரவில் நல்ல தூக்கம் வரும்.

★ நெல்லிக்காயைக் காய வைத்துப் பொடி செய்து தேன் அல்லது நெய்விட்டுக் குழைத்து இரவு உணவுக்குப் பின் சாப்பிட்டுவந்தால் வயதான காலத்திலும் கண்பார்வை மங்காது.

★ கருவுற்ற பெண்கள் அடிக்கடி முள் ளங்கி, முருங்கைக் கீரை, நெல்லிக்கீரை ஆகியவற்றை உணவில் சேர்த்து வந்தால் கை கால் வீங்காது. சிறுநீரும் நிறைய வெளியாகும் பிரசவமும் சுலபமாகும்.

★ வழக்கமான பற்பசையில் பல் தேய்த்து விட்டுப் பிறகு மாவிலையினால் பல் துலக்கினால் பற்கள் 'பளிச்'சென்று வெண்மையாக இருக்கும்.

## சமையல் யோசனை



• கடலை உருண்டை, எள் உருண்டை, பொரி உருண்டை எல்லாம் செய்து சாப்பிட்டு அலுத்துப் போய் விட்டதா? இதோ ஒரு புது உருண்டை. சவ்வரிசையை வெறும் வாணலியில் பொரி பொரியாக வறுத்து வெல்லப்பாகு வைத்து, அதில் போட்டு, ஏலக்காய் பொடித்துச் சேர்த்து உருண்டையாகப் பிடியுங்கள். சவ்வரிசி உருண்டை சாப்பிட சுவையாக இருக்கும்.

• இட்லி செய்து சிறிது நேரங்கழித்துச் சாப்பிட்டால் மிருதுவாக இருக்காது. சில சமயம் சாப்பிடக் கூடக் கஷ்டமாக இருக்கும். அதனால் இட்லி வெந்து எடுத்ததும் ஒவ்வொரு இட்லியின்மீதும் கொஞ்சம் நல்லெண்ணெய் தடவி விடுங்கள். பிறகு சாப்பிட்டுப் பாருங்கள். இட்லி பூப்போல மிருதுவாகவும் மென்மையாகவும் இருக்கும்.

• சிலர் அப்பம் சுட்டால் தட்டையாக இல்லாமல் பிய்த்தால் உள்ளே கூடு கூடாய் சாப்பிட மிருதுவாக இருக்கும். இப்படி நீங்கள் சுடும் அப்பம் வர வேண்டுமா? அப்பம் செய்ய மாவு சலிக்கும் போது, சலித்த மாவில் ஒரு கரண்டி கட்டித் தயிர் கலந்து விடுங்கள் போதும். அப்பம் கூடுகூடாக-நல்ல சுவையாக இருக்கும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FV

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 12-06-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

90 புவனா



பத்திரிகையாளரான ரிச்சார்ட் கே, டயானா தன்னுடன் பேசியதை 'டெயிலி மெயில்' பத்திரிகையிலும் பின்பு எழுதியிருந்தார்.

ரிச்சார்ட் கே தன் நண்பர்களிடம் கூறும் போது: "டயானா-டோடி இருவரும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் ஆழமாகக் காதலிக்கிறார்கள்," என்று கூறியுள்ளார்.

டயானா கேயுடன் உரையாடிய போது, தனது எகிப்து நாட்டு காதலர்மீது பிரிட்டிஷ் பத்திரிகைகள் எதற்காக இத்தனை வெறுப்புக் காட்டுகின்றன? என்றும் கேட்டிருக்கிறார்.

டோடி ஒரு முஸ்லிம் என்பதும், உலகப் புகழ்பெற்ற நடிகைகளுடன் சல்லாபம் கொண்டவர் என்பதாலும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் அவர்மீது வெறுப்புக் காட்டின. தங்கள் இளவரசிக்கு டோடி பொருத்தமானவர் அல்ல என்று கருதின என்பது 'கே'யின் எண்ணம்.

பிரிட்டிஷ் பத்திரிகைகளை டோடி-டயானா காதலுக்கு எதிராகத் தூண்டி விட்டதில் பிரிட்டிஷ் அரச குடும்பம் பெரும் பங்கு வகித்தது.

இதேவேளை டோடி-டயானா காதல் விவகாரம், டோடியின் சொந்த நாடான எகிப்தில் மகிழ்ச்சியுடன் பேசப் பட்டது.

டயானா கருவுற்றுள்ளார் என்ற செய்தியை அடுத்து எகிப்தின் அலெக்ஸாண்டியா நகர மக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

எகிப்து நாட்டு முஸ்லிம் ஒருவர் பிரிட்டிஷ் இளவரசியின் குழந்தைக்குத் தந்தையாவது அவர்ளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

ஆனால் டோடி மூலம் டயானா கருவுற்றுள்ளார் என்பதையறிந்த இலண்டன் நகரவாசிகள் பலர் அதிர்ச்சியடைந்தனர்.

இஸ்ரேல் நாட்டிலும் இத் தகவல் பலத்த அதிர்ச்சியைத்தான் ஏற்படுத்தியது.

அரேபியர்கள் பெருமைப்படத்தக்க எச் செய்தியும் இஸ்ரேலியர்களுக்கு இடியாகவே இருப்பது வழமை.

## யூதர்களுக்கு அதிர்ச்சி

அதனால் டயானா-டோடி காதல் செய்தியும், கருவுற்ற செய்தியும் யூதர்களுக்கு காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதற்கு ஈடாகி விட்டது.

இலண்டனில் இருந்த யூதர்கள் பணபலம் மிக்கவர்கள். பல பத்திரிகைகள் அவர்களது பிடியில் இருந்தன.

அவையும் டயானா-டோடி காதலுக்கு சிகப்புக்கொடி காட்ட ஆரம்பித்தன.

டோடியை டயானா காதலிப்பதை பிரிட்டிஷ் மக்கள் பெரும்பாலானோர் வெறுப்பதாக சில பத்திரிகைகள் கருத்துக் கணிப்பும் வெளியிட்டிருந்தன.

### விவாதங்கள்

இலண்டன் மாநகரின்மூலை முடுக்குகள் எங்கும் இளவரசி கர்ப்பம் தரித்த செய்தி வாதப்பிரதிவாதங்களைக் கிளப்பியிருந்தது.

டயானா கருவுற்றுள்ளார் என்பதற்கு ஆதாரமாக பின்வரும் தகவலை பத்திரிகை ஒன்று வெளியிட்டது:

டயானா இரண்டாவது தடவையாக மத்திய தரைக் கடல் நாடுகளுக்குச் செல்வதற்கு முன்னர், இலண்டனில் ஹார்வே வீதியில் உள்ள பரிசோதனை நிலையம் ஒன்றுக்கு சென்றிருந்தார்.

அங்கு 'ஸ்கான்' பரிசோதனை மேற்கொண்டார். இப்பரிசோதனையில்தான் டயானா கருவுற்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக குறிப்பிட்ட பரிசோதனை நிலையத்துடன் செய்தியாளர்கள் தொடர்பு கொண்டனர். அவர்கள் கருத்து எதனையும் தெரிவிக்க மறுத்து விட்டனர்.

தான் கருவுற்றுள்ளதாக உலகெங்கும் பரவியுள்ள செய்தி தொடர்பாக டயானா டோடியிடமும் கூறியிருக்கிறார்.

படப்பிடிப்பாளர்களால் செய்தியாளர்கள் மீதும், கடும் கோபத்தில் இருந்த டோடியிடம் டயானா தகவலைக் கூறியதும் அவர் மேலும் கோபமுற்றார்.

### இரவு உணவு

இதே நேரத்தில் பாரிசில் சென் மார்ட்டின் வீதியில் இருந்த உணவு விடுதிக்கு டோடியின் குடும்ப நண்பரான கிளௌடி றௌயிற் என்பவரிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

ஐந்து பேருக்கான இரவு உணவை ஆயத்தம் செய்யும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

டோடியின் வேண்டுகோளின்படியே அவர் அந்த ஏற்பாட்டைச் செய்தார்.



ரிச் ஹோட்டலில் வைத்து தமது திருமண முடிவை, நெருங்கிய உறவினர்களுக்கு அறிவிக்கவே டோடி முதலில் விரும்பியிருந்தார்.

அதற்குரிய சூழல் அங்கு இல்லாமையால் சென் மார்ட்டின் வீதியில் இருந்த கெஸ் பெனோயிற் உணவு விடுதியைத் தேர்ந்தெடுத்தார்.

### அழைப்பு

தனது ஒன்றுவிட்ட மாமனாரும், சவுதி அரேபியாவின் பிரபல வர்த்தகருமான ஹஸ்ஸான் யாசீனுக்கும், ஒன்று விட்ட சகோதரியான ஜுமானாவுக்கும் அன்று இரவு விருந்துக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

அன்று இரவே இலண்டன் திரும்பும் திட்டத்தை கைவிடுமாறு டயானாவிடம் கோரினார் டோடி.

டயானாவுக்கும் மனது ஒரு நிலையில் இருக்கவில்லை. தான் கருவுற்றுள்ளதாக செய்திகள் பரவியுள்ளதை அறிந்து கிலேசமடைந்திருந்தார்.

அதனால் அன்று இரவு டோடியுடன் தங்கிவிட்டு செல்வதற்கு சம்மதித்தார்.

ரிச் ஹொட்டலிலிருந்து தனது இல்லத்துக்கு தொலைபேசியில் டோடி தொடர்பு கொண்டார். அன்றிரவு அங்கு தாம் இருவரும் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும், சம்பெயின் பான போத்தலை குளிரூட்டியில் வைக்குமாறும் தன் உதவியாளருக்குக் கட்டளையிட்டார்.

இரவு உணவு அருந்த முன்னர் உடைமாற்ற விரும்பினார் டயானா. ரிச் ஹோட்டலில் தொடர்ந்து தங்கியிருப்பதும் நல்லதல்ல என்று டோடி நினைத்தார்.

ரிச் ஹோட்டலின் முன்புறம் படப்பிடிப்பாளர்கள் மட்டுமன்றி உல்லாசப் பயணிகளும் கூடிவிட்டனர்.

டயானா உள்ளேதான் இருக்கிறார். எவ்வாறெனினும் அவரைக் காணவேண்டும் என்று அவர்கள் காத்திருந்தனர்.

கூட்டம் அதிகமாகிவிட்டதால் வெளியே



ஒரே சத்தமாக இருந்தது.

படப்பிடிப்பாளர்கள் பலர் போதையில் இருந்தனர். அதனால் இரைந்து கதைத்தும், உரத்துச் சிரித்துக் கொண்டும் இருந்தனர்.

நேரம் ஆக... ஆக, மேலும் கூட்டம் சேரும் என்பதால் ஹொட்டலை விட்டு வெளியே செல்வதே நல்லது என்று டோடி தீர்மானித்தார்.

ஹொட்டலின் பின்புற வழியாகச் செல்வது தான் பாதுகாப்பானது என்று டோடியின் பாதுகாவலர்கள் கூறினார்கள்.

ஹொட்டலின் பின்புறம் 'மொர்சிடெஸ் 600'-அதி நவீன கார் வந்து நின்றது. அதில் டயானாவும், டோடியும் தம்மைத் திணித்துக் கொண்டனர்.

அவர்களுக்கு பின்னால் ரேஞ்ச்ரோவர் வாகனத்தில் பாதுகாவலர்கள் இருவரும் பின் தொடர்ந்தனர்.

பின்புற வாயிலால் வெளியேறுவார்கள் என்று எதிர்பாராததால் அங்கு எந்தவிதமான தொந்தரவும் இருக்கவில்லை.

டோடியின் இல்லம் நோக்கி இரு வண்டிகளும் அதி உச்ச வேகத்தில் விரைந்தன.

அந்த வேகம் காதலர்களுக்கு இன்பமாக இருந்தது. அவர்களது மனநிலைக்கு இதமாக இருந்தது.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**தலவாக்கொல்லை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**சேவியர் கிளெமட்,**
சென் கிளெயார், தலவாக்கொல்லை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

**அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்**

**வைர மோதிரப் போட்டி**

● முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
● 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
● 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
● பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
● இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு ஔ வைர மோதிரப் போட்டி

www.padippakam.com





சக்தி தனக்கே கருவி யாக்கு-அது
சக்தி வழியதனைக் காணும்-
கண்ணைச்
சக்தி தனக்கே கருவி யாக்கு-அது
சத்தியமும் நல்லருளும் பூணும்.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## மோட்சம் செல்லும் வழி

துறவி ஒருவர் ஒரு கிராமத்திற்கு வந்தார். அந்த ஊரிலே ஒரு பணக்காரன் இருந்தான். அவன் மகா கஞ்சன்.

ஒரு நாள் அவன் துறவியிடம் அறிவுரை கேட்பதற்காக வந்தான். துறவியின் முன்னால் அமர்ந்து,

"சுவாமி! நான் மோட்சம் செல்வதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

"நீ மோட்சம் செல்ல விரும்பினால் தான தர்மங்கள் செய்ய வேண்டும். ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும்" என்று கூறினார் துறவி.

இந்தத் துறவி சொல்வது போல் நடந்தால்தான் நாம் மோட்சம் செல்லலாம் என்று நினைத்தான் பணக்காரன்.

அதன்படி தினமும் ஒரு பிடி அரிசியை எடுத்துத் தானம் செய்து வந்தான். கொஞ்ச நாட்களாகத் தொடர்ந்து இப்படிச் செய்து வந்தான்.

இதன் பிறகு துறவியைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று புறப்பட்டான் அந்தப் பணக்காரன்.

பணக்காரனைக் கண்ட துறவி,

"என்னப்பா? நான் சொன்னது மாதிரி தான தர்மங்கள் செய்தாயா?" என்று கேட்டான்.

"ஆமாம் சுவாமி. தினமும் தவறாமல் ஒரு கைப்பிடி அளவு அரிசியை எடுத்துத் தானம் செய்து வருகிறேன்" என்று பெருமையாகச் சொன்னான் பணக்காரன்.

இதைக் கேட்டதும் துறவி தன்னைப் பாராட்டப் போகிறார் என்று எதிர்பார்த்தான் பணக்காரன்.

ஆனால் துறவி எதுவும் பேசவில்லை. அவர் மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தார். அந்த மரத்தின் அடிப்பாகத்தை தன் விரல் நகத்தால் கீற ஆரம்பித்தார்.

இதைக் கண்ட பணக்காரன்,

"என்ன சுவாமி! நான் செய்த தான தர்மத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் அதைப்பற்றி எதுவுமே சொல்லாமல் மரத்தைக் கீறிக்கொண்டிருக்கிறீர்களே?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை. நான் இந்த மரத்தை என் நகத்தால் வெட்டிக் கொண்டிருக்கிறேன்!" என்று கூறினார் துறவி.

இதைக் கேட்டதும் பணக்காரனுக்கு சிரிப்பு வந்தது.

"என்ன சுவாமி! இந்த நகத்தால் அவ்வளவு பெரியமரத்தை எப்படி வெட்ட முடியும்?" என்று கேட்டான் பணக்காரன்.

"ஒரு பிடி அரிசியைத் தானமாகக் கொடுத்து நீ மோட்சம் செல்ல நினைக்கும் போது, நான் என் நகத்தால் இந்த மரத்தை வெட்டி வீழ்த்த நினைக்கக்கூடாதா?" என்று கேட்டார் துறவி.



இதைக் கேட்டதும் பணக்காரனுக்குத் தெளிவு பிறந்தது. அன்றிலிருந்து அவன் கஞ்சத்தனம் பாராது ஏழை எளியவர்களுக்குத் தான தர்மங்களைச் செய்து வந்தான்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



இலண்டனில் வளர்க்கப்பட்ட சிங்கம் ஒன்றின் பெயர் 'டங்கோ'. இது தன் தலையைத் தனது பாதுகாப்பாளரின் தொடைமீது வைத்துக்கொண்டுதான் தூங்கும். இல்லாவிட்டால் தூங்காது.



ப்ரிட்ஸ் லீகல் என்ற ஜெர்மன் நாட்டுக்காரர் 9728 அடி உயரமான பனிமூடிய மலையின் ஜக்ஸ்பீட்ஸ் சிகரத்தின் மீது காலில் செருப்புக்கள் எதுவுமின்றி கடும் குளிரையும் பொருட்படுத்தாது ஏறினார்.



ஆசியாவின் ஒரு பகுதியை ஆட்சி செய்த ஜெனரல் அத்தா மொலானா போரில் தனது கண் ஒன்றை இழந்தார். இதை மறைப்பதற்காக தங்கத்திலான முகமூடியை எப்போதும் கழற்றாமல் அணிந்து வந்தார்.

## எப்படித் தெரியுமா?

நாம் எரிபொருளாகப் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது என்று தெரியுமா?

உலகின் சில பகுதிகளில் நிலத்திற்கு அடியில் குரூட் எண்ணெய் இயற்கையாகத் தேங்கி நிற்கிறது. இதை குழாய்கள் கொண்டு வெளியே எடுக்கிறார்கள்.

கரிய நிறமான இந்த குரூட் எண்ணெய் சுத்திகரிக்கப்படும்போது முதல் கட்டத்தில் பெட்ரோல் கிடைக்கும். இரண்டாவது கட்டத்தில் டீசலும், மண்ணெண்ணெயும் கிடைக்கின்றன.

கடைசியில் மிஞ்சுகின்ற குரூட் எண்ணெயின் கழிவிலிருந்து வீதிகளுக்குப் போடும் தார் கிடைக்கின்றது.




## அதிசய புதையல் ஏரி

அமெரிக்காவில் உள்ள கொலம்பியா மாநிலத்தில் உள்ள ஏரி ஒன்றின் பெயர் குவாட்ட விட்டா ஏரி. 'சிப்ச்சா' என்ற சிவப்பிந்திய இனத்தவர் இந்த ஏரியை புனித ஸ்தலமாகக் கருதி வந்தனர்.



சிப்ச்சா இனத்தவர் வருடந்தோறும் இறைவனுக்கு நன்றி செலுத்த ஒரு விழாக் கொண்டாடுவார்கள். அவ்விழாவின் போது தங்கள் உடம்பில் தங்கத்தைத் தூளாக்கி உடம்பு முழுவதும் பூசிக் கொண்டு ஏரி நீரில் மூழ்கி நேர்த்திக் கடன் செய்வார்கள்.

அது மட்டுமன்றி, தம்மிடமுள்ள தங்க நகைகளையும் ஏரியில் வீசியெறிவார்கள். தங்களது காணிக்கை இறைவனைச் சேரும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு.

பதினாறாம் நூற்றாண்டில் இந்த இனம் அழிந்து போனது. ஏரிக்குள் கிடக்கும் தங்கக் குவியலை எடுக்கப்பலர் தேடி வந்தனர். ஆனால் ஏரிக்குள் இருந்து ஒரு நகை கூட யார் கண்ணிலும் படாமல் மறைந்து விட்டது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.06.1999.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 299
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 297

பரிசுக்குரியவர்:
கு. கல்பனா,
காளி கோயில்வீதி, கிரான், மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சி. உமாரமணன், தரவளை மேற்பிரிவு தமிழ் வித்தியாலயம், டிக்கோயா. | பாத்திமா சநுஸ்ஹா நஹீம், சாந்த தோமியர் பெண்கள் பாடசாலை, மாத்தளை. |
| த. மஞ்சுளா, பிரதான வீதி, செட்டிகுளம், வவுனியா. | ஆர். சஞ்ஜீவ், மந்தண்டாவளை தமிழ் மகாவித்தியாலயம், மாத்தளை. |
| அ. ஜீவசுகந்தினி, பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்டக்களப்பு. | எஸ். சுரேகா, சண்முகவித்தியாலயம், திருகோணமலை. |
| செல்வன் செ. ரிஷிஷ், தி/செல்வநாயகபுரம் தமிழ் மகாவித்தியாலயம், திருகோணமலை. | செல்வி. தர்சனா செல்வராசா. இந்து தமிழ் வித்தியாலயம், புத்தளம். |
| செல்வி எஸ்.எச். பாத்திமா ஹுஸ்னா, சஹிரா தேசிய கல்லூரி, கம்பளை. | ஜெயேந்திரன் சுகேசன், தமிழ் மகாவித்தியாலயம், தெகிவளை. |

## முதன் முறையாக....

* உற்பத்திப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க, சுவரில் விளம்பரம் செய்யும் முறையைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தியவர்கள்-
கிரேக்கர்கள்.
* கார்ட்டூன் திரைப்படத்தைக் கண்டுபிடித்தவர்கள்-
அமெரிக்கர்கள்.
* செய்தித் தாள்களைக் கண்டுபிடித்து வெளியிட்டவர்கள்-
சீனர்கள்.
* பாலே நடனக் கலையைக் கண்டுபிடித்து நடத்தியவர்கள்-
ஃபிரெஞ்சுக்காரர்
* ஆண்கள் அணியும் சட்டையைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தியவர்கள்-
கிரேக்கர்கள்
* அஞ்சலட்டையைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தியவர்கள்-
அவுஸ்திரேலியர்
* சட்டைகளில் பொத்தான் வைத்துத் தைக்கும் முறையை அறிமுகப்படுத்தியவர்கள்-
சீனர்கள்
* குண்டூசியின் வடிவ அமைப்பைக் கண்டு பிடித்தவர்கள்-
எகிப்தியர்கள்
* பாலை பக்கெட்டுக்குள் அடைத்து விற்பனை செய்தவர்கள்-
ஃபிரெஞ்சுக்காரர்
* பூட்டுச் சாவியைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தியவர்கள்-
ரோமர்.

## பெயர் வரக் காரணம்

நூலகத்தை ஆங்கிலத்தில் லைபிரறி (LIBRARY) என்று அழைக்கிறோம். இந்தப் பெயர் எப்படி வந்தது என்று தெரியுமா?

லிபர் என்ற இலத்தீன் வார்த்தையில் இருந்துதான் லைபிரறி என்ற சொல் வந்தது. லிபர் என்ற இலத்தீன் சொல்லுக்கு புத்தகத் தொகுதி என்று அர்த்தம்.

## உப்பின் நிறம்

எமது நாட்டில் உப்பு வெள்ளை நிறம் கொண்டது. ஆனால் பிரிட்டன் நாட்டில் கிடைக்கும் உப்பு பொன்னிறமாகவும், ஹங்கேரியில் கிடைக்கும் உப்பு நீல நிறமாகவும் இருக்கும்.

## மெட்ரிக் அளவு முறை

இப்போது மெட்ரிக் அளவு முறைதான் நடைமுறையில் இருக்கிறது. மெட்ரிக் அளவு முறையை ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லம்பிரே மற்றும் மெக்மெய்ன் ஆகிய இருவரும்தான் கண்டு பிடித்தார்கள்.


மெட்ரிக் அளவு முறை கண்டு பிடிக்கப்பட்டு 204 வருடங்களாகின்றன. இவர்கள் துருவத்திற்கும் பூமத்திய ரேகைக்கும் உள்ள இடைவெளி தூரத்தை அளக்க ஒரு நீளமான கயிற்றைப் பயன்படுத்தினார்கள்.



மொத்த நீளத்தின் ஒரு கோடி அளவில் ஒரு அளவிற்கு மீட்டர் என்று பெயரிட்டார்கள். இந்த அளவையை 1795ல் கண்டு பிடித்தனர். இந்த இருவருமே திடப் பொருட்களை அளவிடும் கிராம் அளவையும், திரவ அளவான லீட்டர் அளவையும் கண்டுபிடித்தனர்.

இதன் பின்னரே மில்லிமீட்டர், சென்டிமீட்டர் அளவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

## வினோதமான கூடுகள்



மீன் கொத்திகள் தாங்கள் தின்ற மீன்களின் எலும்புகளாலேயே கூடு கட்டிக் கொள்கின்றன. இந்தக் கூடுகள் பலம் வாய்ந்தவை. பலத்த காற்றடித்தாலும் இவை சிதைந்து போவதில்லை.

கோகபுராஸ் என்னும் பறவை பல்வேறு பிராணிகளை இரையாகத் தின்று உயிர் வாழும். இதற்கு மரப்பொந்து தான் கூடு. சின்னப் பொந்து இருந்தால்கூட அதில் தன் உடலை நுழைத்துத் தங்குவதற்கு வசதியாக இடத்தை அமைத்துக் கொள்ளும்.





படிப்பகம்

www.padippakam.com

**இதுவரை**

பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனை காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது. இதேவேளை, சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலையாகிறாள். பொலிஸ் விசாரிக்கிறது. இனி...

# கை 06 வீச் சக்திய மின்னல்

டாக்டர் ரத்னவேல் நாயை ஒரு பயப் பார்வை பார்த்து விட்டு வர்ணாவை ஏறிட்டார். மெல்லிய குரலில் கேட்டார்,

"இந்த நாயைக் கொடுத்தது யாரு...?"

"டாக்டர்! இதை யாரும் கொண்டு வந்து கொடுக்கலை. போத்தனூர்ல இருக்கிற நாய்ப்பண்ணைக்குப் போய் பணம் கொடுத்து வாங்கிட்டு வந்தோம். அப்ப இது பத்து நாள் குட்டியா இருந்தது..." வர்ணா சொல்ல ரத்னவேல் மோவாயைத் தேய்த்தார்.

"இது எப்படி உயிர் பிழைச்சதுன்னு எனக்கு இன்னமும் ஆச்சர்யமாத்தான் இருக்கும்மா. உயிர் பிழைச்சதோடு மட்டும் இல்லாமே இவ்வளவு ஆக்டிவ்வா இருக்கிறது இன்னமும் ஆச்சர்யம். இது உயிர் பிழைக்க என்ன காரணம்ங்கிறதை கண்டிப்பாக் கண்டு பிடிச்சேயாகணும். இந்த நாயை நாளைக்குக் காலையில என்னோட க்ளினிக்குக் கொண்டு வர முடியுமா?"

"எத்தனை மணிக்குக் கொண்டு வரணும் டாக்டர்?"

"காலையில் ஒரு ஒன்பது மணி சுமாருக்கு வந்தாப் போதும். நாய்க்கு ப்ளட் டெஸ்ட் பண்ணிப் பார்த்தாலே ஓரளவுக்கு உண்மை தெரிஞ்சிடும்."

"நாளைக்குக் காலையில ஒன்பது மணிக்கு கண்டிப்பா பிங்கியை உங்க க்ளினிக்குக் கொண்டு வர்றேன் டாக்டர். நீங்க நாயை நல்லா டெஸ்ட் பண்ணிப் பார்த்துட்டு ஊசி ஏதாவது போடறதாயிருந்தாலும் போட்டுடுங்க டாக்டர்..."

"நாயைப் பார்த்தா இப்ப ஹெல்த்தியா இருக்கிற மாதிரித் தெரியுது. டெஸ்ட் பண்ணிப் பார்த்துட்டு தேவைப்பட்டா ஊசி போடலாம்!" சொன்ன டாக்டர் ரத்னவேல் வீட்டைச் சுற்றிலும் ஒரு தடவை பார்வையை ஓடவிட்டு, பின் கேட்டார்.

"இந்த வீட்ல, நீங்க ரெண்டுபேர் மட்டும்தானா?"

"ஆமா டாக்டர்..."

"உங்க ஃபாதர்...."

"ஹி...ஈஸ்...நோ மோர். நாலு வருஷத்துக்கு முன்னாடி காலமாயிட்டார்." சொன்ன வர்ணா டாக்டருக்குப் பின்பக்கம் இருந்த சுவரைக் காட்டினாள்.

"அவர் தான் எங்கப்பா..."

ரத்னவேல் திரும்பிப் பார்த்தார். ஃபோட்டோவில் ஒரு வழுக்கைத் தலை மனிதர் காமிராவை முறைத்து போஸ் கொடுத்து இருந்தார். மேலுதட்டில் கொத்து மீசை. ஃபோட்டோவுக்கு எப்போது போட்ட மாலையோ வாடிக் கறுத்து, நைந்து போய்த் தொங்கிக் கொண்டிருந்தது.

வர்ணா சொன்னாள்:

அப்பாவுக்கும் நாய்கள்னா கொள்ளைப்பிரியம். அவர் உயிரோடு இருந்த வரைக்கும் நாய் வளர்த்துட்டிருந்தார். உங்களுக்கு ஒரு விஷயம் சொன்னா ஆச்சரியமா இன்னும் இருக்கும். எங்கப்பா இறந்த பிறகு அவர் வளர்த்த நாய் எதுவுமே சாப்பிடாமே ரெண்டுநாள் வரைக்கும் ஒரே இடத்தில படுத்திருந்து உயிரை விட்டது..."

ரத்னவேல் வியப்போடு கேட்டுக் கொண்டிருக்கும் போதே பாக்யம் குறுக்கிட்டுச் சொன்னாள்:

"டாக்டர்! வர்ணாவோட அப்பா இறந்த பிறகு, நான் இனிமே நாயையே வளர்க்கக் கூடாதுங்கிற முடிவில் இருந்தேன். வர்ணா கேட்கலை. நாம ரெண்டு பேரும் லேடீஸ். துணைக்கு ஒரு நாய் இருந்தா கொஞ்சம் பயம் இல்லாமே இருக்கலாம்னு சொன்னா! எனக்கும் அது சரின்னு பட்டதால நாயை வளர்க்க ஒத்துக்கிட்டேன் டாக்டர்."

"வீட்ல ஒரு நாய் இருக்கிறது நல்லது தான். பட்... அதை நல்லபடியா வளர்க்கணும். பிங்கியை நாளைக்குக் காலையில க்ளினிக்குக் கொண்டு வாங்க. டெஸ்ட் பண்ணிப் பார்த்துடலாம்.நான் வரட்டுமா..?"



"ரொம்ப நன்றி டாக்டர்."

"எதுக்கு நன்றி...?"

"நான் ஃபோன்ல விஷயத்தைச் சொன்னதுமே வந்தீங்களே அதுக்குத்தான்."

"இதுல நன்றி சொல்ல என்னம்மா இருக்கு?" ரத்னவேல் சொல்லிக்கொண்டே வாசலை நோக்கித் திரும்ப- பார்வை மறுபடியும் எதேச்சையாய் சுவரில் இருந்த வர்ணாவின் அப்பா ஃபோட்டோவுக்குப் போயிற்று. சிறிது நேரத்துக்கு முன்னால் ஃபோட்டோவில் முறைப்பாய் இருந்த முகம், இப்போது லேசாய்ப் புன்னகை செய்வது போல் இருந்தது.

அந்தப் புன்னகை!

நிஜமா...?

இல்லை.

பிரமையா..?

உடம்பில் ஒரு குளிர் பரவிக்கொள்ள வாசலை நோக்கி மெல்ல நடந்தார் ரத்னவேல்.

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

சாத்தப்பட்டிருந்த ஷட்டருக்குப் பின்னாலிருந்து கேட்ட அந்த நாற்காலி இழுபடும் சத்தம் இன்ஸ்பெக்டர் பலராமனையும், சப்-இன்ஸ்பெக்டர் ஜேக்கப்பையும் துணுக்குற வைத்து வாட்ச்மேனை வியப்பாய்ப் பார்க்க வைத்தது.

"உள்ளே யார் இருக்காங்க...?"

"யா...யாரும் இல்ல... ஸார்."

"நாற்காலியை யாரோ இழுக்கிற சத்தம் கேட்டது."

"அது... வந்து.. வந்து... மேல் மாடியில் ஏசி கம்பெனி இருக்கு ஸார். அந்தக் கம்பெனியில் இருக்கிறவங்க யாராவது நாற்காலியை இழுத்து இருக்கலாம்."

"அப்படியா சொல்றே?"

"ஆமா... ஸார்...?"

"ஜேக்கப்..."

"ஸார்..."

"கீழே ஜீப்புக்குப் போய் அந்த லாட்டியை எடுத்துக்கிட்டு வாங்க. அது ரெண்டா உடைஞ்சாத்தான் இவன் கிட்டயிருந்து உண்மை வெளியே வரும் போலிருக்கு..."

ஜேக்கப் நகர முயல வாட்ச்மேன் மிரண்டான். "வே... வேண்டாம் ஸார்..."

"என்ன வேண்டாம்..?"

"நான் உண்மையைச் சொல்லிடறேன் ஸார். உள்ளே ஏ.ஓ.இருக்கார்."

"ஏ.ஓ.ன்னா அட்மின்ஸ்ட்ரேஷன் ஆபிஸரா?"

"ஆமா ஸார்...."

"உள்ளே தனியா என்ன பண்ணிட்டிருக்கார்?"

"அ... அவர் உள்ளே தனியா இல்ல ஸார்."

"பின்னே...?"

"டை... டைப்பிஸ்ட்டோடு இருக்கார்..."

"ஷட்டரை மேலே தூக்கு...."

"வே... வேண்டாம் ஸார்... அவர் யாரையுமே உள்ளே அலவ் பண்ணக் கூடாதுன்னு சொல்லியிருக்கார். இப்போ உங்களை உள்ளே விட்டா எனக்கு வேலை போயிடும் ஸார்...."

"உனக்கு வேலை போகாதபடி பார்த்துக்க நாங்க பொறுப்பு. மொதல்ல ஷட்டரைத் தூக்கு..."

வாட்ச்மேன் சில விநாடிகள் தயங்கிவிட்டு, பின் ஷட்டரை 'சர்ர்ர்'ரென்று சத்தத்தோடு மேலே உயர்த்தினான். உள்ளே அரையிருட்டில் ஆபீஸ் பரந்து தெரிந்தது. ஆபீஸ் மையத்தில ஃபைபர் பலகைகளால் தடுக்கப்பட்ட ஒரு கேபினுக்குள் ட்யூப்லைட் வெளிச்சம் தெரிந்தது.

பலராமனும், ஜேக்கப்பும் உள்ளே நுழைந்து கொண்டிருக்கும்போதே கேபினின் கதவைத் திறந்து கொண்டு கலைந்த தலையும், அவிழ்ந்த கைலியுமாக அந்த நடுத்தர வயது மனிதர் வெளிப்பட்டார். போலீஸ் யூனிஃபாரங்களைப் பார்த்ததுமே கண்களுக்குக் கொடுத்திருந்த ஃபெக்ஸை மிரட்சியோடு கழற்றிக் கொண்டு பக்கத்தில் வந்தார்.

"எஸ்..."

பலராமன் கேட்டார்,

"நீங்தான் இந்த கம்பெனிக்கு ஏ.ஓ.வா?"

"ஆமா..."

"உங்க பேரு...?"

"குருமூர்த்தி..."

"ஷட்டரைக் க்ளோஸ் பண்ணிட்டு உள்ளே என்ன பண்ணிட்டிருக்கீங்க..?"

"அது... வந்து... அது வந்து... மன்த்லி ஸ்டேட்மெண்ட்டை ப்ரிப்பேர் பண்ணிகிட்டிருக்கேன்..."

"அதாவது நீங்களும் டைப்பிஸ்ட்டுமா சேர்ந்து?"

"எ...எ... எஸ்..?"

பலராமன் கேபினுக்குள் சட்டென்று எட்டிப் பார்த்தார். பாப் தலை பெண் ஒருத்தி வேக வேகமாய் சேலையைக் கட்டிக் கொண்டிருந்தாள்.

"நீங்க ஸ்டேட்மெண்ட் ப்ரிப்பேர் பண்ற லட்சணம் இதுதானா..? மிஸ்டர் குருமூர்த்தி..? ஒரு ஆபீஸை ஏன் லாட்ஜா மாத்தறீங்க..?"

ஏ.ஓ.தலை குனிந்து கொண்டு நிற்க சேலையை உடுத்தி முடித்த அந்தப் பெண் தயக்க நடைபோட்டுக் கொண்டு வெளியே வந்தாள். உதட்டில் லிப்ஸ்டிக் அழிந்திருந்தது.

பலராமன் கேட்டார்,

"உம்பேர் என்னம்மா...?"

"அருந்ததி..."

"தயவு பண்ணி பேரை மாத்திக்க, நிஜயமாவே இந்தக் கம்பெனிக்கு நீ டைப்பிஸ்டா... இல்லை வெளியே இருந்து வந்திருக்கிற தொழில்காரியா...?"

ஏ.ஓ. குருமூர்த்தி சட்டென்று தலையை உயர்த்தி பலராமனை ஒரு கோபப்பார்வை பார்த்தார்.

"லுக் மிஸ்டர் இன்ஸ்பெக்டர். திஸ் ஈஸ் டூ மச். டைப்பிஸ்ட் அருந்ததியும் நானும் இணக்கமா இருக்கிறது இந்த ஆபீஸ்ல எல்லார்க்கும் தெரியும். வீ ஆர் லவ்வர்ஸ். ஆபீஸ் முடிஞ்சதும் இப்படி நாங்க தனிமையில் இருக்கிறது ஒரு வாடிக்கையான விஷயம். இதைக் கொச்சைப்படுத்தி லாட்ஜ், தொழில்காரின்னு பேசறது கொஞ்சம்கூட சரியில்லை. திஸ் ஈஸ் ப்யூர்லி மை பர்சனல் அஃபேமர்ஸ். காதல் செய்யக்கூடாதுன்னு சொல்ல போலீஸுக்கோ, சட்டத்துக்கோ அதிகாரமில்லை."

பலராமன் தோள்களைக் குலுக்கினார்.

"இட்ஸ்.... ஓ.கே.மிஸ்டர் குருமூர்த்தி. நாங்க இப்போ உங்க புனிதமான காதலைப் பத்திப் பேச வரலை... நாங்க இங்கே வந்தது பூவிழியைப் பத்தி விசாரிக்கத் தான்."

பூவிழி என்ற பெயரைக் கேட்டதுமே குருமூர்த்தியின் முகத்தில் இருந்த வோல்டேஜ் சட்டென்று குறைந்தது.

(தொடர்ந்து வரும்)

# நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்

## 10 ஒரு கதை

"லோ அண்ட் லோ உங்களோடு பேசணுமாம்" என்பார். ஃபோனில் பேசினாலும் எப்பவும் அந்தப் பேச்சு சண்டையில்தான் முடியும். இப்போது மாதிரியெல்லாம் எனக்கு அமைதியாகப் பேச அப்போது தெரியாது. பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்று கூடப் பார்க்க மாட்டேன். சத்தம் போட்டுப் பேசுவேன். என் உணர்ச்சிகளை மறைத்து வைக்கத் தெரியாது.

அழுகையையும், சந்தோஷத்தையும் எல்லோர் எதிரிலும் காட்டுவேன். "எதுக்காக என்னைக் கூப்பிடறீங்க? உங்களுக்கு என்ன வேணும்? நமக்குள்ள உறவுதான் முறிஞ்சு போச்சே"ன்னு உரக்க சத்தம் போடுவேன். ஏன்னா எங்க காதல் விவகாரம் ஒண்ணும் ரகசியமானதில்லை. சினிமா இண்டஸ்ட்ரி முழுக்கத் தெரிஞ்ச விஷயம்தான். அதனால சத்தம் போட்டு வேறு பேசுவேன்.

என்னுடைய நிலமை இவருக்கும் புரிய ஆரம்பித்திருந்தது. எளிதில் வசப் படக்கூடிய என் சூழல், எனக்குள் இருந்த ஒருவித பாதுகாப்பின்மை, என் மன வேதனை எல்லாமே அவருக்குத் தெரிந்திருந்தது.

அதே சமயம் ஜார்ஜுக்கும், அதே படத்தில் நடித்துக் கொண்டிருந்த நடிகைக்கும் காதல். இந்த விஷயமும் அந்த யூனிட்டில் வேலை செய்த அனைவருக்கும் தெரியும். அதை வைத்து எல்லோரும் இவரைக் கிண்டல்கூட செய்வார்கள்.



### கிண்டலும் கேலியும்

அந்த நடிகை வந்தால் தான் இவர் சாப்பிடவே வருவார். சாப்பிடும்போது இருவரும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தான் சாப்பிடுவார்கள். அந்த மனநிலையிலும் எனக்கு கை கொடுத்தது என் நகைச்சுவை உணர்வுதான். நானும் எல்லோருடனும் சேர்ந்து அவர்களைக் கிண்டல் செய்வேன். என் வேதனைக்கு இந்தக் கிண்டலும், கேலியும் சற்று ஆறுதலாக இருக்கும்.

இதன் மூலமாக என் மனவேதனை, என் தொழில் கவனத்தை சிதற அடிக்காமல் பார்த்துக் கொண்டேன். அவர் காதலித்துக் கொண்டிருந்த அந்த நடிகையும் நானும் நல்ல சினேகிதிகளாகவே இருந்தோம். நாளடைவில் அந்தப் பெண்ணுக்கு லேசான சந்தேகம் வர ஆரம்பித்தது. காரணம், இவர் என்னைப் பற்றியே அந்தப் பெண்ணுடன் அதிகம் பேசிக் கொண்டிருந்ததுதான்.

மெதுவாக இந்தப் பிரச்சினை பெரிதாகப் பேசப்பட ஆரம்பித்தது. ஆனால் எனக்கு அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளத் தோன்றவில்லை. அந்தப் படமும் முடிவடையும் சூழ்நிலை வந்தது. டப்பிங் மட்டும்தான் பாக்கி. அந்த நேரத்தில் என் அண்ணாவிற்கு காதில் ஒரு ஆபரேஷன். அவரைப் பார்க்க வருகிற சாக்கில் ஜார்ஜ் என் வீட்டிற்கு வர ஆரம்பித்தார். என் வீட்டிலுள்ளவர்களுடன் நன்றாகப் பழக ஆரம்பித்தார்.

அவர் பழகியவிதம், காட்டிய அன்பு லேசாக வீட்டிலுள்ளவர்களை ஈர்க்க ஆரம்பித்தது. தெரியாமல் மேலே கைப்பட்டால்கூட 'ஸாரி'

**ஸ்ரீவித்யா**

சொல்வது போன்ற அவருடைய 'மேனர்ஸ்' வித்தியாசமாக இருந்தது. இது போன்ற ஒரு நட்பை அப்போது தான் நான் சந்திக்கிறேன்.

### பாரம் ஏன்?

"பம்பாயில் எல்லோரும் மனசுவிட்டுப் பேசுவாங்க. நீங்க ஏன் உங்கமனப்பாரத்தை உள்ளேயே வெச்சுப் பூட்டிக்கறீங்க? வெளிப்படையாப் பேசுங்க. அப்பதான் உங்க மனபாரம் குறையும். உங்களுக்குத் தேவை இப்ப ஒரு நல்ல ஃப்ரெண்ட் தான்" என்பார். எனக்கும் அப்ப ஃப்ரெண்ட்ஸ் சர்க்கிள் என்பது கிடையாது.

எப்பவுமே தனியாகத்தான் இருப்பேன். ஷூட்டிங் முடிஞ்சு வந்தா வீடுதான். வீட்டுல பல பிரச்சினை இருக்கும். அப்பாவிற்கும், அம்மாவிற்கும் எப்பொழுதும் மனவேறுபாடு, கடன் தொல்லைகள் என்றே வாழ்க்கை சென்று கொண்டிருந்தது. என்னைக் கவனிக்கவோ, எனக்கு ஆறுதல் சொல்லவோ யாருக்கும் நேரமில்லை.

என்னைப் பற்றி கொஞ்சமாவது தெரியும்னா அது ஜெயம்மாவுக்கு தான். அவர் என் அம்மாவிற்கு 11 வயது இருக்கும்போது எங்கள் குடும்பத்தில் வேலைக்கு வந்தவர். அவர்தான் எங்களையெல்லாம் வளர்த்தார். இந்தச் சூழலில்தான் ஜார்ஜ் என்னிடம் நெருங்கி வர ஆரம்பித்தார்.

டப்பிங்கிற்கு வண்டி வரவில்லையென்றால், இவரே வந்து காரில் கூட்டிக் கொண்டு போவார். அப்படியிருக்கும் போது தான் ஒருநாள் வாகினி ஸ்டுடியோவில் ஷூட்டிங் முடிந்து, அவருடைய காரில் ஏறப் போகிற சமயம். என்னுடைய முன்னாள் காதலரான அந்த நடிகர் அங்கே வந்தார்.

என்னை அழைத்தார். என்னதான் கோபம் இருந்தாலும், முறைத்துக் கொண்டு போகமுடியாது. அவர் ஒரு மிகப் பிரபலமான ஹீரோ. எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அருகில் போனேன். அப்போது அவர் சொன்ன விஷயம் எனக்கு கடுங்கோபத்தை வரவழைத்தது. அன்று அவர் சொன்னதுதான் என்னை ஒரு முடிவெடுக்க வைத்தது. எனக்கு நானே குழி தோண்டிக் கொண்டதற்கு அவர் சொன்னதும் காரணமானது.

என்னை அழைத்து அந்த ஹீரோ, ஜார்ஜை காட்டி, "வித்தியா, நீ இந்த ஆளோடு நெருக்கமாயிட்டிருக்கேன்னு நினைக்கிறேன்.

வேண்டாம்... அந்த ஆளு ரொம்ப மோசமானவன். நீ அவன்கிட்ட ரொம்ப ஜாக்கிரதையாகவே இருக்கிறது நல்லது" என்றார்...

என்னை ஏமாத்திட்டு இன்னொரு பெண்ணை அவர் திருமணம் செய்து கொண்ட கோபம், ஏமாற்றம் எல்லாமாகச் சேர்ந்து கொண்டது. அவரைப் பார்த்து கத்த ஆரம்பித்தேன். "மைண்ட் யுவர் ஓன் பிஸினஸ். ஆமா, நீங்கள்ளாம் நினைச்சா உடனே கல்யாணம் பண்ணிப்பிங்க. நாங்க மட்டும் உங்கள நினைச்சுக்கிட்டே காவடி தூக்கிக் கிட்டே அலையணுமா?" என்று பொரிந்து தள்ளினேன்.

### பெருமிதம்

பேசி முடித்ததும் இவரை 'பழி வாங்கணும்'னு ஒரு வெறி. அதுக்கு ஒரே வழி, அவரை மாதிரியே நானும் யாரையாவது உடனடியாகத் திருமணம் செய்து கொள்வதுதான் என்று நினைக்க ஆரம்பித்தேன். அதில் எனக்குள் ஒரு மடத்தனமான சந்தோஷம். 'பாரு, உன் கண்ணெதிரே இன்னொருத்தனோட நான் போவேன்" என்று காட்டிக் கொள்வதில் ஒரு அசட்டுத்தனமான பெருமிதம்.

சட்டென்று அவர் கண் முன்பே இவர் காரில் ஏறிக் கொண்டு கிளம்பிவிட்டேன். இந்தச் சம்பவம் முடிந்ததும் இவரும் என்னிடம் அன்பாக நடக்க ஆரம்பித்தார். ஷூட்டிங்கின்போது ஃபோன் செய்வார். "உனக்குச் சாப்பிட வீட்டிலிருந்து ஏதாவது எடுத்துக்கிட்டு வரட்டுமா?" என்று மிகவும் அக்கறையோடு கேட்பார். என் உள் மனசு இதைப் போன்ற அன்புக்கும், அக்கறைக்கும் ஏங்கிக் கொண்டிருந்ததை அவர் புரிந்து கொண்டிருக்க வேண்டும். நானும் என் மனதிலிருந்ததை அவரிடம் கொட்டினேன். ஒரு நல்ல சினேகிதமாகத்தான் எங்கள் நட்பு வளர்ந்தது. இந்தச் சூழ்நிலையை அவர் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

என்னையறியாமலே நான் அவர் வலைக்குள் விழ ஆரம்பித்தேன். படப்பிடிப்பு இடைவேளையில் அவர் வீட்டில் சென்று அவரைப் பார்ப்பது, அவர் வீட்டிலேயே மதிய உணவு சாப்பிடுவது என்று எங்கள் சந்திப்பு தொடர்ந்தது. என்னுடைய நெருங்கிய உறவினர் வீட்டுக்குப் போவதைப் போல உணர ஆரம்பித்தேன். அப்போதுகூட அது காதலாக மலரவில்லை. அந்த வயதில் நம் வயது சினேகிதர் வீட்டுக்கு போவதைப் போலத்தான் இருந்தததது. மேலும் வீட்டில் இல்லாத சில சுதந்திரம் இருந்தது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# கோகிலா என்ன செய்து விட்டாள்?

**05**

> தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன்.
> அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.
> ஒரு காலத்தில் ஓய்வே இல்லாது வெகுஜன சஞ்சிகைகளிலும் எழுதிக் குவித்தார்.
> இப்போது அவர் எழுதுவதில்லை. எத்தனை கோடி தந்தாலும் கதை எழுத மாட்டேன் என்று சபதம்.
> அந்த மாபெரும் எழுத்தாளரது படைப்புக்களில் ஒன்றுதான் இது! உங்கள் வரவேற்பை நிச்சயம் பெறும்.

இந்த உண்மையை-உலகத்தின் கண்களுக்குப் படாது, தனக்கு நேர்ந்த இரகசிய தண்டனையாகக் கடைசிவரை, ஒரு இரகசியமான வியாதியைச் சாகும்வரை மறைத்துக் கொண்டு-தான் அழிகின்றபோதே தன்னோடு அழியத்தக்க, அதன் பின்னும் பிறருக்குத் தெரியாமல் தன்னோடு எரிந்து போகின்ற ஒரு இரகசியம் போலவே இந்த உண்மையை மறைத்துக்கொள்ள முயன்றாள். தனது முயற்சிகள் எதிலுமே அவ்விதம் ஒரு முயற்சியின் விளைவாகவே மேலும் ஒரு மோசமான தோல்விக்கு, கேவலமான வீழ்ச்சிக்கு இரையாவதே தன் தலைவிதி என்று இப்போது அவள் இறுதியாகப் புரிந்துகொண்டாள்.

அது எப்படி நேர்ந்தது?

'எல்லோருடைய பாராட்டுதலுக்கும் புகழ்ச்சிக்கும் பாத்திரனாகி வாழ்க்கை முழுவதும் உயர்ந்து கொண்டே போகும் ஒரு மனிதன் என் விஷயத்தில் மட்டும், தானும் குறுகிச் சிறுத்து, என்னையும் அற்பமான ஒரு புழுவைப் போலாக்கி வாழ்க்கையையே ஒரு சகதியாக்கிக் கொண்டு நாளுக்கு நாள் அதில் அமிழ்ந்து கொண்டே போவது எப்படி சாத்தியமாயிற்று?'- என்று என்னுள் எண்ணி மறுகும்போது தனது வழக்கு இந்த உலகத்தின் எந்த நீதி சபையிலும் எடுபடாது என்று அவளுக்குத் தோன்றியது. அவன் இப்படி ஒரு மனிதன் என்று சொன்னால் இன்னொருவர் மூலம் சொல்லக் கேட்டால்-அவளேகூட நம்பியிருக்க மாட்டாள். அவர்கள் இருவர் மட்டுமே சம்பந்தப்பட்ட அந்த வழக்கின் தாற்பர்யத்தை-அதில் தன்னிலையிலும் முன்னிலையிலும் பரஸ்பரம் பாதிக்கப் படக் கூடிய அந்த இருவரைத் தவிர வேறு எந்த நீதிபதியும் புரிந்துகொள்ள முடியாது. இது போன்ற தாம்பத்திய வழக்குகளுக்கு எந்த நீதிபதியும் ஒரு மூன்றாம் மனிதனே என்பதால், இதில் வழங்கப்படும் எந்தத் தீர்ப்பும் இந்த இருவரில் யாரேனும் ஒருவரைப் பாதிக்கும் பட்சத்தில் அது அநீதியே ஆகும். எனவேதான் எந்த மூன்றாம் நபருக்கும் தனது வழக்கு பகிரங்கப்படக் கூடாது என்பதில் அவள் மிகவும் மூர்க்கமாக இருந்தாள்.

அவளது நம்பிக்கைக்கும் மதிப்பிற்கும் பாத்திரனான அந்த 'அவனி'டம்கூட அவள் தனது தாம்பத்திய வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சிகரமாய் இருப்பதாகவே சாதித்து வரும் ஒரு சாதனையில் மட்டும் இதுநாள் வரை வெற்றியே கண்டு வந்திருக்கிறாள்.

-ஆனால், இன்று காலை நடந்த நிகழ்ச்சி...

'இனிமேல் எதையும் எவரிடத்திலும் மறைத்துப் பயனில்லை; மேலும் வளைய முடியாத அளவுக்கு நான் வளைந்து விட்டேன். இன்னும் பணிய முடியாத அளவுக்கு நான் பணிந்துவிட்டேன். இனிமேலும் ஏதேனும் நான் செய்ய வேண்டுமெனில் அது சற்று நிமிர்வதுதான். கொஞ்சம் தலையை நிமிர்த்தி எழுவதுதான். இதுதான் வாழ்க்கை எனில் இதைச் சற்று மீறியும் வாழ்ந்து பார்க்கலாமே... அது ஓர் அவமானம் எனின், அதையும்தான் தாங்கிக்கொள்ளலாமே... எனக்கென்ன? எனது புகழ்ப் பதாகையே அறுந்து விழுந்து விடுவதைப் போன்ற ஒரு அவமானமா வந்து என்னைப் பாதித்துவிடப் போகிறது? என்றெல்லாம் ஒரு மாறிய வழியில் அவள் புதிதாகச் சிந்தித்த போதிலும் அந்தச் சிந்தனைகளின் தொடர்ச்சியாகத் தான் செய்ய வேண்டுவது என்ன என்று புரியாமல் திகைத்தாள்.

நேற்றுவரை அவளுக்கு இப்படி ஒரு திகைப்பு ஏற்பட்டதேயில்லை. இது போன்ற சச்சரவுகள் இதற்கு முன் எத்தனையோ முறை ஏற்பட்டிருந்த போதிலும் அவை இப்படி ஒரு எல்லையைத் தொடும் அளவுக்கு முற்றியதில்லை என்று அனந்தராமனைப் போலவே அவளும் உணர்ந்தாள்.

எல்லாவற்றுக்குமே எல்லைகள் உண்டு: இரண்டே மனிதர்கள் சம்பந்தப்பட்ட-ஒரு பெரிய சமூக அமைப்பின் அடிப்படை வட்டமான இரண்டு மனிதர்கள் சம்பந்தப் பட்ட-தாம்பத்ய வாழ்க்கையிலும் சில எல்லைகள் உண்டு. ஒப்பந்தங்கள் என்பன இரண்டு சமூகங்களுக்கிடையே அல்லது இரண்டு தேசங்களுக்கிடையே எவ்வளவு ஜாக்கிரதையாகப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் அந்த இரண்டு தேசங்கள் அல்லது சமூகங்களுக்கிடையே ஒரு சுமுகமான உறவு நீடிப்பதற்கு ஏதுவாகிறதோ, அதே அளவுக்கு ஜாக்கிரதை உணர்ச்சியோடு ஒரு சிறிய வட்டத்திற்குள்ளும் பாதுகாக்கப்படுவதன் மூலமே, பரஸ்பர மதிப்பளிப்பின் மூலமே அந்த இருவர் சம்பந்தப்பட்ட தாம்பத்திய வாழ்க்கையிலும் ஒரு சுமுகமான சூழ்நிலை காப்பாற்றப் படுமென்பது கருத்தளவில் மிகச் சுலபமாகப் புரிந்தும் ஏனோ பலருக்கு அது காரியாம்சத்தில் கை கூடுவதில்லை.

அனந்தராமனைப் போன்ற அறிவியல் வாதிகள் கூடத் தனிப்பட்ட வாழ்க்கையில் இந்த எல்லை மீறும் காரியத்தைச் செய்து விடுகிறார்கள்.

அவள் அவனுக்குத்தான் சொந்தம் என்று ஒப்பந்தம் ஏற்பட்ட அந்த முதல் நாளே அவன் தனது எல்லைகளை மீறினான்.

அவள் தன் மனத் திரையில் அவனைப் பற்றி வரைந்திருந்த மகத்தான சித்திரங்களை ஈரம் உலருமுன்-அவனது இங்கிதமற்ற ஒரு ஒற்றைக் கேள்வியின் மூலம், அந்தக் கனவுகளைக் குழப்பி, அந்தச் சித்திரங்களை- அலங்கோலப்படுத்தி வெறும் கறையாக்கி விட்டான்.



உணர்ச்சிகளின் எல்லைகளை மீறியவர்கள் விரும்பினால்கூடப் பின்வாங்கி விட முடிவதில்லை. அவர்கள் நின்று நின்று அதற்காக வருந்தி வருந்தி, மேலும் மேலும் அந்த எல்லைகளை மீறுவதையே இயல்பாகக் கொண்டு விடுகிறார்கள். அதுவும் தாம்பத்திய வாழ்க்கையின் எல்லைகளை மீறிக் கால் பதிக்குமிடம் அநேகமாக ஆளையே விழுங்கி விடும் புதை மணற் பிரதேசமாகவே இருக்கும்.

அவ்வித வெறும் உணர்ச்சிமயமான குழப்பங்களிலேயே தாம்பத்திய வாழ்க்கையின் சௌந்தர்யங்களையெல்லாம் இழந்து மிகக் கேவலமான சச்சரவுகளிலும் மிக வேதனையான உறுத்தல்களிலும் தன் வாழ்க்கையையே மூழ்கடித்துக் கொண்டிருப்பதாகச் சில சந்தர்ப்பங்களில் அனந்தராமன் உணர்வதுண்டு.

## ஜெயகாந்தன்

அப்போதெல்லாம் 'எனது அறிவாற்றலைக் கண்டு தன் அறிவைப் பறி கொடுத்து விட்ட ஒரு குற்றத்தைத் தவிர, வேறெதையுமே செய்தறியாத இந்தக் கோகிலாவின் வாழ்க்கையையே எவ்வளவு கொடுமையான தண்டனையாக்கி விட்டேன் நான்... அவன் மூலம் அவளது இருதயத்தில் எனக்காகக் கட்டியிருந்த மாளிகையை எப்படி இருள் மண்டச் செய்து விட்டேன்' என்று பல சமயங்களில் அனந்தராமன் இரகசியமாகக் கண்ணீர் விட்டு அழுவான். அது அவளுக்கும் தெரியும். நிரந்தரமாகக் காணப்பட்டு இரத்தம் வடிந்து கொண்டிருக்கும் இருதயத்தையே தாங்கிப் பழகிவிட்ட அவளுக்கு அவனது கண்ணீர் ஓர் அவசியமற்ற சாகசமாகத் தோன்றிற்று. எனவே அதை அவள் பொருட்படுத்துவது இல்லையெனினும் அதன் பொருட்டு அவன் திருப்திக்காக, அவனை அவள் தேற்றுவதுண்டு. அது வெறும் பாவனையென்று அவன் மனத்துக்குப் புரியும். அவர்களது தாம்பத்திய வாழ்க்கையே ஒரு பாவனையாகிவிட்ட பிறகு வெறும் சாரமில்லாத சரீரக் கலப்பினால் மட்டும் தாங்கள் இருவரும் கணவன்-மனைவி என்பதில் அவர்கள் திருப்தியுறுவார்கள்.

அவன் எத்தனையோ முறை உணர்ச்சிகள் கலங்கித் தனது தவறுகளுக்காக வருந்தி அவளிடம் மன்னிப்புக் கேட்டிருக்கிறான். அவள் அதை அங்கீகரித்ததும் ஒரு பாவனைதான். 'அவள் நினைவில் தான் இழந்துவிட்ட ஸ்தானத்தை மீண்டும் பெறுவது எப்படி! கறைபட்டுப் போன அவள் மனத்திரையில் மீண்டும் அந்தக் கனவுகளை வரைந்து விடுவது எப்படி?' என்றெல்லாம் அவன் தவித்த போது அந்த வாழ்க்கையின் வெறுமையை அவளை விடவும் அவன் கனமாக உணர்ந்தான். அவள் தன்னிடம் நேர்மையாக நடந்து கொள்கிறாள் என்று அவன் எப்போதுமே நம்புகிறான். அந்த நம்பிக்கையில் அவளிடம் அவன் ஒரு நாள் கேட்டான்:

"நீ என்னைக் காதலிக்கவேயில்லை என்று நான் உணருகிறேன், சரிதானா?"

அவள் சொன்னாள்: "ரொம்பவும் சரி."

"நீ இப்பொழுது கூறுவது சத்தியம்."

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்"

அவன் பதைபதைத்த குரலோடு பற்களைக் கடித்தவாறு கேட்டான்: "பின் என்ன இழவுக்கு நாம் சேர்ந்து வாழ்கிறோம்?"

அதே கேள்வியைக் கேட்க விரும்பியவள் போலச் சற்று முகம் நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவளை முந்திக் கொண்டு அவன் கேட்டுவிட்டான் என்பதால் அவள் அதற்குப் பதில் சொல்ல நேர்ந்தது: "உலகத்தின் முன்னே அப்படி ஒரு பந்தத்திற்கு நம்மை நாமே ஆட்படுத்திக் கொண்டோமே-அதற்காகத்தான்."

(கோகிலா.... தொடரும்)

---

> தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

**14**

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்



"இவளைப் பிடித்த அதிகாரி கமலநாதன் எனக்கு மிகவும் வேண்டியவராயிற்றே...!" என்றார் வரதராஜன்.

"கமலநாதன் ஏற்கனவே இந்தப் பெண்ணை இரண்டு முறை ஓட்டலுக்குக் கூட்டிக் கொண்டு போயிருக்கிறாராம்! அப்படியிருந்தும் கைது செய்திருக்கிறார் பாருங்களேன்...!" என்றாள் ரங்கநாயகி.

உடனே வரதராஜன் லீலாவைப் பார்த்து, "ஏம்மா, இப்பொழுது அவரையே போய்ப் பார்த்திருக்கலாமே....?" என்றார்.

"அவருக்கு இனி இது பழைய சரக்கு. எப்போதும் புதுப் புதுச் சரக்காக அல்லவா அவர் பார்ப்பார்!" என்றாள் லீலா.

"கமலநாதன் உங்களுக்கு வேண்டியவரோ வேண்டாதவரோ, இந்த வழக்கில் நீங்கள் ஆஜராக வேண்டும். லீலாவை விடுதலை செய்ய வேண்டும்!" என்று கட்டளை முத்திரை போட்டாள் ரங்கநாயகி.

அந்த இடத்துக் கட்டளையை யார் மீற முடியும்?

"சரி!" என்று ஒப்புக் கொண்டார் வரதராஜன்.

அதோடு விடுவாரா? லீலாவின் விலாசத்தையும் வாங்கிக் கொண்டார்.

காம ரசத்தில் ஆழ்ந்துவிட்ட ஒரு மனிதன் உடம்பிலே தெம்பிருக்கும் வரை எதைக் கண்டாலும், 'இதுவும் கிடைக்காதா?' என்று ஏங்குவது இயல்பல்லவா!

லீலாவோ நட்சத்திர ஓட்டல் வாடிக்கைக்காரி! பார்ப்பதற்கும் அழகி! ஆகவே சரக்கு உயர்வானது என்று வரதராஜன் கணக்குப் போட்டதில் தவறென்ன?

மாலை ஐந்து மணிக்கே லீலா வீட்டுக்குச் சொல்லி அனுப்பி விட்டார், இரவு தான் வருவதாக.

லீலா தன் அழகான சிறிய வீட்டில் அவருக்காக ஸ்பெஷல் சாப்பாடுகள் எல்லாம் தயார் செய்தாள்.

...டல்களில் எத்தனைவகை மாமிசம் உண்டோ அனைத்தையும் வரவழைத்தாள்.

எங்கெங்கோ தேடி அலைந்து மேல்நாட்டு விஸ்கியும் வரவழைத்து விட்டாள்.

ஏதோ குருக்ஷேத்திரத்துக்குத் தயாராகி விட்ட அர்ஜுனனைப் போல், இரவு ஒன்பது மணிக்கெல்லாம் வந்து சேர்ந்தார் வரதராஜன்.

வரும்போதே கொஞ்சம் சுதி.

கையிலே ஒரு கொக்கோகப் புத்தகம் கொண்டு வந்தார்.

இப்போதெல்லாம் அவர் சட்டப் புத்தகத்தை விட இந்தப் புத்தகத்தைத்தான் அதிகம் படிப்பது வழக்கம்.

"ஒரு மனிதன், எத்தனை வகையான காதல் உண்டோ அத்தனையையும் அநுபவித்துப் பார்க்க வேண்டும். ஆடி அடங்கி நாடி தளர்ந்து, பல் விழுந்துபோன பிற்பாடு என்ன செய்ய முடியும்?"- என்ற ஒரு அற்புத தத்துவத்தை வந்ததும் வராததுமாக விளக்கினார்.

"மூன்று கிளாஸ் சுதி ஏற்றிக்கொண்டு, நல்ல வழவழப்பான பாத்ரூமில் ஷவர் பாத்திலே உட்கார்ந்து அரைமணி நேரம் இருக்க வேண்டும். அப்போது நீயும் கூட இருக்க வேண்டும் அதற்குப் பெயர்தான் ஜலக்கிரீடை!" என்றார்.

"ஜலக்கிரீடை என்பது ஆற்றிலோ குளத்திலோ நடப்பதல்லவா?" என்று கேட்டாள் லீலா.

"அதெல்லாம் அந்தக் காலம்! இப்போது பாத்ரூம் கிரீடைதான் அதிகம்!" என்றார் வரதராஜன்.

லீலா வீட்டு பாத்ரூம் கூட வசதியானதுதான். அதைக் காட்டினாள் வரதராஜனுக்கு.

"அடடா! இதிலேயே படுத்துத் தூங்கலாம் போலிருக்கிறதே!" என்றார் வரதராஜன்.

தங்க வளையலை ஒரு முறை குலுக்கி இழுத்து விட்டுக் கொண்டு பாட்டிலைத் திறந்து ஊற்றிக் கொடுத்தாள் லீலா.

உடனே வழக்கம்போல் லீலாவை வருணிக்க ஆரம்பித்தார் வரதராஜன். அவளுக்கும் ஒரு கிளாஸ் ஊற்றிக்கொடுத்து அவளையும் குடிக்க வைத்தார்.

அவளும் கொஞ்சம் வற்றலையும் ஊறுகாயையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு, பழக் கப்பட்ட முறையில் குடிக்கத் தொடங்கினாள்.

பெண்ணும் குடித்தால்தானே தலை கீழாக உருண்டாலும் தவறாகத் தெரியாது!

அந்த நேரத்தில் வெளியில் ஜீப் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

லீலாவுக்குக் கொஞ்சம் நடுக்கம் வந்தது என்றாலும் "டோன்ட் ஒர்றி!" என்று கத்தினார் வரதராஜன்.

அவரே போய்க் கதவைத் திறந்தார்.

அங்கே வந்திருந்தது வேறுயாருமில்லை; சாட்சாத் கமலநாதன்.

"ஹலோ!" என்று இருவரும் அழைத்தனர். "ஹலோ!" என்று அவரும் உள்ளே வந்தார்.

"என்ன வேறொன்றும் கிடைக்கவில்லையா?" என்று கேட்டார் வரதராஜன்.

"ஓர் இடத்தில் சொல்லி வைத்திருந்தேன். அது பெங்களூருக்குப் போய்விட்டது. இதுவும் நமக்கு அறிமுகமான இடம்தான்!" என்றார் கமலநாதன்.

லீலா உற்சாகமாக அவருக்கும் ஒரு கிளாஸ் ஊற்றினாள்.

"இதோ பாருங்கள் கமலநாதன்! நாளைக்கு இந்தப் பெண்ணுக்காக நான் ஆஜராகப் போகிறேன். அரசாங்க வக்கீல் எதிர்வழக்காடக்கூடாது!" என்றார் வரதராஜன்.

உடனே கமலநாதன், "நான் ஏற்கனவே சொல்லி விட்டேனே! அரசாங்க வக்கீல் லீலா என்ற பெண்ணைத் தவறாகப் பிடித்ததாகவே கூறிவிடுவார்!" என்றார்.

"வெரிகுட்! வெரிகுட்!" என்று அவரின் தோளில் தட்டினார் வரதராஜன்.

உடனே கமலநாதன் லீலாவைப் பார்த்து, "நீ நாளைக்குக் கோர்ட்டுக்கே வர வேண்டாம். ஆட்டமெட்டிக்கா விடுதலையாகிவிடும்!" என்றார்.

உடனே லீலா அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டாள்.

"சபாஷ்! சபாஷ்! சட்டம் ஒழுங்கு வாழ்க!" என்று கரகோஷம் செய்தார் வரதராஜன்.

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
>
> —கண்ணதாசன்—

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வியும் பதிலும்

லிங்கத்தார் திண்ணையில் பாய் விரித்துப் படுத்தவர் எழுந்திருக்க மனமில்லாமல் கிடந்தார்.

காலைப் பொழுதில் காளை மாட்டின் சாணத்தை அள்ளிக் கொண்டு வந்த அவர் மனைவி முத்தம்மா, "என்னப்பா இன்னும் எழும்ப மனமில்லையே?" என்றாள்.

லிங்கத்தார் பதிலேதும் சொல்லாமல் கொட்டாவி விட்டார். அவருடைய கடைக்குட்டி மகள் சொர்ணா காப்பிக் கப்பைக் கொண்டு வந்து நீட்டினாள். அவர் எழுந்து உட்கார்ந்து கோப்பியை ஒரே முடலில் குடித்து விட்டு சிந்தனையில் ஆழ்ந்தார்.

"பிள்ளை சொர்ணா இஞ்ச கொஞ்சம் வாவன்!"

"என்னப்பா?" சொர்ணா எட்டினாள்.

"அந்தக் கலண்டரைக் கொஞ்சம் கொண்டு வாறியா?" சொர்ணா கலண்டரைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

"இண்டையத் திகதி தெரியுமா?"

"தெரியும்பா"

"அம்மாவுக்கு நினைப்பிருக்கோ என்னவோ?" கலண்டரைப் புரட்டிய லிங்கத்தார் பெருமூச்செறிந்தார். அவர் கண்களில் கசிந்த நீரை பாயில் கிடந்த துவாய்த் துண்டால் அழுந்தத் துடைத்தார்.

பழைய நினைவுகள் அலையாகப் பொங்கி அவர் மனதில் வந்து மோதின. போன வருஷம் சித்திரை பத்தில் அவர் மூத்தமகள் கலாவின் கலியாண நாள்.



**ரூபாராணி**

அது நடந்து முடிந்திருந்தால் ஒருபேரன் பேத்தியாவது கண்டிருக்கலாம். லிங்கத்தார் பழைய நினைவுகளை மீண்டும் அசைபோட்டுப் பார்த்தார். அந்தப் பத்தாந்திகதி பயங்கரமாய் உருவெடுத்தது.

அன்று விடிகாலைப் பொழுதே அவருடைய வீடு களை கட்டத் தொடங்கியது. மாவிலைத் தோரணமும் மண்டப அலங்காரங்களும் கலியாணத்துக்குக் கட்டியம் கூறின.

ப்பாட்டுச் சத்தம் பட்டாசுச்சத்தம் வீட்டை இரண்டுபடுத்தியது. லிங்கத்தாரின் மூத்த மகள் கலாவுக்கும் கதிரேசனுக்கும் கலியாணம். இவர்கள் இருவரும் இரண்டாண்டுக் காதலர்கள். கலியாணத்தைத் தள்ளிப்போடாமல் எப்படியாவது முடித்துவைக்க வேண்டுமென்பதில் முத்தம்மா முனைப்பாயிருந்தாள்.

மாப்பிள்ளை கொழும்பிலிருந்து வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவேளை வீதியில், திடீரென்று, இராணுவ வாகனங்களின் இரைச்சல் வெறியோட்டம், எல்லோர் முகத்திலும் கிலிபரப்பியது. வீட்டிலுள்ள அனைவரும் உடனடியாக முற்றவெளி மைதானத்தில் விசாரணைக்காக வரும்படி ஒலிபெருக்கி அலறியது.

இடி விழுந்த அதிர்ச்சி லிங்கத்தார் குடும்பத்துக்கு. எல்லோரும் அல்லோலகல்லோலப்பட்டு முற்றவெளிக்கு விரைந்தனர். மனிதனின் விதி எப்போது எப்படி நிச்சயிக்கப்படும் என்பதை யாரறிவார்.

விசாரணையின் பின் பல பேர் விடுவிக்கப்பட்டுச் சில பேர் தடுத்து நிறுத்தப்பட்டனர். அந்தச் சிலபேரில் கலாவும் ஒருத்தி.

முத்தம்மாவும் லிங்கத் தாரும் எவ்வளவோ அழுது புரண்டும் பலனளிக்கவில்லை. "மேல்விசாரணை செய்த பின் எல்லாரையும் விட்டிடுவம்" என்றார்கள். கலா மற்றவர்களுடன் இராணுவ வாகனத்தில் ஏற்றப்பட்டாள்.

லிங்கத்தார் குடும்பம் வீடு திரும்பியபோது மாப்பிள்ளையும் அவர் குடும்பத்தினரும் மண்டபத்தை நிறைத்திருந்தனர்.

கலாவை இராணுவம் கொண்டு சென்ற செய்தி அறிந்த அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். கலாவின் தங்கை சொர்ணாவை மணப்பெண்ணாக்கி விஷயத்தை முடித்துத் திரும்புவதில் தீவிரமானார்கள்.

கலா மூன்று நாளில் திரும்பிவந்து விடுவதாக இராணுவம் உறுதியளித்ததைக் கூறி கொஞ்சம் பொறுமை காட்டும்படி லிங்கத்தார் மன்றாடினார்.

மாப்பிள்ளை வீட்டார் மௌனமாக வெளியேறினர். அவர்கள் சென்று மூன்று வாரங்களால் கலா விடுதலை பெற்றுவீடு வந்து சேர்ந்தாள். இந்தச் செய்தியை அறிந்த பின்னரும் மாப்பிள்ளை வீட்டாரின் மௌனம் லிங்கத்தார் குடும்பத்தைத் துயரத்தில் ஆழ்த்தியது.

கலா தன் காதலனுடன் கொண்ட தொடர்புகளும் தோல்வியைத் தழுவின.

கடைசியில் மாப்பிள்ளையின் அப்பாவிடமிருந்து வந்தது ஒரு துண்டுக் கடிதம்.

"விசாரணை என்று கொண்டுபோன உங்கள் மகளை எப்படி என் மருமகளாக்கிக் கொள்ள முடியும்? இந்தக் காலத்தில் ஒரு பெண்ணின் கற்பு எங்கே எப்படிப்பறிபோகும் என்று யார் கண்டார்கள்?"

இப்படிக்கு, இராமநாதன்.

லிங்கத்தாரின் இரத்தம் கொதித்தது. முத்தம்மா ஒப்பாரி வைத்தாள். கலா தன்னைத் தானே சிறைப்படுத்திக் கொண்டாள்.

"காதலாவது கத்தரிக்காயாவது, தலையோடு போகாமல் தலைப்பாகையோடு போனது அக்கா செய்த புண்ணியம்... சே, பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள், ஆனா மனுஷன் இரங்கமாட்டான்." சொர்ணா முணுமுணுத்தாள். எண்ணங்களில் சிக்குண்ட லிங்கத்தாரின் குடும்ப நிம்மதி விடைபெற்றுப் பல மாதங்களாகி விட்டன.

வாசல்கேற் பலமாகக் கிறீச்சிட்டு அலறியது. லிங்கத்தாரின் நினைவுகள் அறுந்தன. அவருடைய குடும்ப நண்பர் தம்பர் உள்ளே வந்து உட்கார்ந்தார்.

"டேய் லிங்கம், உன்ர மாப்பிள்ளைப் பெடியனும் குடும்பமும் கொழும்பில லொட்ஜிலதானே?" தம்பர் கேட்டு விட்டு முறுவலித்தார்.

"அதுக்கென்ன?" லிங்கத்தாரின் தொனியில் விரக்தி நிழலாடியது.

"இராணுவம் நடுஇராத்திரியில எல்லாரையும் விசாரணைக்கு அள்ளிக்கொண்டு போட்டுதாம்." வாயில் வெற்றிலையைக் குதப்பி விட்டுச் சொன்னார் தம்பர்.

"போகட்டுமே இது பெரிய புதினமா?" வெறுப்பை உமிழ்ந்து எங்கோ வெறித்துப் பார்த்தார் லிங்கத்தார்.

"அதுக்கில்லப்பா தலையிடியும் காச்சலும் தனக்கு வந்தாத்தானே தெரியும்? மாப்பிள்ளையின்ர அப்பா உனக்கெழுதிய கடிதத்தில் கேட்ட கேள்விகளுக்கு எப்பிடிப் பதில் கிடைச்சிருக்குப் பாத்தியா?" ஏளனச் சிரிப்பொன்றைச் சிந்தி எழுந்து சென்றார் தம்பர்.

லிங்கத்தாரின் கண்கள் மீண்டும் கலண்டரில் உள்ள பத்தாம் திகதியில் நிலை குத்தின.

# பிள்ளையார் பிடிக்க...?

**"சுந்தரம்பிள்ளை பெருமித புன்னகையோடு மகனின் முதுகில் தட்டிக்கொடுத்தார்."**

"நம்ம தம்பிக்கு ரொம்பப் பெரிய இடத்திலயிருந்து ஒரு வரன் கொண்டாந்திருக்கேன். குடும்பத்திற்கு ஒரே பொண்ணு. தோட்டம், துரவு, வயல், வரப்பு, கார், பங்களான்னு எக்கச்சக்கமான சொத்து. ஆனா பொண்ணு கறுப்பு. ஒரு காலும் கொஞ்சம் ஊனம்; இலேசா விந்தி விந்தி நடப்பா! அதோட நம்ம தம்பியவிட பொண்ணுக்கு ஒரு வயசு மட்டும்கூட. ஐயாவுக்கு சம்மதம்னா..." தரகர் சொல்லி முடிப்பதற்குள்...

"யோவ் தரகரே! நீர் என்ன சுய நினைவோடுதான் பேசுகிறீரா? ஏதோ நாங்க கொஞ்சம் வசதி குறைவானவங்களாயிருந்தாலும் என் பையனோட படிப்புக்கும் அழகுக்கும் என்னய்யா குறைச்சல்? ஏதோ நம்ம குடும்பத்திற்கு வேண்டியவனாச்சேன்னு உம்மை சும்மா விடுறேன். இல்லேன்னா..." சுந்தரம்பிள்ளை கோபத்தின் எல்லைக்கே போய்விட்டார்.



தரகர் தன் தந்தையிடம் பேசிக்கொண்டிருந்ததையெல்லாம் அடுத்த அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த விஜய் அவசரமாக அங்குவந்து "தரகரய்யா.. உடனடியா இந்த சம்பந்தத்தைப் பேசி முடிங்க!" என்றான் தரகரை நோக்கி.

"விஜய்! உனக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு? பொண்ணு கறுப்பா இருந்தாக் கூட பரவாயில்ல; உன்னவிட ஒரு வயசு அதிகம். அதுவுமில்லாம ஒரு கால் நொண்டின்னு வேற சொல்றாரேடா!"

"அப்பா...! நீங்க கொஞ்சநேரம் பேசாம இருங்க; ஐயா நீங்கபோய் உடனடியா காரியத்தை முடிங்க, இந்தாங்க இப்போ இந்த ஐந்நூறு ரூபாயை வச்சுக்கங்க; கல்யாணத்துக்கப்புறம் உங்களை விசேஷமாக் கவனிக்கிறேன்!" எனக் கூறியபடி தன் சட்டைப்பைக்குள் கையை விட்டு ஐநூறு ரூபா நோட்டொன்றை எடுத்து தரகரிடம் நீட்டிய விஜய், "இன்றொரு முக்கியமான விஷயம்; அதாவது இந்த சீர்வரிசை, வரதட்சணை வாங்கிறதெல்லாம் எனக்கு அறவேப்பிடிக்காது. பொண்ணை மட்டும் கொடுத்தாப்போதும்னு அவங்கக்கிட்ட மறக்காம கண்டிப்பா சொல்லிடுங்க!" என்றான்.

வாயெல்லாம் பல்லாக பணத்தைப் பெற்றுக்கொண்ட தரகர், "தம்பி! நீங்க எதப்பற்றியும் யோசிக்காதீங்க; நான் இப்பவே போய் ஆகவேண்டிய காரியங்களைக் கவனிக்கிறேன்." எனக்கூறிவிட்டு அங்கிருந்து அகன்றார்.

தன்மகனுக்கு உண்மையிலேயே மூளை தான் பிசகிவிட்டது போலும் என்று எண்ணிய சுந்தரம்பிள்ளை செய்வதறியாது அப்படியே திக்பிரமைப்பிடித்து நிற்க;

"அப்பா, பணத்தை பெரிசா நினைக்காம அழகுக்காக மட்டும் கல்யாணம் முடிச்ச காலமெல்லாம் மலையேறிப்போச்சி! இப்ப அழகு முக்கியமில்ல; பணந்தான் முக்கியம். ஆமா... பணமிருந்தால்தான் வாழலாம். மற்றவங்களும் நம்மள மனுஷனா மதிப்பாங்க! அதனால எனக்கு சொத்து சுகங்களும், பணமுந்தான் தேவை. அதோட நான் சீதனமே வேணாம்னு கண்டிப்பா சொல்லிட்டதால பொண்ணோட அப்பன் அலறியடிச்சிக்கிட்டு அவ்வளவு சொத்தையும் என் பேருக்கே எழுதி வைக்கிறானா இல்லையான்னு பாருங்க! எப்படிப்பா உங்க பிள்ளையோட ராஜதந்திரம்?" என்றான் விஜய்.

தன் மகனின் அபாரமான புத்திசாலித்தனத்தை மனதிற்குள்ளேயே மெச்சிக் கொண்ட சுந்தரம்பிள்ளை பெருமிதப் புன்னகையோடு விஜய்யின் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

அடுத்த பதினைந்தாவது நாளில் கோடீஸ்வரர் செல்லக்கண்ணுவின் ஒரே மகள் ரேவதிக்கும், விஜய்க்கும் மிக ஆடம்பரமாக திருமணம் நடைபெற்றது. அரசியல் பிரமுகர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் என பெரிய புள்ளிகளின் கூட்டம் கல்யாண மண்டபத்தைக் கலக்கிக்கொண்டிருக்க; உண்மையிலேயே இது கோடீஸ்வரர் செல்லக்கண்ணு வீட்டுக் கல்யாணமா!? அல்லது செல்வி ஜெயலலிதா வீட்டுக் கல்யாணமா? என மற்றவர்கள் மூக்கின்மேல் விரல் வைத்து ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

விருந்து வைபவம் நடந்து முடிந்த கையோடு மணப்பெண்ணின் தந்தை மேடையில் ஏறி, "என் மகள் ரேவதிக்கு திருமணம் நடைபெற்று முடிந்த இந்த நல்ல நாளில் உங்களுக்கெல்லாம் ஒரு இனிய சந்தோஷமான செய்தியை அறிவிக்கப்போகிறேன். அதாவது என் ஒரே மகளுக்கு வரதட்சணைக் கொடுப்பதற்காகத்தான் நான் கோடிகோடியா சம்பாதிச்சேன். ஆனா என் மாப்பிள்ளை வரதட்சணைங்கிற பேச்சே பேசக்கூடாதுன்னு கண்டிப்பா சொல்லிட்டார். உண்மையிலேயே இந்த மாதிரி ஒரு தங்கமான மனிதரைக் கணவரா அடைஞ்ச என் மகள் பெரும் பாக்கியசாலிதான். இனி இந்த சொத்தெல்லாம் எனக்கெதற்கு? எனவே நான் இருக்கிற வீட்டையும் அதைச்சுற்றியுள்ள காணியையும் மாத்திரம் வச்சிக்கிட்டு மற்ற எல்லா சொத்துக்களையும் ஒட்டுமொத்தமா நம்ம ஊர் அம்மன் கோயில் பேர்ல எழுதி வச்சிட்டேன். அதற்கான உறுதிப்பத்திரத்தை இங்கே வந்திருக்கும் அம்மன் கோயில் தர்மகர்த்தா ஐயாவிடம் தன் கையாலேயே ஒப்படைக்கும்படி என் மாப்பிள்ளையைக் கேட்டுக்கொள்கிறேன்!" என ஒரு பெரிய குண்டைத் தூக்கிப்போட்டார்.

"எல்லா சொத்துக்களையும் ஒட்டுமொத்தமா நம்ம ஊர் அம்மன் கோயில் பேர்ல எழுதி வச்சிட்டேன்." என செல்லக்கண்ணு சொன்னது மட்டும்தான் விஜய் காதில் விழுந்தது. வேறு எதுவுமே விழவில்லை. அதற்குள் உட்கார்ந்திருந்த இருக்கையிலேயே மூர்ச்சையாகிப்போனான். விஜய்யின் தந்தை சுந்தரம்பிள்ளைக்கு இரத்தக் கொதிப்பு நூற்று நாற்பது டிகிரியைத் தாண்டிக்கொண்டிருந்தது.

**மாத்தளை ஆர். பாலகிருஷ்ணன்**

# சும்மா கிடந்த கிராமம்!


**"அன்று பகல் எந்த வீட்டிலும் அடுப்பு புகையவில்லை. ஏன் இதெல்லாம்....? என்ன நடந்தது?"**

வழக்கமாக சோம்பல் முறித்தபடி எழுந்து நிற்கும் எங்கள் கிராமம், அன்று துடித்துப் பதைத்து எழுந்து கொண்டது. வேலி நீளத்திற்கும் தெருத்தெருவாகக் காக்கிச் சட்டைக்காரர்கள்- எல்லோர் முகங்களிலும் கடுகடுப்பு. கிராமத்திலுள்ள அத்தனை நாய்களும் திக்குத்திக்காக துணிச்சலுடன் அவர்களை எதிர்த்து ஒரே மூச்சில் அவைகளின் பாஷையில் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தன.

மக்களெல்லோரும் அவரவர் வீடுகளுக்குள் நடுங்கியபடி நின்று யன்னல்களின் ஊடாக நோட்டம் விட்டுக் கொண்டிருந்தனர்.

"என்ன இது! 'றவுண்டப்' செய்யப்போகிறார்களோ?" என்று ஏகாம்பரம் மெதுவாக மனைவியைப் பார்த்துக் கேட்டான்.

"'றவுண்டப்' என்றால் இந்நேரம் எல்லோரையும் கோவிலடிக்குச் செல்லுமாறு கட்டளை போட்டிருப்பார்களே! அப்படியில்லாமல் சும்மா நாட்டுக்கடைகளைப் போல இவர்கள் நிற்பதால் வேறு ஏதாவது நடவடிக்கைகளில் ஈடுபடப்போகிறார்கள் போல் தெரிகிறது. எதற்கும் நீங்கள் புறப்பட்டுக் கொண்டு வேலைக்குப் போகப்பாருங்கள்! வேலைக்குப் போகின்றவர்களை எதுவும் செய்யமாட்டார்கள்" என்று ஏகாம்பரத்தின் மனைவி மலர் கணவனிடம் சொன்னாள்.



பாடசாலைக்குச் செல்ல பிள்ளைகளும் வெளிக்கிட்டுக் கொண்டார்கள். ஏகாம்பரமும் புறப்பட்டுக்கொண்டு, வேலைக்குச் செல்ல சைக்கிளைத் தள்ளியபடியே தெருவாசல் கதவைத் திறந்து தலையை நீட்டினான்.

"ஏய்! எங்க போறது?"

"வேலைக்குச் சேர்..."

"ஏய் உள்ள போ!" என்று ஏகாம்பரத்தின் பேச்சைக் கேட்காமல் அங்கு நின்ற காக்கிச்சட்டைக்காரனொருவன் அதட்டினான். அந்தளவில் றிவேர்சில் வந்து கொண்டான் ஏகாம்பரம்.

பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளையும் அவர்கள் போக விடவில்லை.

ஸ்கூல் பஸ் அன்று வெறுமனே பட்டணத்தை நோக்கிச் சென்றது.

வியாபாரத்துக்கு மீன் வாங்கவந்த வியாபாரிகளையெல்லாம் அடித்துவிரட்ட அவர்கள் வந்தவழியே திரும்பி குடல் தெறிக்க ஓடினார்கள்.

அன்று பகல் எவர் வீட்டிலுமே அடுப்புப் புகையவில்லை.

"ஏன் இதெல்லாம்? என்னதான் நடந்தது?"

தங்களுக்குள் தாங்களே கேட்டுக் கொண்டார்களே தவிர வெளியே போய் எவராலும் விசாரித்து அறிய முடியவில்லை. இன்னும் சற்று நேரத்தில் எல்லோரது பிதுங்கிய விழிகளும் வெளியே விழுந்துவிடும்போலிருந்தது.

ஆமிற்று.

கிட்டத்தட்ட காலை ஒன்பது மணியிருக்கும். காக்கிச் சட்டைக்காரர்கள் வீடுவீடாக வந்து வீடுகளுக்குள் புகுந்து சல்லடை போட்டுத் தேடத் தொடங்கினார்கள்.

எதைத் தேடுகிறார்கள்? யாரைத் தேடுகிறார்கள்?

நேரம் செல்ல அந்தச் சங்கதி எல்லோருக்கும் தெரியவந்தது.

'இரவு ரோந்து சென்ற இரண்டு ஆமிக்காரர்களைக் காணவில்லையாம்!'

இந்தச் செய்தி வெளியே பரவியதும் மேலும் அந்தக் கிராமம் உருவேறி ஆடத் தொடங்கியது. அதனோடு சேர்த்து பொய்யான வதந்திகளும் பரவிக் கொண்டிருந்தன.

ஈரல் குலையை எல்லோரும் பொத்திப் பிடித்தபடி நிற்க, தேடுதல் நடவடிக்கைகள் யாவும் முடிவடைந்தன.

காக்கிச் சட்டைக்காரர்களெல்லாம் திரும்பிப்போன பின்னால் எல்லோரையும்போல ஏகாம்பரமும் தெருவிற்கு வந்தான்.

"ஆமிக்காரர்கள் இருவருக்கும் என்ன நடந்தது?"

இதுதான் எல்லோரது கேள்விகளும்.

பிற்பகல் நாலு மணிக்குத்தான் எலக்சன் றிசல்ட் போல அந்தக் கேள்விக்கு பதில் வந்தது.

"அந்த ஆமிக்காரர்கள் இருவரும் இராத்திரி முழுக்க எங்கோ போய்ப் படுத்துக் கிடந்துவிட்டு இப்போ கொஞ்சம் முன்பாகத் தான் 'கேம்ப்'க்கு வந்து சேர்ந்தார்களாம்!" என்று ஒருவர் ஏகாம்பரத்திடம் சொல்லி விட்டுச் சென்றார்.

'படுத்துக்கிடந்துவிட்டு' என்ற சொல்லுக்கு அழுத்தம் கொடுத்து அவர் சொல்லியது ஏகாம்பரத்திற்கு ஓரளவு புரிந்தது. பெருமூச்சை விட்டபடி,

"ம.. சும்மா கிடந்த இந்தக் கிராமத்தை கொஞ்ச நேரத்திற்குள் என்ன பாடு படுத்தி விட்டார்கள். லீவில்லாத என்னைப் போன்ற தொழிலாளர்களுக்கு இன்றைக்கு நோபேதான்!" என்று தனக்குத் தானே சொல்லிக் கவலைப்பட்டுக்கொண்டு, அந்த விசயத்தை மனைவி, பிள்ளைகளுக்குச் சொல்லியழ ஏகாம்பரம் சோகத்தோடு வளவிற்குள் நடந்தான்.

**செ. குணரத்தினம்**



படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நயம்

## உயர்ந்த நிலை

## தருவது ரசிகன்



"கூந்தலுக்கு ஏனடி
மலர் சூட்டவில்லை?"

"அவரது நினைவுகளை
மலர்களாக
சூட்டிக் கொண்டேன்!"

"கண்ணுக்கு ஏனடி
மை தீட்டவில்லை?"

"மையல் கொண்டவர்
கண்ணுக்குள் இருக்கிறார்
மை மறைக்குமே அவரை!"

தோழி அவளை
வியப்பால் துளைத்தாள்!

தலைவி அவளை
மேலும் மேலும்
வியப்பில் நனைத்தாள்.

கேளடி தோழி
காதலின் கதையை!

"காதலே நட்பு
காதலே பகை!

காதலே நிம்மதி
காதலே அமளி!

தோழி
விழி அகட்டினாள்;

"குழப்புகிறாயே! இந்த
குழப்பமும் காதலோ?"

தலைவி அவளுக்கு
விளக்கவுரை தந்தாள்:

"நட்பு கொள்வதால்
காதல் வளர்கிறது!

அந்த காதல் வளர்கையில்
மனதை வதைக்கும்
பகையும் ஆகிறது!"

தோழி கேட்டாள்:
"எப்போது பகையாகிறது?"

"தூக்கம் தொலையும்போது!
ஏக்கம் பிறக்கும்போது!"

அடுத்த வினாவை
வீசினாள் தோழி:

"எப்போது நிம்மதி
எப்போது அமளி?"

"காதலரை காணும்போது
நிம்மதி!
காணாதபோது
மனதில் உருவாகும் அமளி!"

"காதலில்
அனுபவங்களுக்கு
பஞ்சமில்லையோ?"
என்றாள் தோழி.

"காதல் என்பது
கரையில்லா கடல்!"

மூழ்க மூழ்க
முத்துத்தான்!
என்றாள் தலைவி!

"மூழ்கியவர்கள்
காணாமலும் போயிருக்கிறார்கள்
ஜாக்கிரதை!"
எச்சரித்தாள் தோழி.

"கடலில்
சுழியும் இருக்கிறது!
உடலை உண்ணும்
சுறாக்களும் இருக்கின்றன!

காதலர்களிலும்
சுறாக்கள் உள்ளனர்!
முத்துக்களும் உள்ளனர்!"

தலைவியின் விளக்கம்
தோழிக்கு இனித்தது!

"சுறா எது?
முத்து எது?
சுழி எங்கே
நல்வழி எங்கே?
கண்டுபிடிப்பது எப்படி?"
என்றாள் தோழி.

"கண்டதும் காதல்
கொள்வதை நிறுத்து!

கனிந்ததா மனது
என்பதை அறிய
நண்பராய் பழகு!

நிதானமாய் இருந்து
அவதானமாய் முடிவு செய்!

வார்த்தைகளை நம்பாதே
வாழும் முறையை கவனி!

பகட்டை விரும்பாதே
பண்பை விரும்பு!

விருப்பு-வெறுப்பில்
ஒத்துப்போகும் விதம்
எவ்வளவு?
உடன்பாடற்ற விதம்
எவ்வளவு?

பழகும் போதே
அறிந்துகொள்!

எழுபது விதம்
ஒத்துப் போனால்
அது உயர்தரக் காதல்!

அறுபது விதம் மட்டும்
ஒத்துப் போனால்
அது மத்திய தரக் காதல்!

ஐம்பது விதமே
உடன்பட்டு நின்றால்
சாதாரணக் காதல்!

அதற்கும் கீழேயானால்
அது நித்திய கண்டக்
காதல்!"

தலைவியின்
காதல் தர விளக்கம்
தோழிக்கு புதுமை!

"உயர்தரக் காதலுக்கு
உதாரணம் கூறு?"
என்று கிளறிவிட்டாள்.

"எனக்கும் பிடித்தது
அவருக்கும் பிடிக்கும்.
அவருக்குப் பிடிக்காதது
எனக்கும் பிடிக்காது"
என்றாள் தலைவி!

குயிலின் பாட்டு
எனக்குப் பிடிக்கும்!
அவரின் செவிக்கும்
அதனைப் பிடிக்கும்!

அதிகாலைக் குளிரில்
குளிக்கப் பிடிக்கும்
அவருக்கும் அந்தக்
குளியல் பிடிக்கும்!

மனதில் பட்டதை
பேசப் பிடிக்கும்!
அப்படித்தான் அவருக்கும்
பேசப் பிடிக்கும்!

தாயக மண்ணை
நேசிக்கப் பிடிக்கும்
அவருக்கும் அதுவே
மூச்சாக இருக்கும்!

சுத்தமாக இருப்பது
பிடிக்கும்!
சத்தமாக படிப்பது
பிடிக்கும்!
எதற்கும் சித்தமாக
இருப்பது பிடிக்கும்!
அத்தனையும் அவருக்கும்
பிடிக்கும், பிடிக்கும்.

"போதும் போதும்"
என்றாள் தோழி.

"காதலைப் பற்றி
ஆராய்சியே
செய்து வைத்திருக்கிறாயே.
உன் காதலர்
என்ன செய்வாரோ?"
என்று சீண்டினாள்.

தலைவியா சளைத்தவள்,
அவள் கூறினாள்:
"என்னை ஆராயவே
அவருக்கு நேரம்
போதாது,
வேறென்ன ஆராய்ச்சி
வேண்டிக் கிடக்கிறது?"

தோழிக்கு வெட்கம்
முகத்தில் பூத்தது:
"போடி பழிகாரி
உனக்கும் சேர்த்து
ஓடிவருகிறது வெட்கம்
எனக்கடி" என்றாள்.

"உலகில் உயர்ந்த
நிலை எது என்று
உரை பார்க்கலாம்?"
என்றாள் தலைவி.

"ஈருடல்
ஒருடலாகும்
சங்கம நிலை"
என்று கண்ணடித்தாள்.

"அது உயர்ந்த நிலையல்ல
ஒருவரை ஒருவர்
உடலாலும் உணர்ந்த
நிலை!"

"அப்படியானால்
எந்த நிலையோ?"
தோழி துருவினாள்.

"நாம் விரும்பும்
காதலர்
நம்மை விரும்பும்
நிலைதான்
உயர்ந்த நிலை!"

"எந்த புகழ் நிலையில்
இருந்தாலென்ன
இந்த காதல் நிலை
இல்லையானால்
உயர்ந்த நிலை இல்லை.
இதுதான் வாழ்க்கையின்
சிறந்த நிலை!"

"இதுவும்
உன் கண்டுபிடிப்போ?"

"கண்டு பிடிப்பல்ல
கண்டு படித்தது.
திருக்குறளில் பிடித்தது."
என்றாள் தலைவி.

அந்தக் குறளையும்
சொன்னாள்:

**"வீழப்படுவார் கெழி இயிலர் தாம் வீழ்வார்
வீழப் படாஅர் எனில்"**

குறள்: 1193, அதிகாரம்: 120.

---

"பெண்களுக்கு ரொம்பப்
பிடித்த விளையாட்டு வீரர்?"
"தெரியாது!"
"ஃப்ளவர்"
-0-
"பயமுறுத்தும் பந்து வீச்சாளர்
யார்?"
"யார்?"
"ஷேன் 'வோர்ன்'"

**பாகிஸ்தான் அணி தொடர் வெற்றிகளைப் பெற்று வருகிறதே? என்ன காரணம்?**

எம். சியாம், கம்பளை.

இக் கேள்விக்கான பதிலை எழுதும் போது பங்களாதேஷ் அணியிடம் பாகிஸ்தான் சுருண்டுவிட்டது! தொடர் வெற்றிகளைக் குவித்த சந்தோசத்தில் எதிரியை குறைத்து மதிப்பிட்டு கோட்டை விட்டுள்ளனர்!

**இலங்கை கிரிக்கெட் அணிக்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளதே?**

எஸ். குமார், கொழும்பு-06.

வெற்றிபெறும்போது விழுந்து விழுந்து பாராட்டியவர்கள், தோல்வி பெறும்போது தட்டிக் கொடுக்காமல், திட்டித் தீர்ப்பது கொடுமை! இம்முறை அணி வெற்றி பெறாது என்பது முன்கூட்டியே ஊகித்திருக்க வேண்டிய விடயம்! அணியின் பலம், பலவீனங்கள் ஏனைய அணிகளால் கரைத்துக் குடிக்கப் பட்டுள்ளன! திறமையான புதியவர்கள் பலரை அணியில் சேர்த்திருந்தால் எதிர்த் தரப்பு வியூகம் வகுப்பது கடினம். ஆனால் அத்தனை புதியவர்கள் இங்கு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே இலங்கை அணியின் தற்போதைய வரையறை இதுதான்! அதனால்தான் இலங்கை அணி இம்முறை ஜெயிப்பது இயலாது என்று கூறிய ஒரே பத்திரிகை முரசுதான்!




பட உதவி: கா.பூ.கந்தசாமி

**சிந்தியா! இலங்கை அணியின் பயிற்சியாளர் மாற்றமும் பின்னடைவுகளுக்கு காரணமா?**

கே.இந்திராணி, பாமன்கடை.

நல்லா கேட்டீர்கள் போங்கள்! இலங்கை அணியின் முன்னாள் பயிற்சியாளர் டேவிட் வட்மோர் இங்கிலாந்து அணிக்கு பயிற்சியாளராக பொறுப்பேற்கவுள்ளார்! இங்கிலாந்தில் அவர் பயிற்றுவித்த 'லங்காசையார்' என்னும் அணிதான் உள்ளூர் அணிகளில் முன்வரிசையில் நின்று பிளந்து கட்டுகிறதாம். அதனைப் பார்த்துவிட்டுத்தான் இங்கிலாந்து அணிக்கே பயிற்சியாளராகப் பிடித்துக் கொண்டனராம்! இப்போது புரிகிறதா, வட்மோரின் அருமை, பெருமை!

**சிறீலங்கா கிரிக்கெட் வீரர்களுக்கு ஆறுதல் கூற யாரும் முன்வரவில்லையே?**

இ.இலியாஸ், கம்பளை.

ஆறுதல் கூறுவது இருக்கட்டும், ஆபத்து நேராமலும் பார்க்க வேண்டும்!

**★ வெளிநாடு செல்லும் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்கு குடியகல்வு சட்டம்தான் காரணம் என்று தொல்லை தவிர்ப்புக் குழு கூறியுள்ளதே?**

ஜெ.பிரேம்குமார், ஹெந்தளை.

அப்படிக் கூறி அரசை தொல்லையில் இருந்து காப்பாற்றியுள்ளது! குடியகல்வு குடிவரவு சட்டமே காரணம் என்றால், வெளிநாடு செல்லும் சிங்கள இளைஞர், யுவதிகளுக்கு அச் சட்டத்தால் பாதிப்பு ஏற்படவில்லையே ஏன்? சட்டம் அல்ல காரணம். தமிழர்கள் அனைவரும் சந்தேகக் கண் கொண்டு நோக்கப்படும் மனப்போக்கே காரணம்! அப்படியான மாற்றாந்தாய் மனப் போக்கு நிலவுவதை மூடி மறைத்துள்ளது தொ.த.குழு!

**★ வெளிநாட்டமைச்சர் கதிர்காமரின் சுற்றுப் பயணம் பற்றி என்ன கூறுகிறீர்?**

கா.ராமநாதன், வவுனியா.

கோசோவா பிரச்சனையின் பின்னர் தமக்கும் கண்டனங்கள் வந்து குவிந்துவிடுமோ என்று ரொம்பத்தான் ஆடிப்போயிருக்கிறது அரசாங்கம்! அதுதான் ஆதரவு தேட ஓடிப்போயிருக்கிறார் அமைச்சர்!

**சிந்தியா! கடிஜோக் கிடைக்குமா?**

செல்வி.கி.அருந்ததி, கொழும்பு-11.

சமீபத்தில் சஞ்சிகை ஒன்றில் என்னைக் கடித்தவை இவை:

"ராமருக்கு ரொம்ப பிடித்த
விளையாட்டு வீரர் யார்?"
"தெரியலையே!"
"'அணில்' கும்ளே."
-0-

**'படித்த முட்டாள்கள்' என்று கூறுவது ஏன்?**

எஸ்.சின்னையா, பதுளை.

ஒரு ரசியக்கதை:

ஊர் ஒன்றின் நடுவே போக்குவரத்துக்கு இடையூறாக ஒரு பாறாங்கல் இருந்தது.

அதனை அகற்ற வேண்டும் என்று ஊர்கூடி முடிவெடுத்தது. அதற்காக பொறியியலாளர்கள் வரவழைக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருத்தர், "இந்தப் பாறாங் கல்லை வெடி வைத்து சிதறடித்து, பின்னர் வண்டிகளில் வெளியேற்றலாம். அதற்கு 600 ரூபிள்கள் செலவாகும்!" என்றார்.

இன்னொருத்தர்- "உளி வைத்து உடைத்து அகற்றலாம். அதற்கு 300 ரூபிள் தேவை!" என்றார்.

இதனையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஒரு விவசாயி, "என் கையில் 100 ரூபிள் தாருங்கள். இதை அகற்றுகிறேன்!" என்று கூறினார்.

அவர் எப்படி அகற்றுகிறார் என்று பார்க்க ஊர் கூடியது. பொறியியலாளர்களும் கேலியாகப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

அவர் இரண்டு உதவியாளர்களது உதவியுடன், பாறாங்கல்லுக்கு அருகே பெரிய குழியை வெட்டினார். பின்னர் அதற்குள் பாறாங்கல்லை உருட்டித் தள்ளி மணலால் மூடினார். பிரச்சனை தீர்ந்தது!

**'வாலி' படத்தில் அஜித்குமாரின் நடிப்பு எப்படி?**

மா.கையூம், மருதானை.

போலியாக சென்று சிம்ரானிடம் பக்கா வில்லத்தனம் காட்டும் இடத்தில் மிரட்டுகிறார்!

**'படையப்பா'வில் ரம்யா கிருஷ்ணனை ஜெயலலிதாவோடு ஒப்பிடுவது சரியா?**

எம்.நிமலன், பண்டாரவளை.

ஒப்பிடுவதாக நினைத்து, பெண்கள் அடுப்படியோடு மட்டும் இருக்க வேண்டும் என்ற தோரணையில் வரும் வசனங்கள் பெண்கள் அமைப்புக்களிடம் பலத்த எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளன!



ஜெயலலிதா

**சிந்தியா! தமிழ்க் கட்சிகள் 'சகோதரப் படுகொலை' என்று கூறுகின்றனவே, அப்படியானால் புலிகள் படையினரை கொல்வதற்கு என்ன விளக்கம்?**

இ.சுந்தரம், யாழ்ப்பாணம்.

விளக்கத்தோடு எப்போது தமிழ்க் கட்சிகள் பேசியிருக்கின்றன. குழப்பத்தோடுதானே பேசி வருகின்றன! ஐக்கிய இலங்கையே தமது கொள்கை என்று கூறும் கட்சிகளுக்கு சிங்கள மக்களும் சகோதரர்கள்தானே. எனவே படையினரும் சகோதரர்கள்தானே! இனிமேல் புலிகள் படையினரை சுட்டாலும், படையினர் புலிகளைச் சுட்டாலும் "சகோதரப் படுகொலைகளை நிறுத்துங்கள்" என்றுதான் இவர்கள் கூறவேண்டும்! குடாநாட்டில் ஈ.பி.டி.பி. பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதையும் தமிழ்க் கட்சிகள் சகோதரப் படுகொலை என்று கண்டித்திருக்க வேண்டும்.

## சிந்தியா பதில்கள்

**இன்றைய சிறுவர்கள் அன்று நாம் இருந்ததைவிட துடுக்காக இருக்கிறார்களே?**

வி.செல்வநிதி, மட்டக்களப்பு.

அப்பா தன் ஆறு வயது மகனுக்கு கணக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

"இன்னும் எத்தனை நாட்களுக்கு நானே உனக்குக் கணக்குப் போட்டுத் தருவது?" என்று சலிப்புடன் கேட்டார் அப்பா.

"இன்னும் நான்கு மாதங்களுக்கு போட்டுத்தாருங்கள் போதும்!" என்றான் சிறுவன்.

"அதற்குப் பிறகு நீயே போட்டு சமாளித்துக் கொள்வாயா?" என்று கேட்டார் தந்தை.

அதற்கு மகன் கூறினான்:

"அப்படியில்லை. இப்போதுள்ள இந்தக் கணக்குகளே உங்களுக்குத் தெரியாமல் திணறுகிறீர்கள். நான்கு மாதங்களுக்குப் பின் வரப் போகும் கணக்குகளை உங்களால் போடவே முடியாது!"

---

## ஸ்போர்ட்ஸ்

## சுப்பர் சிக்ஸ்

உலகக் கோப்பைப் போட்டித் தொடரின் லீக் போட்டிகள் யாவும் முடிவடைந்து 6 அணிகள் சுப்பர் சிக்ஸில் விளையாடத் தகுதி பெற்றுள்ளன. 'ஏ' பிரிவில் தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே, இந்திய அணிகளும் 'பி' பிரிவில் பாகிஸ்தான், நியூஸிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளும் தெரிவாகியுள்ளன.

'ஏ' பிரிவில் ஸிம்பாப்வே 4 புள்ளிகளுடனும், தென்னாபிரிக்கா 2 புள்ளிகளுடனும், 'பி' பிரிவில் பாகிஸ்தான் 4 புள்ளிகளுடனும், நியூஸிலாந்து 2 புள்ளிகளுடனும் சுப்பர் சிக்ஸிற்குள் பிரவேசிக்கின்றன. இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் புள்ளிகள் எதுவுமின்றி சுப்பர் சிக்ஸிற்குள் செல்கின்றன.

'ஏ'பிரிவில் இடம்பெற்றிருந்த இலங்கை, இங்கிலாந்து, கென்யா அணிகளும், 'பி'பிரிவில் மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், ஸ்கொட்லாந்து ஆகிய அணிகளும் தொடர்ந்து விளையாடும் தகுதியை இழந்து விட்டன.

சுப்பர் சிக்ஸ் போட்டிகளில் மோதும் நாடுகளும், போட்டி நடைபெறும் திகதிகளும் இடங்களும் பின்வருமாறு:

ஜூன் 04 இந்தியா எதிர் அவுஸ்திரேலியா
ஜூன் 05 தென்னாபிரிக்கா எதிர் பாகிஸ்தான்
ஜூன் 06 ஸிம்பாப்வே எதிர் நியூஸிலாந்து
ஜூன் 08 இந்தியா எதிர் பாகிஸ்தான்
ஜூன் 09 ஸிம்பாப்வே எதிர் அவுஸ்திரேலியா
ஜூன் 10 தென்னாபிரிக்கா எதிர் நியூஸிலாந்து
ஜூன் 11 ஸிம்பாப்வே எதிர் பாகிஸ்தான்
ஜூன் 12 இந்தியா எதிர் நியூஸிலாந்து
ஜூன் 13 தென்னாபிரிக்கா எதிர் அவுஸ்திரேலியா.

## இவர் நிரப்புவாரா?

மேற்கிந்தியத்தீவு அணியின் விக்கெட் காப்பாளராக இருக்கும் ரிட்லி ஜேக்கப்ஸ் இப்போது அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்குகிறார். மேற்கிந்தியத்தீவுகள் அணியில் 80களில் சிறந்த விக்கெட் காப்பாளராக இருந்தவர் ஜெஃப்ரி டுஜோன்.

மிகச் சிறந்த விக்கெட் காப்பாளராகவும், துடுப்பாட்ட வீரராகவும் விளங்கிய டுஜோனின் ஓய்வுக்குப் பின் மே.இ.தீவு அணியில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட விக்கெட் கீப்பர்கள் வந்து போனார்கள்.

எனினும் டுஜோனின் இடத்தை யாராலும் நிரப்ப முடியவில்லை. இப்போது ஜேக்கப்ஸ் அந்தக் குறையை நிவர்த்தி செய்திருக்கிறார். உலகக் கோப்பை லீக் போட்டிகளில் சிறப்பாக விக்கெட் காப்பாளராகச் செயற்பட்ட ஜேக்கப்ஸ் துடுப்பாட்டத்திலும் நன்கு பிரகாசித்தார்.

நியூஸிலாந்து அணிக்கெதிரான போட்டியின்போது 5 கேட்ச்களைப் பிடித்தார். இதன்மூலம் உலகக் கோப்பைப் போட்டித் தொடரில் 5 பேரை அவுட்டாக்கிய 4வது விக்கெட் காப்பாளர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதற்கு முன் இந்தியாவின் சியட் கிர்மானி, மேற்கிந்தியத்தீவுகளின் ஜிம்மி அடம்ஸ், பாகிஸ்தானின் ரஷீத் லத்தீப் ஆகியோர் 5 பேரை அவுட்டாக்கிய விக்கெட் காப்பாளர்கள்.




பிரையன் லாரா

## கறுப்பின வீரர்



மடோகாஸி-நிடினி

உலகக் கோப்பைப் போட்டியில் தென்னாபிரிக்க அணியில் பங்கேற்க முதன்முறையாக கறுப்பின வீரரான மக்காயா நிடினி தேர்வு செய்யப்பட்டிருந்தார். கடந்த வருடம் டிசம்பர் மாதம் 2ம் திகதி 21 வயதான மடோசாஸி என்ற கல்லூரி மாணவியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக இவர்மீது வழக்குத் தொடரப்பட்டது.

உலகக்கோப்பைப் போட்டிகள் தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன், இவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சில தினங்களுக்கு முன் இந்த வழக்கில் நிடினிக்கு 6 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 03

# தேவாலயம் சென்ற தேவகுமாரன்

ஆண்டவருடைய திருக்குமாரன் யேசுபிரான் மண் மீது குழந்தையாக வந்து ந்த நாளிலிருந்து பெத்லகேம் நகரில் பல துமைகள் நடைபெற்றன. யூதா நாட்டு கள் அனைவரிடமும் புதுத்தெம்பு ஏற் ட்டது. தங்களுடைய மீட்பர் அவதரித்து ட்டார் என்று பெரும்பாலானோர் அறிந் ருந்தமையினால் அவ்வாறான உணர்வு பெற்ற ர்கள் தங்கள் வாழ்க்கை நெறிகளைத் தாமா வே மாற்றிக் கொண்டனர். பலதரப்பட்ட மைகளையும் அதுவரை புரிந்து வந்தவர்கள், த்திய பழக்கங்களைக் கைவிட்டு தூய்மை ாக நடக்க ஆரம்பித்தனர்.

இறைமகனே தங்கள் குழந்தையாக வதரித்துவிட்ட உண்மை தெரிந்து கொண்ட ரியாளும் யோசேப்பும் உள்ளமெலாம் ரித்தவர்களாக மிகமிகக் கவனமாக குழந்தை யேசுவைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து பந்தனர்.

தனக்கு விரோதமாக, யூதாவைத் தன்னுடைய ஆதிக்கத்திலிருந்து அப கரிக்க மற்றுமொரு ஜீவன் பிறந்தி நக்கிறது என்பதை மன்னன் ஏரோது அறிந்திருந்தாரே அன்றி, அக்குழந்தை யார்- எங்கே பிறந்திருக்கிறது என்ற விவரங்களை அறிந்திருக்கவில்லை. ஆகவே பயங்கரமானதொரு சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார். பெத்லகேமிலும் சுற்றுப் புறங்களிலும் புதிதாகப் பிறந்துள்ள குழந்தைகளனைத்தையும் கொன்று விடுமாறு தன்னுடைய தளபதிகளுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் தெருத்தெருவாக-வீடு வீடாகச் சென்று இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஈவிரக்கமின்றிக் கொன்றொழித்தனர். இதனால் எங்கும் அழுகுரலே ஒலித்தது.

ஏற்கனவே பெத்லகேமிலிருந்து யோசேப்பு தன் மனைவி மரியாளையும் குழந்தை இயேசுவையும் அழைத்துக் கொண்டு எகிப்துக்குச் சென்றார். ஏரோது மன்னர் குழந்தைகளைக் கொல்வதற்கான சட்டமியற்று முன்னர் இறைவனின் தூதர் யோசேப்பிடம் கனவில் தோன்றி, "ஏரோது மன்னன் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைத்தையும் கொன்றொழிக்கப் போகிறான். ஆகவே அவனுடைய கொடுமைகள் நீங்கும்வரை நீங்கள் மூவரும் எகிப்து நாட்டுக்குப் போய்த் தங்கியிருந்து விட்டு மன்னர் மாண்டதும் மீண்டும் வாருங்கள்!" என்று கூறியிருந்தார்.

இறை தூதர் கூறியபடி ஏரோது மன்னர் மாண்டதும் எகிப்திலிருந்த யோசேப்புக்கு கனவில் அறிவிக்கப்பட்டது. அவர் மரியாளையும் இயேசு பிரானையும் அழைத்துக்கொண்டு நாடு திரும்பினார். அப்போது யூதாவின் அரசனாக ஏரோதின் மகன் அர்க்கெலா ஆட்சி பீடமேறியிருந்தார். யோசேப்பு இறைவாக்கினை அனுசரித்து இஸ்ரயேல் திரும்பி கலிலியோ பகுதியிலிருந்த நாசரேத்து என்ற ஊருக்குச் சென்று அங்கு வாழ்ந்து வந்தார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இறைமகன் வளர்ந்து வந்தார். சிறு பராயத்தினராயிருந்தும் அவருடைய வார்த்தைகளும் நடவடிக்கைகளும் அவருடைய தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தின. அவரைக் காண்பவர் எவராக இருந்தபோதும், அவரால் கவர்ந்திழுக்கப்பட்டனர். அவருடைய திருவாயிலிருந்து உதிர்க்கப்படும் வார்த்தைகளை ஒவ்வொருவரும் பக்தி சிரத்தையுடன் அவதானித்தனர்.

இயேசு பிரானுக்கு 12 வயதாக இருக்கும் போது, பாஸ்கா பண்டிகையைக் கொண்டாடுவதற்காக யூதா மக்கள் எருசலேமுக்குப் புறப்பட்டார்கள். யோசேப்பும் மரியாளும் இயேசு பிரானையும் அழைத்துக் கொண்டு எருசலேமுக்குப் புறப்பட ஆயத்தமானார்கள்.


யோசேப்பு நாசரேத் நகரில் ஒரு சிறந்த தச்சராகவிருந்தார். எருசலேமுக்குப் புறப்படுவதற்கு முன்னதாக, ஏற்கனவே பொறுப்பேற்றிருந்த மரத்தளபாடங்களை இரவு-பகலாகச் செய்து முடிக்க வேண்டியிருந்தது. இப்பணியில் தந்தைக்கு-தனயனான இயேசு உதவிகளைச் செய்தார். இவ்வாறு தச்சுத் தொழிலில் தந்தைக்கு நிகராக இயேசு செய்த வேலைகள் மிகச் சிறப்பாக அமைந்தன. இதனைக் க்ண்ட பலரும் சிறுவனான இயேசுவின் கைத்திறனின் நேர்த்தியைக் கண்டு மெச்சினர்.

தந்தையும் மகனும் குறிப்பிட்ட காலத்துக்குள் சகல பணிகளையும் முடித்து உரியவர்களிடம் சேர்த்துவிட்டனர்.

இதன்பின்னர் மூவரும் ஏனையோருடன் சேர்ந்து எருசலேம் நோக்கிப் பயணம் மேற்கொண்டனர்.

### பாஸ்கா பண்டிகை

எகிப்து நாட்டில் இஸ்ரயேல் மக்கள் நீண்ட காலமாக அடிமைகளாகவிருந்து இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மோசேயால் விடுதலையடைந்து, இறைவனால் அம்மக்களுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட கானான் தேசத்துக்கு வந்து சேர்ந்தனர். மோசேயால் எகிப்திலிருந்து வெளியேறிய அத்தினத்தை ஆண்டு தோறும் நினைவுகூரும் முகமாகவே பாஸ்கா பண்டிகை கொண்டாடப்படுகிறது.



**இராஜகுமாரன்**

பாஸ்கா கொண்டாட்டத்துக்காக பல நாடுகளிலிருந்தும் யூதா யாத்திரீகர்கள் வந்து சேர்ந்தமையினால் எருசலேம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பியிருந்தது.

ஒரு வாரகாலம் எருசலேமில் தங்கியிருந்து விட்டு யாத்திரீகர்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பினர். யோசேப்பும் மரியாளும் அம்மக்கள் கூட்டத்துடன் நாசரேத்து நோக்கித் திரும்பினர். அவர்கள் இடையில் வைத்துத்தான், இயேசு தங்களுடன் திரும்பி வரவில்லை என்று அறிந்து பதற்றமடைந்தனர். ஆயிரக்கணக்காகத் திரும்பிக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தில் இயேசுவைத் தேடினார்கள். அவரை அங்கு எங்குமே காணவில்லை. கலக்க மடைந்தவர்களாகி, இயேசு எருசலேமிலேயே தங்கிவிட்டார் என்று முடிவெடுத்தனர். இருவரும் மீண்டும் எருசலேம் நோக்கி நடந்தனர்.

### ஆலயத்தில் இயேசு

ஆலயத்தை அடைந்தபோது அங்கு ஒரு பெரும் கூட்டத்தின் நடுநாயகமாக இயேசு பிரான் இருந்த வண்ணம் உரையாடிக் கொண்டிருந்தார். அக் கூட்டத்தில் வயதான அறிவாளிகளும் ஏனையோரும் நிரம்பியிருந்தனர். இயேசுவின் வார்த்தைகளில் மயங்கியவர்களாகவே அவர்கள் காணப்பட்டனர்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு மரியாளும் யோசேப்பும் ஓடிச்சென்று இயேசுவை அணைத்துக் கொண்டு அழுதனர்.

"மகனே! எங்களுக்கு இப்படிச் செய்யலாமா? உன்னைக் காணாது நாங்கள் பட்டபாடு எத்தகையது என்று தெரியுமா?" என்று மரியாள இயேசுவிடம் கேட்டார்.

"தாயே! எனது தந்தையின் இல்லத்தில் தானே நான் இருக்கிறேன். இதற்காக நீங்கள் ஏன் கவலைப்படவேண்டும்?" என்று இயேசு கேட்டபோது மரியாளும் யோசேப்பும் மட்டுமல்லாது அங்கு திரண்டிருந்த அனைவருமே திகைப்படைந்தனர்.

ஒருவாறு இயேசுவை சமாதானப்படுத்திய பின்னர் அவரை அழைத்துக் கொண்டு பெற்றார் நாசரேத்துக்குத் திரும்பினர்.

இக் கால கட்டத்தில் யோவான் யூதா நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று தெய்வீக போதனைகளைச் செய்து வந்தார். யோவானும் தேவகிருபையால் பிறந்தவரே. ஆசாரியரான சகரியாவுக்கும் எலிசபேத்துக்கும் பிறந்தவரே இப்பொழுது இறைவாக்குரைஞராக நாடெங்கும், பரலோகராச்சியம் பூமியிலும் வரப்போவதாகக்கூறி அதற்காக மக்களனைவரும் மனம் திரும்ப வேண்டும் என்று பிரசாரம் செய்து வந்தார். அவ்வாறு மனம் திரும்பி அவரிடம் செல்பவர்களை யோர்தான் நதிக் கரைக்கு அழைத்துச் சென்று ஞானஸ்நானம் கொடுத்தார்.

### ஞானஸ்நானம்

யோவான் ஒட்டக ரோமத்தாலான உடையை அணிந்திருந்தார். அரையில் ஒரு வார்க்கச்சையையும் கட்டிக் கொண்டார். வெட்டுக்கிளிகளையும் தேனையும்தான் அவர் உணவாக உட்கொண்டார். தேவகுமாரனாகிய இயேசு பிரான் பூவுலகிலே அவதரித்து பரலோக ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கப் போகிறார் என்ற அர்த்தத்திலேயே யோவான் போதித்து, அவருடைய வருகைக்காக ஒவ்வொருவரும் தம்மைத்தாமே தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மக்களிடம் கூறிவந்தார்.

யோர்தான் நதிக்கரையில் ஒருநாள் யோவான், தன்னிடம் வந்த மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருக்கும் போது, அவர் முன்னே ஒர் உருவம் ஞானஸ்நானம் பெறுவதற்காக வந்து நின்றது. அவ்வுருவைக் கண்டதும் யோவான் திகைப்படைந்தார். யோர்தான் நதியில் கால்களைப் புதைத்து நின்றவர் இயேசு பிரானே.

"தங்களுடைய வருகைக்காகவே பாவிகளாகிய பாமரர்களை நான் ஞானஸ்நானம் கொடுத்து பரிசுத்தம் செய்து கொண்டிருக்கிறேன், எனக்கே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டிய நிலையிலிருக்க வேண்டிய தாங்களே என்னிடம் ஸ்நானம் பெற வரலாமா?" என்று யோவான் தளதளத்த குரலில் கேட்டார்.

இயேசுபிரான் "இத்தகைய எல்லா வழிமுறைகளையும் கடைப்பிடித்தேயாக வேண்டியது தான் என் நிலைப்பாடு, ஆகவே எதுவித தயக்கமுமின்றி எனக்கும் ஞானஸ்நானம் செய்விக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்!" என்றார்.

யோவானும் அவரின் கோரிக்கையை ஏற்று இயேசுபெருமானுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். ஞானஸ்நானம் பெற்று நதியை விட்டு கரையேறியதும், தேவ ஆவியானது வானிலிருந்து ஒரு புறா வடிவில் இறங்கி இயேசு பிரானின் தலை உச்சியில் வந்தமர்ந்தது, இதனை அங்கு குழுமியிருந்த மக்களனைவரும் கண்டனர்.

வானத்திலிருந்து அப்போது அசரீரியாக ஒலி ஒன்று கேட்டது." "நீர் எனது நேசகுமாரன் உன்னில் பிரியமாய் இருக்கிறேன்!" என்ற வார்த்தைகளே எழுந்தன. இதனைத் தொடர்ந்து வனாந்தரத்துக்குப் போகுமாறு இயேசுபிரானுக்கு தேவவாக்கு அருளப்பட்டது. இதன்படி இயேசுபிரான் கானகம் சென்றார். அங்கு ஊனுறக்கமின்றி நாற்பது நாட்கள் கடும் தவமியற்றினார். அக்கால கட்டத்தில் கடவுளின் பூரண சக்தியையும் பெற்றார். தேவதூதர்களே இயேசு பிரானுக்கு பணிவிடைகள் புரிந்தனர்.

(தொடர்ந்து வரும்)

---

**திருமறை 61 விடை** ☛ ஏரோது.

**பரிசு பெறுவோர்:**

1. செல்வன் எம்.சதீஷன், நு/கடவளை தமிழ் மகாவித்தியாலயம், கினிகத்தேனை.
2. பொ.புஸ்பலோஜினி, அம்பாறையன் பிள்ளையார் கோயில் வீதி, காரைதீவு-04.
3. பாத்திமா றினோஸா, காசல் ஒழுங்கை, கண்டி.
4. ரொஹான், மாவுஸ்ஸா பஜார், மடுல்கெல.
5. ஏ.எச்.சஹீதுள்ளா, 285/ர். முள்ளிப் பொத்தானை.

**திருமறை 03** வினா (பு.ஆ):- யோவானின் பெற்றாரின் பெயர் என்ன?

ஜூன்.12 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை பு.ஆ.03—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

# கொள்கை உறுதி




# கிரிக்கெட் காய்ச்சல்







இது கிரிக்கெட் காய்ச்சல் பரவியுள்ள நேரம். கா.பூ. கந்தசாமியாருக்கும் காய்ச்சல் தொற்றிக்கொண்டது.

**காதிலை பூ கந்தசாமி**



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)

www.padippakam.com





அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331





ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# சீறும் கப்டன்



பாகிஸ்தான் அணியின் உத்வேகம் எதிரணிகளை இம்முறை திணறடிக்கிறது.

வாசிம் அக்ரம் தலைமையில் அணி வெற்றி நடைபோடுகிறது. உலகக் கிண்ணலீக் போட்டிகளில் வெற்றிகளை குவித்திருக்கிறது. உலகக் கிண்ணத்தை இம்முறை கைப்பற்றும் வெறியுடன் போராடுகிறார்கள்.

கப்டன் அக்ரமுக்கு 32 வயது. பாகிஸ்தான் லாகூரில் பிறந்தவர். இடது கை வேகப் பந்து வீச்சாளர்.

இம்முறை உலகக் கோப்பைப் போட்டிக்கு முன்னர் 258 போட்டிகளில் விளையாடி 367 விக்கெட்டுக்களை சாய்த்திருந்தார்.

சகலதுறை ஆட்டக்காரரான அக்ரம் துடுப்பாட்டத்தில் 2603 ஓட்டங்களை குவித்திருந்தார்.

தற்போது அவரது பந்து வீச்சும், துடுப்பாட்டமும் நல்ல தரத்தில் உள்ளன. வேகமான 'ஃபோர்' விறுவிறுப்பான 'சிக்ஸர்' [illegible] பந்துகளை பதம் பார்க்கிறார்.

அக்ரமின் கட்-அவுட்டுகளுடன் ரசிகர்கள் பார்வையாளர் வரிசையில் நின்று ஆர்ப்பரிக்கிறார்கள்.

ஆட்டத்தின்போது தவறுவிடும் வீரர்களை மைதானத்தில் வைத்தே வார்த்தைகளால் பிய்த்து உதறுகிறார். அவர்கள் நன்றாக செயற்பட்டால் மனம் திறந்து பாராட்டுகிறார்.

இந்தக் கோபக்கார கப்டன்மீது கடந்த காலத்தில் இழிசொற்கள் வீசப்பட்டன. பணத்தை வாங்கிக்கொண்டு போட்டிகளில் துரோகம் செய்ததாக குற்றச் சாட்டுக்கள் பாய்ந்தன. கிரிக்கெட்டிலிருந்து விலகக்கூட அக்ரம் முடிவு செய்திருந்தார். ஆனால் இன்று, விசுவரூபமெடுத்து உலகக் கிண்ணத்துக்கு குறி வைத்திருக்கிறார்.

# தடை




இங்கிலாந்து ஆடுகளங்கள் பொதுவாக வேகப் பந்து வீச்சுக்கு ஏற்றவை.

அப்படியிருந்தும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முரளிதரன் தனது சுழற்பந்தால் ஒன்பது விக்கெட்டுக்களை சரித்தது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

உலகக் கிண்ணப் போட்டியிலும் இங்கிலாந்து ஆடுகளங்களில் முரளியின் பந்து திருப்பங்களை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அப்படி எந்த ஆச்சரியமும் நிகழவில்லை. இங்கிலாந்தில் நடந்துள்ள உலகக் கிண்ணப் போட்டிகளில் சுழற்பந்து வீச்சாளர்கள் பிரகாசித்தது கிடையாது. இம்முறை போட்டிகளிலும் இதுவரை அப்படித்தான் இருக்கிறது.

27 வயதான முரளிதரன் பல தடைகளைத் தாண்டி தனது திறமையை நிரூபித்து வந்திருக்கிறார். இம்முறை உ.கி. போட்டிகளுக்கு முன்பு 110 போட்டிகளில் விளையாடி 151 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். உ.கி.போட்டியின் படுதோல்வி ஏற்படுத்தியுள்ள மனத்தடையையும் மீறி முரளி பிரகாசிப்பார்.

# வண்ணக் கிரிக்கெட்



கொடிகளும், உடைகளும் முறையே: சிம்பாப்வே, இலங்கை, இங்கிலாந்து, பாகிஸ்தான், மே.இ.தீவுகள், கென்யா, தென்னாபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பங்களாதேஷ், ஸ்கொட்லாந்து.

உலகக் கோப்பை போட்டிகளுக்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட உடைகளே இவை.

உலகக் கிண்ணப் போட்டியின் ஆரம்ப காலத்தில் வெள்ளை உடைகளுடன் தான் வீரர்கள் [illegible]. 1992இல் நடைபெற்ற ஐந்தாவது உலகக் கிண்ணப் போட்டியில்தான் முதன் முதலில் வர்ண ஆடைகளுடன் வீரர்கள் பங்கேற்றனர். இரவு பகல் ஆட்டங்களுக்கும் வர்ண ஆடைகளே சிறப்பானவை.

இந்த ஆடைகளுக்கு ரசிகர்கள் மத்தியிலும் ஏகப்பட்ட மவுசு. ஏராளமாக உற்பத்தியாகி விற்பனையாகியுள்ளன.

# திணை




முட்டு உராய்வால் ஸ்ரீநாத்தின் எதிர்காலமே அஸ்தமித்து விட்டதாக சிலர் கருதினார்கள்.

அவரோ மறுபடியும் களம் புகுந்து தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறார்.

29 வயதான ஸ்ரீநாத் இல்லையானால் துவக்க பந்து வீச்சில் இந்திய அணி சோபிக்க முடியாது.

உ.கி.போட்டிகளுக்கு முன்பு 156 போட்டிகளில் விளையாடி 216 விக்கெட்டுக்களை கொய்திருந்தார். துடுப்பாட்டத்திலும் சில தருணங்களில் அணிக்கு கைகொடுத்திருக்கிறார். 156 போட்டிகளில் 649 ஓட்டங்களை சேகரித்திருக்கிறார்.

இலங்கை அணியின் சனத் ஜெயசூர்யாவுக்கு பிரதம வில்லன் இவர்தான். இந்திய அணியுடன் ஆடியபோது, ஸ்ரீநாத்தின் பந்து வீச்சிலேயே அதிகமுறை ஆட்டமிழந்தார் சனத். இம்முறை உலகக் கிண்ண லீக்போட்டியிலும் சனத்தை 'ரன் அவுட்' செய்து திருப்பி அனுப்பியதும் ஸ்ரீநாத்தான்.

'இந்திய அணியின் மிகவும் நம்பகமான இந்தப் பந்துவீச்சாளரை அதிகம் பயன்படுத்துகிறார்கள். அதனால்தான் முட்டு வலிப் பிரச்சனை ஏற்படுகிறது. இவருக்கு போதிய ஓய்வு கொடுக்க வேண்டும். முக்கிய தருணங்களில் உபயோகிக்க வேண்டும்' என்பது விமர்சகர்களது அபிப்பிராயம்.

ஆனால் இந்திய அணிக்கு இவரை நம்புவதைத் தவிர வேறு வழியில்லை. சம்பத்திய உ.கி.போட்டிகளில் அகர்கார் ஏமாற்றிவிட்டதால், ஸ்ரீநாத்தின் தோளில் பாரம் அதிகமாகியுள்ளது. இந்நிலையில் தோள் முட்டு வலி தீர்வது எப்படி?


அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில்

'கார்த்திகன் கோல் டெலிபோன் காட்'

இலங்கைக்கு ஒரு நிமிடத்திற்கு 56 சதம் மட்டும்!


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### பிரவீன்-03.6.99

பனையைச் சேர்ந்த அருச்சுணன், ஏழாலையைச் சேர்ந்த தயாமதி தம்பதியினரின் செல்வப்புதல்வன் பிரவீன் தனது முதலாவது பிறந்ததினத்தை லண்டன் வோல் தம்ஸ்ரோ என்ற இடத்தில் 03.06.99 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, அப்பப்பா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார் அண்ணன்மார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வன் பிரவீனை எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: திரு. திருமதி அருச்சுணன்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible] நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஜூன் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்